Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 68 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 01 2024



# வீரவணக்கம்



ஈழ மண்ணில்
28.04.1969



இந்தியச் சிறையில்
28.02.2024

## சாந்தன்
## தில்லையம்பலம் சுதேந்திரராஜா

உடுப்பிட்டி, யாழ்ப்பாணம் – தமிழீழம்

செய்யாத குற்றத்திற்காக 32 ஆண்டுகள்
தண்டனை அனுபவித்து சாகடிக்கப்பட்ட
சாந்தன்
அவர்களுக்கு எமது கண்ணீர் வணக்கம்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

வெள்ளி அச்சுப் பதிப்பக நூல் வெளியீட்டாளர்கள்
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
4775 Yarmarok Crt, Mississauga Ontario L5R 0A6.
உங்களது தேவையே எங்களது சேவை
மேலதிக தொடர்புகளுக்கு : முகுந்தன் சிவதாசன்
Contact : Muhunthan (437) 423 - 5460
silverprinthouse@gmail.com

RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage RAISING YOUR VALUE
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்
Tharuma Somasunderampillai
Sales Representative
Dir: 416.268.6098
Bus: 416.287.2222
Fax: 416.282.4488
Email: tharuma.soma@gmail.com
Web: www.tharuma.com
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9
* Independently Owned and Operated

BUY | SELL | LEASE | INVEST
வீடு வாங்கணுமா விற்கணுமா
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
VS LOVE WHERE YOU LIVE
VARAN SUBRAMANIAM
SALES REPRESENTATIVE
647-295-5672
varanrealtor@gmail.com

விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

2024 உலக வணிகம்
Ulaga VANIKAM
ULAGA VANIKAM உலக வணிகம்
Tel: 437 345 4203
www.ulagavanikam.ca
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**நாம்
தமிழீழப் பெண் சமூகம்
மத்தியில் ஒரு பெரிய
புரட்சியை
நிகழ்த்தியிருக்கின்றோம்;
தமிழர் வரலாற்றிலேயே
நடைபெறாத புரட்சி
ஒன்று தமிழீழத்தில்
நடைபெற்றிருக்கிறது.**






# சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வாழ்வினைக் கரைத்து வீரம் விதைத்தவன்

# லெப். கேணல் விசு [அருமை]

புலனாய்வுத்துறை தாக்குதல் படையணித் தளபதி
லெப். கேணல் விசு / அருமை
கனகராசா குலேந்திரன்
மல்லாகம், யாழ்ப்பாணம்.

1987 ஆம் ஆண்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்தியப் படை வருகை என பல வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்ட ஆண்டு. இருப்பைப் பாதுகாத்தல், தலைமையைப் பாதுகாத்தல், கட்டமைப்பைப் பாதுகாத்தல், வளங்களைப் பாதுகாத்தல் அதே நேரம் எதிரியுடன் சண்டையிடல். சுருங்கக் கூறின் 'கண்ணையும் பாதுகாக்க வேண்டும், இமையையும் பாதுகாக்க வேண்டும்' அதேநேரம் பார்க்கவும் வேண்டும்.

'கல்மடு', 'இராமநாதபுரம்' கிளிநொச்சி மாவட்டத்தின் சிறு ஊர்கள் அவை. காட்டுப்புறங்களை ஒரு பகுதியாகவும், நீர்த் தேக்கங்கள், மக்கள் குடியிருப்புக்களை மறுபகுதியாகவும் உள்ளடக்கிய புதிய வரவு அற்ற அம்மக்களின் வாழ்க்கைக்கான 'ஆதாரம்' நிறைந்த அந்தக் கிராமங்கள். புலிகளின் வரவினால் புளங்காகிதம் அடைந்தன. புலிகளை "எங்கட பொடியள்" என ஒருபகுதி மக்களும், "பெரிசு" என இன்னொரு பகுதி மக்களும் உரிமையுடன் அழைத்தனர். விசுவுக்கு அந்த ஊர் மக்கள் வைத்த பெயர் 'சின்ன விசு'.

புலிகளின் அசைவுகளை எப்படியோ இந்தியப் படையினர் மோப்பம் பிடித்துவிடுவர். இருப்பினும் இந்தியப் படையினருக்கு 'தண்ணி காட்டிவிட்டு' காட்டுக்குள் உள்ள தமது அணிகளுக்கு உணவுப் பொருட்களையும், வேறு தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்லும் ஒருசில போராளிகளுள் விசுவும் ஒருவன்.

ஒரு தொகுதிப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டுமெனில் இந்தியப்படையினருடன் பல சண்டைகள் பிடித்தே செல்ல வேண்டியிருக்கும். சிலவேளை பல சண்டைகளுக்குப் பிறகு அப்பொருட்களை இழக்க வேண்டியும் இருக்கும். அதற்கும் மேலாக பல உயிர்களை விலையாகக் கொடுக்கவும் நேரிடும்.

இப்படித்தான் ஒருநாள் நெத்தலியாற்றுக் கரையிலிருந்து அறுபது பேர் கொண்ட பெண்கள் அணி ஒன்றிற்கு உணவுப் பொருட்கள் தீரும் நிலையில் உள்ளது என விசுவுக்குத் தகவல் வந்தது. இராமநாதபுரத்திலுள்ள ஆதரவாளர் ஒருவரின் மாட்டு வண்டியைப் பெற்றுக் கொண்டு ஜேம்சுடனும் இன்னொரு போராளியுடனும் சேர்ந்து உணவுப் பொருட்களை வண்டியில் ஏற்றிக் காட்டுவழியே நீண்ட தூரம் பயணித்து, பெண் போராளிகளின் தளத்தை அண்மித்த போது, இந்தியப் படையினர் அம்முகாமைத் தாக்க காட்டுக்குள் இறங்கிவிட்டனர் என அறிந்த பெண் போராளிகள் தமது தளத்தினை கைவிட்டுச் சென்றிருந்தனர். அத்தளத்தினுள் பிரவேசித்தவர்களுக்கு விடயம் விளங்கிவிட்டது. கிணற்றடிவரை சென்ற விசுவுக்கு, மரம் செடிகளின் முறிவு ஒலியும், குரங்குகளின் கத்தல் ஒலியும் நிகழப்போகின்ற அனர்த்தத்தை உணர்த்தி நின்றன. நிலைமையை விளங்கிக் கொண்டு சுதாகரித்துக் கொண்ட விசு "ஜேம்ஸ் வாற ஜுனியஸ் பொடியள் பசியோட வருவாங்கள். உடன் எடுத்துவந்த பொருட்களை இறக்கி சமைக்கத் தொடங்குங்கோ". விசுவின் பேச்சிலிருந்த மறைபொருளைத் தெளிவாக விளங்கிக் கொண்ட ஜேம்ஸ் வண்டிலை நோக்கி நடக்கத் தொடங்கினான். பின் மூவரும் வண்டிலை வந்தடைந்தனர். இவர்களின் நகர்வினைக் கண்காணித்துக் கொண்டிருந்த இந்தியப் படையினர் வண்டிலுக்குப் பின்னால் பின்தொடரத் தொடங்கினர். இதனை மூவரும் நன்கறிந்தனர். பல துன்பங்களுக்கு மத்தியில் எடுத்து வந்த இவ் உணவுப் பொருட்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற விருப்பு அவர்களுக்குக் "எங்களைப் பின்தொடருறாங்கள் மச்சான், கடைசிவரைக்கும் இப்ப எங்களைச் சுடமாட்டாங்கள். எங்கட தளத்தை அறிவதுதான் அவங்களின்ரை நோக்கம்" விசு கூறியபோது, "வண்டிலை விட்டிட்டு இறங்கித் தப்பி ஓடுவம்" ஜேம்ஸ் கூறினான். மற்றப் போராளியும் அதற்கு ஆமோதிக்க வண்டில் நிறுத்தப்பட்டது. இந்தியப் படையினரின் துப்பாக்கிகள் 'சடசட'க்கத் தொடங்கின. துப்பாக்கியால் சுட்டபடியே அவர்கள் மூவரும் இறங்கி ஒரு பக்கமாக ஓடினர். இடையில் விசு காட்டுக்குள் பாதை மாறிவிட்டான். ஜேம்சும் மற்றப்போராளியும் தொட்டியடியில் ஏறியபோது விசுவைக் காணவில்லை. இரண்டு நாட்களின் பின்னர் முல்லைத்தீவுக் காட்டுப்புறத்தில் உள்ள சிறு ஊர் ஒன்றில் தனியாக விசு ஏறினான். பின் அவர்கள் ஒன்று சேர்ந்தபோது "உங்களை நம்ப ஏலாது மச்சான். என்ர G - 3 துப்பாக்கியைத்தான் நம்ப வேணும்" எனத் தனது துப்பாக்கியை முத்தமிட்டபடியே கூறினான் விசு. "சும்மா இரு மச்சான் மாடுகளை அவிட்டுவிட்டவங்கள் மாடு போற திசையை நோக்கிப் பின்னாலேயே போய் எங்களுக்கு மாடும் வண்டிலும் தந்தவங்களைப் பிடிச்சிட்டாங்களாம். இனி சனம் என்னத்தைத் தந்தாலும் மாடுகளை மட்டும் தராது" ஜேம்ஸ் கூறினான். "அதுக்கென்ன மணிகளுக்குப் பதிலாக இனி சயனைட்டைக் கட்டிவிடுவம்" விசு கூறியபோது அந்த இடம் சிரிப்பொலியால் நிறைந்திருந்தது.

## வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: லெப். கேணல் விசு (அருமை)
நிலையான பெயர் : நடராசா குகேந்திரன்
வீரப்பிறப்பு: 23.03.1966
நிலையான முகவரி: நீலியம்பனை, மல்லாகம், யாழ்ப்பாணம்
நிகழ்வு: 27.09.1998 அன்று கிளிநொச்சியில் அமைந்திருந்த சிறீலங்கா படைத்தளம் மீதான ஓயாத அலைகள் 02 நடவடிக்கையின் போது வீரச்சாவு
மேலதிக விபரம்: ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு நாள், 1988ம் ஆண்டு வைகாசி மாதம் பழைய கண்டி வீதியினை இணைக்கும் கொக்காவில் சந்தியில் இந்தியப் படையினர் பதுங்கித் தாக்கியதில் புலிவீரன் ஒருவனுக்கு கால் முறிந்துவிட்டது. வீதிவழியே 'அம்புலன்ஸ்' வண்டியில் எடுத்துச் செல்ல முடியுமா என்ன? இல்லையே. காட்டுவழியேதான் பாதை முறிக்க வேண்டும். கால் முறிந்தவனுக்கு உடனடிச் சிகிச்சையளிப்பதாயின் வட்டக்கச்சி செல்ல வேண்டும். போகும் வழியில் இன்னொருவனுக்குக்கூட இன்னொரு இடத்தில் 'கால் முறியலாம்'. எப்படியும் போய்ச் சேர்ந்தாலும் மருத்துவரை அழைத்து வருவதென்பது கடினமான காரியம். ஒவ்வொரு உள்ளூர் மருத்துவரையும் இந்தியப்படையினர் தமது கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

தோள் கொடுத்தவனை, சிலவேளை உயிர் தந்தவனை, தப்பியோட வழியிருந்தும் நண்பனுக்காகச் சண்டையிட்டவனை, உணவு தனக்குக் கிடைக்கும் வேளை நண்பனுக்காக ஒருபிடி சோற்றை காற்சட்டைப் பையினுள் வைத்து எடுத்து வருபவனை, அந்தப் புலிவீரனை விட்டுச் செல்ல முடியுமா என்ன? "மச்சான் இவனுடன் நான் நிக்கிறன். நீங்கள் போய் 'டொக்ரர்' யாரையாவது கூட்டிக்கொண்டு வாங்கோ" என விசு கூறியபோது அவனின் G - 3 துப்பாக்கியையும், அவனையும் நம்பி காயப்பட்ட போராளியை அவனுடன் விட்டுவிட்டுச் சக தோழர்கள் காட்டுவழியே நகர்ந்தனர்.

யாரோ பாதகன் எதிரிக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். அன்று அந்த ஊர் முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டது... விசுவும், காயப்பட்ட போராளியும் சிறு பற்றையொன்றினுள் சருகுகளால் தம்மை உருமறைத்த படியே அன்று முழுவதும் கிடந்தனர். இந்தியப் படையினரின் 'அந்த மணம்' மூக்கை அரித்தது. 'பீடிப்புகை' உணவு, நீர் இன்றியிருந்த வயிற்றைக் குமட்டியது. "அண்ணை என்னாலை இனியும் வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்க ஏலாமல் கிடக்கு". விசுவின் காதோரம் காயப்பட்ட போராளி கூறியபோது, விசு அவனின் 'சயனைட்' குப்பியை வேண்டித் தன்னுடன் வைத்துக் கொண்டான். "என்ர G -3 யில இருக்கிற ரவைகள் முடிஞ்சபிறகு நீ வேணுமெண்டா குப்பியைக் கடி". விசு கூறினான்.

இந்தியப் படையின் கண்களில் அவர்கள் அகப்படாமல் போகவே தமது சுற்றிவளைப்பைக் கைவிட்டு இரவே இந்தியப் படையினர் தளம் திரும்பிவிட்டனர். இரவானதால் நிலமை அறிவதில் சிக்கல்கள் எழவே, காலையானதும் மருத்துவருடன் வந்த சகபோராளிகளுக்கு முழுநாளும் அவர்கள் பட்ட வேதனைகளை அவர்களின் கண்கள் சொல்லி நின்றன.

இக்காலப்பகுதியில் விசுவுடன் தளத்தில் நின்ற ஜேம்ஸ் அவர்கள் நினைவு கூறுகையில், "கடலில் நீந்தக் கற்றுக்கொண்டிருக்கும் போது ஒரு படகு எமக்கு அருகால் வந்துகொண்டிருக்குமானால் எமக்கு எவ்வளவு பாதுகாப்பு உணர்வு ஏற்படுமோ அப்படியோர் உணர்வு, விசு எம்முடன் கூடவந்தால் ஏற்படும்... நாங்கள் எல்லோரும் நல்லாச் சண்டை பிடிப்பம். ஆனால் எங்களுக்கு எப்ப வாய்க்குள் சயனைட் குப்பியை வைக்கலாம் என்ற எண்ணம்தான் அலைகளாய் மனதில் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால் விவேகத்துடனும், கூடுதலான சகிப்புத் தன்மையுடனும் தன்னையும் துப்பாக்கியையும் நம்பி, 'வெல்வதற்காகவே சண்டையிடுகின்றோம்' என்ற உணர்வுடன் சண்டையிட்டுக்கொண்டிருப்பார் விசு" என்றார் மெல்லிய சிரிப்புடன்.

அந்த ஊர்களில் புலிகள் அணியின் வரவு என்பதும், நடவடிக்கைகள் என்பவையும் புதியவர்கள் பலரை போராளிகளாகப்

புலிகள் அமைப்பில் இணைத்தன. ஓர் இடத்தில் குறைந்தது ஐந்து நாட்கள் இருந்தாலே இந்தியப்படைகள் மோப்பம் பிடித்து விடுவர்.

இருந்தும் முப்பது புதியவர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் கொடுத்துப் போராளிகளாக்கும் பொறுப்பு விசுவிடம் வழங்கப் பட்டது. ஆயுதப்பயிற்சி, அரசியல் கல்வி, அடிப்படைத்தேவைகள் எல்லாமே விசுவின் கைகளில்தான்.

புதியவர்களுக்கு பயிற்சி முடியும் காலம் நெருங்கிக் கொண் டிருந்தது. “காட்டுக்குள்ள மீண்டும் இந்தியப் படைகள் இறங்கப் போறாங்களாம்” விரைவாகச் செய்தி ஒன்று கிடைத்தது. “ஒரு தளத்தினை அமைப்பதென்பது அவ்வளவு இலகுவான பணியா? இல்லையே. கிணற்றில் இருந்து மண்சுமந்த நோவே முள்ளந்தண்டிலிருந்து இன்னமும் போகவில்லை. காட்டுக்குள் பொருட்களைச் சுமந்தெடுத்த சுமைகள் சுகமானதல்ல... எப்படி யும் எதிரியின் நகர்வைத் தடுக்க வேண்டும். அல்லது எதிரி எம்மை அண்மிப்பதையாவது தெரிந்துகொள்ள வேண்டும்...” சிந்தித்த விசுவுக்கு மணலாற்றுக் காட்டிலிருந்து வந்த ‘ஜொனி’ மிதிவெடிகள் நினைவுக்குவர 1988 ஆவணி 26 அன்று புதிய போராளிகள் சிலரை அழைத்து, “மிதிவெடிகளை எடுத்துக் கொண்டு வாங்கோ” என்று கூறியவன் தன் புதிய போராளி அணியுடன் ‘எதிரி வரலாம்’ என எதிர்பார்த்த காட்டின் பாதை களினூடே குறிப்பிட்ட தூரம்வரை நடந்திருந்தான். “உங்களுக் குப் பயிற்சியாகவும் இருக்கட்டும். அதேநேரம் எதிரிக்கு நீங்கள் வைக்கின்ற முதற் பொறியாகவும் இருக்கட்டும்” என புதிய போராளிகளிடம் கூறிய விசு, மிதிவெடி வைக்கப்பட்டுக் கொண் டிருந்தவனை அருகில் நின்று அவதானித்துக் கொண்டிருந் தான். மிதிவெடி ஒன்றினைப் புதைத்த சிவம் அதனை உரு மறைத்துவிட்டு எழுந்தபோது மரவேர் ஒன்றில் கால் இடறுப்பட தான் மறைத்து வைத்த மிதிவெடியின் மேலேயே தவறுதலாக விழ... “நான் ஓர் ஆபத்தான நண்பன்” என்பதை மிதிவெடி சொல்லியது. மிதிவெடியின் மேல் சிவம் விழப்போகிறான் எனத் தெரிந்தும் சிவத்தைப் பிடிக்கப்போன விசுவின் வலக்கை முழங்கைக்குச் சற்றுக்கீழ் துண்டாடப்பட்டது. இடக்கையில் விரல்கள் அனைத்தும் சிதறின. உடல் முழுவதும் காயங்கள். சிவம் சாவுடன் போராடிக்கொண்டிருக்க காயமின்றித் தப்பிய ஒருவன் தளத்துக்கு ஓடிச்சென்று தோழர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்த போது தன் தோழர்களைப் பார்த்து ‘கைக ளிரண்டும் இல்லை மச்சான்’, கைகளிரண்டும் இல்லை மச்சான்’, என அரை மயக்கத்துடன் கூறத் தொடங்கினான். முகத்தில் வேதனையைக் காட்டிக் கொள்ளவில்லை. மனதில் வேதனைகள் இல்லாதிருக்குமா என்ன?

நாற்பது கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் வடமராட்சிக் கரை யோர எல்லையை நோக்கி காயப்பட்ட தம் சகதோழர்களுடன் கல்மடுவிலிருந்து புலிகள் அணி ஒன்று புறப்பட்டது. மெல்லிய உடற்கட்டையுடைய விசுவைச் சுமந்தவாறே போராளி ஒருவன் வேகமாக முன்னே நடந்து கொண்டிருந்தான்.

‘தமிழ்நாடு’.

அறுவைச் சிகிச்சைகள் முடிவடைந்து கைகளுக்குப் போடப் பட்டிருந்த கட்டுக்களை அவிழ்க்கும் நாளும் வந்தது.

விரல்கள் இல்லாத இடக்கையின் பெருவிரலுக்கும், மோதிர விர லுக்கும் இடையே காணப்படும் பகுதியை வெட்டி விரல்போன்ற ஒன்றை மருத்துவர் உருவாக்கியிருந்தார். “டொக்ரர் எனக கொரு விரல் எப்படியும் உருவாக்கித்தர வேண்டும்” என அவன் மருத்துவரிடம் கேட்டது வீண் போகவில்லை.

1989 இன் நடுப்பகுதியில் அந்தப் பனை மரத்தின் ஓலைகள் மீண்டும் அவனுக்குத் தெரிந்தன. பிரிந்து சென்ற அனைத் தோடும் மீண்டும் சேரும் நாள் “நான் எவ்வளவோ நாட்டுக் காகச் செய்ய வேண்டிக்கிடக்கு” தனக்கென உருவாக்கிய விரலை மீண்டுமொரு தடவை பார்க்கிறான். அந்தப் பனை மரங்கள் முழுமையாகத் தெரிந்தன. கரைசேர்ந்த படகிலிருந்து “தூக்கவா விசு அண்ணை” போராளி ஒருவன் கேட்க “என் னால் முடியும் மச்சான்” என்று கூறிவிட்டுக் கரையேறினான். அந்தப் பனைமரமும், ஓயாத அந்தக் கடலின் அலைகளும் தங்களுடன் அவனையும் தொடர்படுத்திப் பார்த்திருக்கும்.

மீண்டும் வன்னியில் விசு 3.7 எனும் குறியீட்டுப் பெயருடைய தளத்தில் போராளி அணி ஒன்றிற்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டான். இங்கு அவன் துப்பாக்கி எடுத்துக் குறிபார்த்து தன் இலக்கை வீழ்த்தியபோது மருத்துவருக்கு மீண்டுமொருமுறை நன்றி கூறியிருப்பான்.

1990 இல் போராட்டத்தின் பட்டறிவு புலிகளின் புலனாய்வுச் செயற்பாட்டை நிறுவனப்படுத்த வேண்டிய தேவையினை தலைவர் அவர்களுக்கு ஏற்படுத்தியபோது அதற்காகத் தேர்வு செய்யப்பட்ட அணியில் விசுவும் இருந்தான்.

1990 யூன், இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதும் யாழ் - வன்னிக்கான தரைத்தொடர்பை சிங்களப்படையினர் ஆனை யிறவில் துண்டித்தனர். கொம்படிப் பாதையே வன்னிக்கான தொடர்பானபோது, புலனாய்வுத்துறைப் போராளிகளின் போக்கு வரத்து வேலைகளினையும், பொருள் மாற்றும் வேலையினை யும் விசுவே பொறுபெடுத்திருந்தான். இக்காலப்பகுதியில் புல னாய்வு வேலை ஒன்றினை பொறுப்பெடுக்கும்படி புலனாய்வுப் பொறுப்பாளர் அவர்கள் கேட்டபோது, “நான் சண்டைக்கெண் டாப் போறன் அம்மான். எனக்குப் புலனாய்வு வேலை சரி வருதில்லை”. விசுவின் இம்மனநிலை பற்றி புலனாய்வுப் பொறுப்பாளர் கூறியபோது, “விசுவுக்கு புலனாய்வு அறிவு என்பது இயற்கையாகவே இருந்தது. தன்நம்பிக்கை என்பது அதைவிடப் பெரிதாக இருந்தது. ஆனால், அவன் ஏன் புலனாய்வு வேலைகளில் அதிக நாட்டம் கொள்ளவில்லை? இது எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. எமது விடுதலைப் போரை நாம் வெல்ல வேண்டும் என்றால் புலனாய்வுச் செயற்பாடு எவ்வளவு முக்கியமானது என்பதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். ஆனாலும் சண்டைக்கான துறையில் அவன் இருந்ததால் அவன் முடிவு சரியானதுதான்”. ஏன்றார்.

விசுவின் மனநிலையறிந்த பொறுப்பாளர் விசுவுக்கு சண்டைக் களத்துடன் தொடர்புடைய பணியைக் கொடுக்கத் தொடங் கினார்.

1993 நவம்பர் 11 இல் பூநகரி தரைப்படை மற்றும் கடற்படைக் கூட்டுத்தளங்கள் மீது ‘தவளைப் பாய்ச்சல்’ நடவடிக்கையைப் புலிகள் மேற்கொள்ளத் தீர்மானித்த போது வழங்கல் பணியை மேற்கொள்ளும் நடவடிக்கைப் பகுதி ஒன்றிற்கு விசு பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

அன்று நீரேரியைக் கிழித்தவாறே அவனின் படகு விரைந்து வந்துகொண்டிருந்தது... திடீரென வானில் தோன்றிய எதிரியின் ‘புக்காரா’ வானூர்தி ஒன்று படகை நோக்கி வேகமாய்க் குத்திப் பதிந்தது. “டேய் அடிக்கப் போறான்ரா” எல்லோரும் நீருள் பாய்ந்து நீந்தத் தொடங்கினர். படகு நீருள் அமிழ்ந்து கொண் டிருந்தது. இல்லாத கைகளுடன் விசு கரையேறுவதற்காய் நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருந்தான். அவனின் ‘கோல் கொமாண்டோ’ நீரினுள் அவனை விட்டுப் பிரிந்து கொண்டிருந்தது. கப்டன் வண்ணன் நீரோட்டத்துடன் போரா டித் தோற்றுக் கொண்டிருந்தான். விசு வருவானா? என்பதை விட ‘அட விசுவுக்கு நீந்தக் கைகள் இல்லையே’ என ஏங்கிய உள்ளங்களே அதிகம். “இதயம் வெடித்து மீன்களே அக்கடலேரி யில் மிதந்து கொண்டிருந்த போதும், அந்திசாயும் நேரம் அவன் வந்து கரையேறினான்.






பின் இன்னுமோர் புதிய பணி அவனுக்குக் கொடுக்கப்பட்டது. “வணிகம்” ஐம்பது வீதம் பணம் இலாபம், ஐம்பது வீதம் புல னாய்வு இலாபம். அவன் தன் போராட்ட வாழ்வில் கண்டிராத புதிய பணி.

சாரம், அரைக்கைசேட், அரும்பிய தாடி அவனை வணிகனாகக் காட்டிக் கொண்டிருக்க, ஒட்டிய உடலும், வெட்டிய கைகளும் அவனைப் போராளியாகவே காட்டிக் கொண்டிருந்தன.

இக்காலப்பகுதியில் விசுவுடன் பணியாற்றிய பணியாளர் ஒருவர் நினைவு கூறுகையில், “இந்த மனிசனிட்ட ஒரு குணமிருக்கு, அவரின் தனிப்பட்ட தேவைகளுக்காக எந்த உதவியை நாம் செய்து கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஒருநாள் நான் மலசலகூடத்துக்கு தண்ணீர் அள்ளிவைத்தேன். அத்தண் ணீரைக் கீழே உற்றிய அவர் சற்றுக் கோபத்துடன், “உங்களுக் குத் தருகிற ஊதியத்துக்கு இயக்கத்துக்கு வேலை செய்யுங்கோ, எனக்குக் கைகள் இருக்கின்றன. நீங்கள்தான் கைகள் இல்லை என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டு இருக்கிறியள்” அதுக்குப்பிறகு நான் எந்தப் பணிகளும் செய்து கொடுக்கிற தில்லை. அப்படி ஏதாவது செய்யத் தொடங்கினாலே ‘பாணி’ ஒட்டப்போகுது என அறுக்கவும் தொடங்கிவிடுவார்” என்றார்.

இக்காலப்பகுதியில் கிளாலி நீரேரியில் தன் ஆயுதமான ‘கோல் கொமாண்டோ’வை இழந்த துயர் விசுவை வாட்டிக் கொண் டிருக்க போகுமிடங்கள் எல்லாம் கோல்கொமாண்டோ ஒன் றினைப் பொருத்தி எடுப்பதற்காக அதன் உதிரிப்பாகங்களைத் தேடிப்பெற்றுக் கொண்டான். “அண்ணை, உங்களுக்குக் கை களும் இல்லை பிறகேன் ஆயுதம்” கேட்கக்கூடாத கேள்வியை போராளி ஒருவன் கேட்டுவிட்டான். “டேய் என்னதான் இருந் தாலும் சண்டையிட்டுத்தான் நாங்கள் நாட்டைப் பிடிக்க வேண்டும்... நாட்டைப் பிடித்த பிறகும் துவக்குத் தேவைப்படும்”. ‘வலிமையே வாழும்’ என்ற பொதுவிதி விசுவின் உணர்வுக ளுடன் பிரதிபலித்தது.

யூன் 05 விளக்குவைத்தகுளம் நோக்கிய சிங்களப்படைகளின் ஜெயசிக்குறு தாக்குதலில் மேஜர் குட்டி வீரச்சாவு அடைய, பின் கள வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விசுவுக்கு புலனாய் வுப் பொறுப்பாளரிடமிருந்து செய்தி வந்திருந்தது. “புலனாய்வுத் துறைப் படையணியைப் பொறுப்பெடுக்கவும்”.

அணிப் பொறுப்பினை எடுக்கும் போது விசுவின் முன்னே எதிரியின் பாரிய நகர்வினைத் தடுக்கும் பொறுப்புடன் இன்னு மொரு பாரிய பொறுப்புமிருந்தது.

புலனாய்வை மட்டுமே பட்டறிவாகக் கொண்ட போராளிகள். ‘துணிவு’ மட்டுமே அவர்களுக்கான தகுதியாய் இருந்தது. ஏனைய அணிகள் தொடர்ச்சியாக சண்டைக் களங்களில் நின்றமையால் கூடுதலான சண்டை அனுபவம் கொண்ட போராளிகளைக் கொண்டிருந்தன.

எனவே, தன் அணிக்கும் உறுதியான ஓர் அடித்தளத்தை இட்டு சண்டைக்களங்களில் காத்திரமான பங்கைக் கொடுக்க வேண்டிய மற்றுமோர் முக்கிய பொறுப்பினையும் அவன் நன்கு விளங்கியிருந்தான். சிறந்த படையணிக்கு அடித்தளமிடுவதற் கான ஒவ்வொரு சிறு விடயங்களையும் தலைவர் அவர்கள் கூறுவதுபோல் தன்னிலிருந்தே ஆரம்பித்தான்.

விசுவின் கைகளுக்கிடையேயும் ஒரு மண்வெட்டி இருக்கும். அந்த மண்வெட்டியும் தன்னால் முடிந்ததைச் செய்து கொண் டிருக்கும்.

ஒரு இரவு. வேவுக்காரன் பின்னால் வந்து அடிக்க எத்தனித்த போது முதலில் தன் துப்பாக்கியை இயக்கிச் சண்டையிட்ட அந்தப் போராளி, “தம்பி உன்ர கோல்சரை கட்டிக்கொண்டு படு”. அடிக்கடி விசு கூறுவதை நினைவுபடுத்திக் கொள்கிறான்.

“அண்ணா, எங்களுக்கு ஒரு சண்டையும் கொழுவுது இல்லை”. காவலரணில் நிற்கும் போராளி ஒருவன் கேட்டான். “ஆமி என்ன வேவு பார்க்காமலேயே சண்டைக்கு வாறான்? நீங்கள்

பலமாக இருந்தால் அவன் எப்படி வருவான்". தனக்குள்ளும் அந்தக் கேள்வி இருப்பதை மறைத்தபடியே இயல்பாகக் கூறுவான். "டேய் விசுவண்ணைக்கு காய்ச்சல்" காவலரணுக்குப் பொறுப்பான போராளி கூறுவான். "தம்பி இரண்டு பேரையும் பின்னுக்கு அனுப்பிவிட்டு அதை டம்மிப் பொயின்ற் ஆக்கு". "அதால ஆமி உடைச்சா?" "டேய், ஆமி உடச்சா நாங்கள் மூடி அடிப்பமடா" விசு கூறுவான். "அண்ணை இவன் மாறி எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில சேர்ந்திட்டான்". ஒரு போராளி குத்தலாய்ச் சொல்ல, "மச்சான் சின்னச் சத்தம் கேட்டாலும் என்ன என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கோ" கூறியவாறே விசு மறுகாவலரணுக்குச் செல்வான்.

"கனகாலத்துக்குப்பிறகு ஊருக்குள்ள வந்திருக்கிறம்". பின்னால் இருந்த அறிவிடம் விசு கூறினான். வீதியில் கண்ட தெரிந்தவர் அவனை மறித்து, "என்ன விசு கண்கள் எல்லாம் உள்ள போயிட்டுது" "எங்கட கண்கள் உள்ள போனதால்தான் ஆமியும் உள்ளவராமல் இருக்கிறான்" அதில் நிறைந்திருந்த ஆயிரம் கருத்துக்களை அந்தப் பொதுமகனால் அந்தக் கணத்தில் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

ஊருக்குள்ள வந்த அவன் அன்று மாலையே தன் வாழ்விடத்திற்குத் திரும்பி விடுவான். தன் பிள்ளைகளுக்கென கச்சான் கூட வாங்கிச் செல்ல அவன் கையில் பணம் இருக்காது. அன்று அந்தப் பழைய உந்துருளிக்குக் காற்றுப் போனது. ரியூப்புக்கு ஒட்டுப் போட பணம் வேண்டும் என்ன செய்வது? அவன் தோற்றத்தைப் பார்த்தே அவன் யார் என விளங்கிக்கொண்ட அந்த ஒட்டுவேலை ஐயா அவனிடம் பணம் கேட்கவுமில்லை.

"விசு அண்ணை வந்திட்டார்" தொலைத்தொடர்பு சாதனங்களினூடாக போராளிகள் கதைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கும் இனம்புரியாத தெம்பு ஏற்படும்.

1997 டிசம்பர் 03 மன்னகுளப் பகுதியினூடாக எதிரி நகர்வதற்கான சாத்தியத்தை அடுத்து விசுவின் அணிகள் மன்னகுளப் பகுதிக்கு மாற்றப்பட்டன.

வீதியின் வலது பக்கத்திலிருந்து குளத்தின் அணைக்கட்டை ஒரு பக்கம் பாதுகாப்பு வேலியாக்கி அதில் ஓர் அணியையும், வீதியின் இடப்பக்கமாக (கனகராயன்குளப் பகுதி) இன்னொரு அணியையும் விசு பிரித்து விட்டிருந்தான். வீதிக்குக் குறுக்காக மாலதி படையணி நிலை கொண்டிருந்தது. அடுத்த நாள் 1997 டிசம்பர் 04, சூரியன் மேலெழுந்து கொண்டிருந்த நேரம் மன்னகுள வீதியை ஊடறுத்த சிங்களத்தின் அதி சிறப்பு கொமாண்டோ அணியினர் வீதிக்கு அருகாக ஒரு கிலோமீற்றர்வரை முன்னேறி இருந்தனர். "எங்களுடைய முதற்கட்டப் பணி முடிவடைந்துவிட்டது. கண்டி வீதியில் ஏறப்போகின்றோம்" சிங்களத் தளபதி ஒருவன் தன் கட்டளைப் பீடத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தான்.

எதிரி ஊடுருவிய பிரதேசத்தினுள் ஒரு காவலரண் மட்டும் பிடிபடாமல் இருந்தது. அக்காவலரணில் இருந்த மேஜர் நீலாம்பரி தனியாக நின்று எதிரியுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். "சாண்டிலியன், நான் விசு கதைக்கிறன். உடைத்த காவலரண்களை மீண்டும் பிடித்து மற்ற அணிகளோட லிங் பண்ணுங்கோ..."

"ஒரு காவலரண் ஆமியிட்ட பிடிபடாமல் இருக்கு. அதில எங்கட பிள்ளை ஒன்று தனியாக நின்று சண்டை பிடித்துக் கொண்டிருக்கு. ரவையைப் பார்த்து அடியுங்கடா" முன்னே சென்று கொண்டிருந்த அணிகளுக்கு விசு கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.

"மறுபுறத்தில், ஆப்பிழுத்த குரங்கின் கதையாய் வந்த இடம் சொல்லவே வழிதெரியாதிருந்த சிங்களத்தின் 53ஆவது படையணி கொமாண்டோக்களுக்கு அமெரிக்காவின் "கிரீன்பரே" படையணி கொடுத்த பயிற்சிகள் புலிகளின் தாக்குதலின் முன்னே கைகொடுக்கவில்லை. ஒரு கல் வீட்டின் உள்ளேயே சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டிருந்த கொமாண்டோக்களுக்கு அந்தக் கல்வீடே கல்லறையானது. "உதவிக்கு படைகள் அனுப்புகிறோம்" என சிங்களத் தளபதிகளிடமிருந்து பதில் வந்ததே தவிர படைகள் வரவேயில்லை.



எங்கிருந்தோ வந்த குண்டின் சிதறல்கள் விசுவின் தோள் மூட்டிலும் காலிலும் காயத்தை ஏற்படுத்தின. உதவித் தளபதி அறிவின் குரல் வோக்கியில் கேட்கத் தொடங்கியது. உதவிக்கு வந்த சக அணிகளுடன் இணைந்து எதிரியால் பிடிக்கப்பட்ட காவலரண்கள் அனைத்தும் மீளவும் கைப்பற்றப்பட்டன. ஒன்பது மணிநேர சண்டையின் முடிவில் தனது நாநூறு அதிசிறப்புக் கொமாண்டோக்களை சிங்களத்தின் 53ஆவது படையணி இழந்திருந்தது. அந்த நாள் சிங்களத் தளபதி சிறிலால் வீரசூரியாவுக்கு மட்டுமல்ல, சிங்களத்தின் புகழ்பூத்த 53ஆவது படையணிக்கு என்றுமே மறக்கமுடியாத நாள்.

"அறிவண்ணை விளக்குவைத்தகுளத்தில் G.P.M.Gயை எதிரியிடம் பறிகொடுத்த அவமானத்தை எங்கட இரத்தத்தால் கழுவியிருக்கிறம்". மருத்துவமனையில் வைத்து அறிவிடம் விசு இப்படித்தான் கூறினான்.

மீண்டும் படைவேலி வாழ்க்கை. மழையும் தன்வீச்சைக் கடுமையாக்கி இருந்தது. "பதுங்குகுழி வெட்டினா நனையத்தான் வேண்டும். அது வியர்வையாலா? மழையாலா? என்பதைக் காலநிலைதான் தீர்மானிக்க வேண்டும்" தெப்பலாய்த் தோய்ந்திருந்த போராளி ஒருவன் கூறிக்கொண்டிருந்தான். சின்ன வயதில் தலைக்கு பௌடர் போட்டு அதற்கும் ஈரம் காய்ந்திருக்காது என எண்ணி சாம்பிராணிப் புகை போடும் எங்கள் அம்மாக்களின் அந்தப் பிள்ளைகள் தலைதுடைக்க சிறு துண்டு கூட இல்லாமல் தாய்நாட்டிற்காக நனைந்து கொண்டிருந்தார்கள். விசுவும் காய்வான், நனைவான். தலை துடைக்க சிறு துண்டல்ல கைகள் இன்றியும் சிரமப்படுவான்.

தொடர்ச்சியாகக் கஞ்சி அல்லது கத்தரிக்காயும் சோறும் தான் உணவாக வந்து கொண்டிருக்கும். "மச்சான், எலும்பெல்லாம் தெரியுது. காயப்பட்டாலும் எக்ஸ்ரே எடுக்க செலவு மிச்சம்தான்" என்றவாறே, "ஏதாவது அயிற்றம் போடுவம்" விசு கூறுவான். ஏதாவது மிருகங்களை வேட்டையாடுவதற்காக இருவர் புறப்படுவார்கள். சிலநேரம் மான் வரும் சிலநேரம் "அண்ணை, சுட்டம் ஓடிற்றுது" என்ற பதில் வரும்.

"டேய் அது மானடா, அதுக்கு நாலுகாலடா, சுட்டுப் படாட்டா அது ஓடும் தானடா". எங்கும் சிரிப்பொலி எழும்.

கொம்பனி மேலாளர் என்ற நிலையிலிருந்து மாங்குளப் பகுதிக்கான முழுமையான பொறுப்பாளராகக் கட்டளைப் பீடத்தினால் அவன் நியமிக்கப்பட்டான்.

ஒருசில மறிப்பு வேலியை மட்டும் பாதுகாக்கக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தவனுக்கு பல கிலோ மீற்றர்கள் மறிப்பு வேலியை எதிரி உடைக்காமல் பாதுகாக்கக் கட்டளையிட வேண்டிய முக்கிய பொறுப்பு... அவன் ஒரு பொதுவான பொறுப்பாளனாக மாறியிருந்தான்.

1998 யூன் 05, அன்றிரவு 'எல்' வடிவில் ஒலுமடுப் பக்கமாகத் திரும்பும் புலனாய்வுத்துறைப் படையணி பாதுகாத்த மறிப்பு வேலியில் அமைக்கப்பட்டிருந்த போலிக் காவலரணின் உள்ளே (டம்மிப் பொயின்ற்) எதிரிப்படையின் வேவுகாரர் வந்து சென்ற தடயங்கள் தெரிந்தன. விடயம் உடனடியாக விசுவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. "கவனமாக இருங்கோ, அதுக்குள்ளால எப்படியும் நுழையப் பார்ப்பான்"

1998 யூன் 06 - பட்டப்பகல் பொழுதில்... அலட்சியமாக இருக்கும் அந்த ஒரு நிமிடமே எதிரி உன்னைத் தேடிவரும் நேரமாக இருக்கலாம். தலைவர் அவர்கள் கூறியதை பட்டறிவில் அன்று புரிந்துகொண்டார்கள். வளைவாகச் சென்ற நகர்வு அகழிக்கு மையத்தில் அந்தப் போலிக் காவலரண் அமைந்திருந்தது. எதிரிக்கு வாய்ப்பாக போய்விட்டது.

குறிப்பிட்ட தூரம் வரை சென்று வளைவுப் பகுதியில் நின்று துப்பாக்கியை நீட்டினால் எதிரியின் துப்பாக்கி சடசடக்கத் தொடங்கிவிடும். எதிரி கடுமையாக நின்று போரிட்டுக் கொண்டிருந்தான். அறிவுக்கு விசுவிடம் இருந்து கட்டளைகள் வந்து கொண்டிருந்தன. களநிலைமை போராளிகளுக்குச் சாதகமாக மாறியது. பகல் பொழுதில் புலிகளின் துப்பாக்கிக் குறியில் இருந்து தப்பியோடுவதே எதிரிக்குக் கடினமான பணியாக இருந்தது.

**1989 இன் நடுப்பகுதியில் அந்தப் பனை மரத்தின் ஓலைகள் மீண்டும் அவனுக்குத் தெரிந்தன. பிரிந்து சென்ற அனைத் தோடும் மீண்டும் சேரும் நாள் "நான் எவ்வளவோ நாட்டுக் காகச் செய்ய வேண்டிக்கிடக்கு" தனக்கென உருவாக்கிய விரலை மீண்டுமொரு தடவை பார்க்கிறான். அந்தப் பனை மரங்கள் முழுமையாகத் தெரிந்தன. கரைசேர்ந்த படகிலிருந்து "தூக்கவா விசு அண்ணை" போராளி ஒருவன் கேட்க "என் னால் முடியும் மச்சான்" என்று கூறிவிட்டுக் கரையேறினான். அந்தப் பனைமரமும், ஓயாத அந்தக் கடலின் அலைகளும் தங்களுடன் அவனையும் தொடர்படுத்திப் பார்த்திருக்கும்.**




ஜெயசிக்குறு எதிர்ச்சமர் வரலாற்றில் அந்த முப்பது நிமிடச் சண்டையும் முக்கிய இடத்தைப் பெற்றது.

ஜெயசிக்குறுப் படைகள் 1998 பெப்ரவரி 04க்குள் கண்டி வீதியைப் பிடித்து யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்களப் படைகளுக்கான விநியோகத்தை ஏற்படுத்திவிடுவர் என்ற பதில் பாதுகாப்பு அமைச்சரின் காலக்கெடுவை ஏழு மாதங்கள் கடந்திருந்தன. மாங்குள நகரினைக்கூட கைப்பற்ற முடியாமல் சிங்களப் படைகள் திணறிக் கொண்டிருந்தன.

சிங்களப் படைகள் போய்ச்சேர வேண்டிய கிளிநொச்சி நகரினை மீண்டும் கைப்பற்ற நாள் குறித்தபோது, அதற்கான பயிற்சிகளில் விசுவின் அணியும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. கிளிநொச்சிப் படைத்தளம் ஏறக்குறைய 20 கிலோமீற்றர் சுற்றுவட்டத்தினைக் கொண்டிருந்தது. கண்டி வீதியைத் தன்னகத்தே உள்ளடக்கி முப்பது மீற்றருக்கு ஒரு காவலரண், நகர்வு அகழிகள், முட்கம்பி வேலிகள், பதுங்கு குழிகள் எனப் பதினாறுக்கும் மேற்பட்ட மினிமுகாம்களையும் தன்னகத்தே கொண்டு சிங்களத்தின் புகழ்பூத்த 54அவது படையணியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பெரும் படைத்தளமாக அது விளங்கியது.

இந்தப் படைத்தளத்தை அழிக்க வேண்டுமாயின் படைத்தளத்தின் விநியோக வழியை அடைக்க வேண்டும். விநியோக வழியை அடைக்க வேண்டுமாயின் பரந்தன் பகுதியில் கண்டி வீதியைத் துண்டாட வேண்டும்.

கண்டி வீதியைத் துண்டாடும் பணியை பிரிகேடியர் பால்ராஜ் அவர்கள் தலைமையிலான அணிகள் பொறுப்பெடுத்திருந்தன. அவரின் அணிகளைக் கண்டி வீதிக்கு அனுப்ப பாதை உடைத்துக் கொடுக்க வேண்டும். பாதை உடைத்தெடுத்து அகட்டிக் கொடுக்கும் பணி விசு தலைமையிலான புலனாய்வுத்துறைப் படையணிக்கு வழங்கப்பட்டிருந்தது.

'ஓயாத அலைகள் - 02' 1998 செப்ரெம்பர் 27, அதிகாலை 1.20, டோபிடோ வெடிக்க, முட்கம்பி வேலி துண்டாடப்படுகிறது. முட்கம்பி வேலிகளை அகற்றி உள்ளே புகுந்த அணிகளில் ஒரு அணி விசு தலைமையில் வலப்பக்கமாகவும் (டிப்போ வீதிப் பக்கம்) இன்னுமோர் அணி அறிவு தலைமையில் இடப்பக்கமாகவும் (பரந்தன் பகுதி) பிரிந்து சென்று பத்தே நிமிடங்களில் தடைகள் உடைக்கப்பட்டு பின் இடம் வலமாக ஒரு கிலோமீற்றர் தூரமான படைவேலிகள் உடைக்கப்பட்டுப் பாதை கொடுக்கப்பட கண்டி வீதியைத் துண்டாடும் அணி தனது வேலையைச் சரிவரச் செய்தது.



நாலு திசைகளிலிருந்தும் புலி அணிகளின் பாச்சலாலும், எறிகணை வீச்சாலும் படைத்தளம் சிதைந்து கொண்டிருந்தது. வெட்டையான இடங்களினூடாக முன்னேறிய விசுவின் அணி உருத்திரபுர வீதியின் அருகே இருந்த அந்த மாடிவீட்டின் பக்கத்து காவலரணையும் கைப்பற்றி இருந்தது.

நேரம் பகல் 1.30 மணி. முதல் நாள் இரவு முழுவதும் விழித்திருந்து சண்டையிட்டகளைப்பு ஒவ்வொரு போராளியின் முகத்திலும் தெரிந்தது. விசு காவலரண் ஒன்றிற்குள் இருந்தான். எதிரியின் துப்பாக்கி ரவைகள் காவலரணில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. காவலரணின் ஒட்டையினூடே, உள்ளே ரவை ஒன்று பட்டுத் தெறித்து விசுவின் மார்பினைத் துளைத்து நின்றது.

அந்த நிமிடம் நடக்கப்போவதை விசு உணர்ந்தான். தன் கோல் கொமாண்டோ துப்பாக்கியை அருகில் நின்ற போராளியிடம் கொடுத்தான். "தம்பி பிடிச்ச இடங்கள திருப்பி அவன் பிடிக்க விடாதீங்கோ, நிலைமையை அறிவுக்குத் தெரியப்படுத்துங்கோ" அவன் கூறிக்கொண்டிருந்த போதே மெல்லமெல்ல அவன் உடல் இயக்கம் அந்தப் படைத்தள அழிப்பின் வெற்றிச் செய்தியை கேட்காமலேயே நின்று விட்டது.

என்ன திடீர் முடிவு என நினைக்கிறீர்களா? என்ன செய்வது, அவன் வாழ்விலும் தொடரிசைக் குறிக்குப் பதிலாய் முற்றுப் புள்ளி விழுந்துவிட்டது.

விளக்குவைத்த குளத்தில் அணியைப் பொறுப்பெடுத்த போது தன் முன்னே இருந்த இரண்டு பொறுப்புக்களையும் செய்து முடித்த நிறைவு அவன் முகத்தில் தெரிந்தது.

பதினைந்து வருடங்கள் விடுதலைக்காக உழைத்த அந்தத் தீக்குச்சி வெளிச்சத்தை ஏற்றிவிட்டு மறைந்துவிட்டது. அவன் பெயரால் அவன் போன்றவர்களுக்கு புலனாய்வுத்துறையில் ஓர் அறிவுக்கூடம் எழுந்து நிற்கின்றது. வன்னி மண்ணில் ஆலங்குளம் துயிலுமில்லம் பிள்ளையென அவனைச் சுமந்து நிற்கின்றது. உங்கள் சுவாசக் காற்றையே இனிவரும் சந்ததியும் சுவாசிக்கப் போவதால் கால நதியில் உங்கள் வரலாறே தமிழன் வரலாறாய் என்றும் நிலைக்கும்.

"தோழனே சாவுக்குள் நின்று
உழைப்பவர்களுக்கு சாவின் பின்னும்
நிச்சயமாவது இலக்கின்
வெற்றி மட்டுமே".

நினைவுப்பகிர்வு – சி.மாதுளா
விடுதலைப்புலிகள் இதழ் (கார்த்திகை, 2002).




# இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த இடைக்கால தடை!

பெப்ரவரி 15, 2024

இலங்கை தமிழரசி கட்சியின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடாத்த வேண்டாம் என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று (15) இடைக்கால தடை விதித்து கட்டாணையொன்றினை பிறப்பித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இன்றைய நாள் இவ் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் மேற்கு குறித்த இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தன் ஆகியோர் ஆஜராகினர்.

கடந்த 21 மற்றும் 27ம் திகதிகளில் நடைபெற்ற பொதுச் சபை கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானதும், செல்லுபடியற்றதும் என வாதம் முன்வைக்கப்பட்டது.

எனவே, குறித்த இரண்டு பொதுச் சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானதும் செல்லுபடியற்றது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழரசு கட்சியின் யாப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் பொதுச் சபை கூட்டங்களில் பங்குபற்றி குறித்த தெரிவுகளின் போது வாக்களித்துள்ளமையினால், குறித்த கூட்டம் சட்ட முரணானது எனவும் இதன்போது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சமர்ப்பணங்களின் அடிப்படையில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த மாநாட்டிற்கு திருகோணமலையில் மாவட்ட நீதிமன்றம் இரு வாரங்களுக்கு இடைக்காலை தடை உத்தரவு விதித்துள்ளது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கினை திருகோணமலை சாம்பல்தீவு - கோணேஷபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாக தாக்கல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, எஸ். ஸ்ரீதரன், எம்.சுமந்திரன், சண்முகம் குகதாசன் உட்பட தமிழரசு கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிர் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரை இல்மனைட் அகழ்வதற்கு அனுமதிக்க முடியாது!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

பெப்ரவரி 17, 2024

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை தொடக்கம், கொக்கிளாய் வரையான கடற்கரையோரத்தில் இல்மனைட் அழகழ்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி கோரப்பட்ட நிலையில், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கடுமையான எதிர்ப்பையடுத்து குறித்த அனுமதியை அபிவிருத்திக்குழு நிராகரிப்பதாகத் தீர்மானித்துள்ளது.








முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (16)இடம்பெற்றபோதே குறித்த இல்மனைட் அகழ்விற்கான அனுமதி கோரப்பட்டது. இந்நிலையிலேயே குறித்த அனுமதி இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரையில் இல்மனைட் அகழ்ந்தால் அருகே உள்ள வயல் நிலங்களும் பாதிக்கப்படுமெனவும், செம்மலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர்த் தடுப்பணையும் சேதப்படுத்தப்படுமெனவும், பாரிய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் இதன்போது சாள்ஸ் நிர்மலநாதனால் சுட்டிக்காட்டப்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்காத விடயத்தை, மத்திய அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாதெனவும், செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரை இல்மனைட் அகழ்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனவும் சாள்ஸ் நிர்மலநாதன் இதன்போது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு இந்த அனுமதிக் கோரிக்கையை நிராகரிப்பதாக முடிவெடுத்ததுடன், இல்மனைட் அகழ்வால் ஏற்படும் பாதிப்பு நிலையைச் சுட்டிக்காட்டி உரியவர்களுக்குஅறிக்கை அனுப்புவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

# மன்னாரில் சிறுமி வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை!

பெப்ரவரி 17, 2024

மன்னாரில் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமியொருவர் நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டநிலையில், இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமியின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

அதன் போதே, சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டிற்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் வேலை செய்த 52 வயதான திருகோணமலை - குச்சவெளியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை காணாமற்போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, பிரதேச மக்கள் தேடுதலில் ஈடுபட்ட போது, தென்னந்தோட்டத்தில் இருந்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது.



சிறுமியின் தாயும் தந்தையும் புத்தளம் - பூக்குளம் கிராமத்தில் வசித்து வருவதுடன், பாடசாலை செல்வதற்காக சிறுமியும் அவரது இரு மூத்த சகோதரிகளும் சகோதரனுடன் ஊர்மனை கிராமத்திலுள்ள அம்மம்மாவின் வீட்டில் வசித்து வந்த நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

# சுண்டிக்குளம் தொடுவை வாய்க்கால் மீனவர் படுகொலையின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல்!

பெப்ரவரி 19, 2024

இலங்கை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10 மீனவர்களது 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவேந்தல்.

குறித்த நிகழ்வானது நேற்று (18.02.2024) மாலை யாழ்ப்பாணம் கட்டைக்காடு சென் மேரிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

18.02.1994 அன்று வட தமிழீழம் முல்லை பூனைத் தொடு வாய் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டர்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரதேசத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும் .

18.02.1994 அன்று அதிகாலை 5.15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள்மீன் பிடிப்பதற்கு கட்டு மரங்களில் கடலை நோக்கி சென்று மீன்பிடித்துக்

கொண்டிருந்தவேளை அங்குவந்தகடற்ப்படையின் "டோறாப் படகு" மீனவர்கள் மீது திடிரெனத் துப்பாக்கிப் பிரயோகம் வேளை அங்கிருந்த மீனவர் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்துவிட்டும் கரையை நோக்கி கட்டுமரங்களை நகர்த்திய வண்ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கி தொடர்ந்தும் துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாக

கேட்க தங்கள் உறவுகள்மீன்பிடிக்க சென்றதைஎண்ணிஏங்கிக் கரையை நோக்கி ஓடிவந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின்டோறாப்படகு கடற்கரையை அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதை கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சேர்ந்து விழுவதை கண்டு மக்கள் கதறிழுதனர்.




கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந்தனர் தாக்குதல்நடந்தன்றுமூன்று பேரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. ஏனைய ஏழுபேரது உடல்களும் மறு தினமே கரையொதுங்கியன.இந்த தாக்குதலினால்பீதியுற்ற மீனவர்கள் சில மாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட வில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வின் பொதுச்சுடரினை கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் ஏற்றி வைத்துள்ளதுடன். இதன் பின்னர் உயிரிழந்த பத்து மீனவர்களினதும் உறவுகள் ஈகைச் சுடரினை ஏற்றி இறந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.இதனைத்தொடர்ந்து இறுதியில் நட்புரீதியான உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்றதோடு வெற்றிக் கிண்ணங் களும் வழங்கி வைக்கப்படுள்ளன.

**18.02.1994 அன்று சுண்டிக்குளம் தொடுவை வாய்க்கால் மீனவர் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

| இல | பெயர் | வயது |
|---|---|---|
| 01. | இயக்கோ கபிரியேல்பிள்ளை | 29 |
| 02. | இயக்கோப்பிள்ளை நிக்சன் | 20 |
| 03. | கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் | 25 |
| 04. | மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் | 26 |
| 05. | அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை | 46 |
| 06. | அமிர்தநாயகம் யோன்பெர்னான்டோ | 35 |
| 07. | ஆசிர்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் | 44 |
| 08. | யேசுராசா அலோசியஸ் சாந்தகுமார் | 22 |

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.







# தலைமன்னார் சிறுமிக்கு நீதிகோரி மக்கள் போராட்டம்!

பெப்ரவரி 19, 2024

தலைமன்னார், ஊர்மனை கிராமம் பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி இன்றைய நாள் திங்கட்கிழமை காலை மன்னார் நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன் குறித்த கிராம மக்கள் அமைதி வழி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சிறுமியின் மரணத்திற்கு தாமதம் இன்றி நீதி கிடைக்க வேண்டும் என கோரியும் விசேட நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று குறித்த வழக்கை விசாரிக்க கோரியும் தலைமன்னார் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை குறித்த அமைதி போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.












# மன்னார் நொச்சிக்குளப் பகுதியில் துப்பாக்கி சூடு; நொச்சிக்குள மக்கள் வீதியை மறித்து போராட்டம்!

பெப்ரவரி 19, 2024



தனிப்பட்ட பகை மோதல்களின் போது துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யும் சம்பவங்கள் மன்னாரில் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் - நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த ஒருவரை இலக்குவைத்து இன்று காலை துப்பாக்கி பிரயோகம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அந்நபர் தப்பித்துள்ளார்.



இன்று திங்கட்கிழமை (19) நொச்சி குளத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது கிராமத்தில் உள்ள தனது வயலில் நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் ஒரு ரி-56 ரக துப்பாக்கி மூலம் துப்பாக்கி சூட்டை நடத்தியுள்ளனர், எனினும் குறிப்பிட்ட விவசாயி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

ஏற்கனவே நடைபெற்ற துப்பாக்கி சூடுகளையடுத்து கிராமத்துக்கு காவல்துறையினரின் காவல் போடப்பட்டும் அதையும் மீறி துப்பாக்கி பிரயோகம் நடந்துள்ளது.

இதனிடையே இன்றைய நாள் நடைபெற்ற சம்பவத்தை கண்டித்தும் நொச்சிக்குளம் கிராம மக்கள் பதாதைகளுடன் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடன் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தொடர்ந்து இன்று திங்கட்கிழமை காலை முதல் மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகருக்கு வருகை தரும் அனைத்து வாகனங்களும், காவல் துறையினரால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.





# கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தின் 07 ஆண்டு பூர்த்தி!

பெப்ரவரி 20, 2024

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் போராட்டம் 07 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டே இன்றைய நாள் செவ்வாய்க் கிழமை கவனயீர்ப்பு போராட்டமும் , பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பமாகி டிப்போ சந்தி நோக்கி யாழ் - கண்டி நெடுஞ்சாலை ஊடாக பேரணி சென்றது.

இப் போராட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் சமயத் தலைவர்கள் பொதுமக்கள் என பலரும் பங்









# புலிகளின் கால தண்டனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்

பெப்ரவரி 22, 2024

விடுதலைப் புலிகளின் காலத்தில் வடகிழக்கில் தமிழ்ச் சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இருந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய நாள் புதன்கிழமை உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி தலைமன்னாரில் ஒரு கொடூரமான சம்பவம் நிகழ்ந்தது.10 வயது நிரம்பிய பாடசாலை மாணவி துஸ்பிரயோகம் செய்யப்பட்டு மெல்லிய நூலினால் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

நாட்டில் பெண்கள், சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையே காணப்படுகிறது. விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ்ச் சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இருந்தது.

1998 ஆம் ஆண்டு 13 வயது சிறுமி ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த ஒருவருக்கு முல்லைத்தீவு புலிகளின் நீதிமன்றில் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டு, அவருக்கு புதுக்குடியிருப்பு சந்தியில் பொது மக்கள் முன்னிலையில் கட்டி வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இங்கு எமது சட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதன் மூலமே பெண்கள் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்யலாம் என தெரிவித்தார்.



# முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி மனித எச்சங்கள் 1994 முதல் 1996 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்டவை?

பெப்ரவரி 22, 2024

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழியில் கண்டறியப்பட்ட மனித எச்சங்கள், 1994 முதல் 1996 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்டவை என முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு, கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி தொடர்பான வழங்கு விசாரணை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின் முதல் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்தாண்டு செப்டம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகி பதினொரு நாட்கள் நடைபெற்றன.

இதன்போது 17 உடற்பாகங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததோடு, இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்தாண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்த நடவடிக்கை ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற நிலையில், 40 மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

இந்த அகழ்வு நடவடிக்கையின் இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை மூலம், மனித புதைக் குழிக்கு மேற்காக இரண்டு மீற்றர் நீளத்திற்கு மனித எச்சங்கள் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.



# தமிழக மீனவர்களுக்கு சிறை படகு பறிமுதல்; 18 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

பெப்ரவரி 22, 2024

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான கடற்தொழிலாளர் ஒருவருக்கு 06 மாத கால சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று , 18 பேருக்கு 18 மாத சிறைத்தண்டனை விதித்து, அதனை 05 வருட கால பகுதிக்கு ஒத்திவைத்துள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் (?) கடந்த 07ஆம் திகதி 19 தமிழக கடற்தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் இரு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதான கடற்தொழிலாளர்கள் மறுநாள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து , அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய நாள் வியாழக்கிழமை மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 19 தமிழக கடற்தொழிலாளர்களும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர் (?).

அவர்களில் ஒருவர் படகு உரிமையாளராகவும், ஓட்டியாகவும் இருந்தமையால், அவரின் படகினை பறிமுதல் செய்து அரசுடைமையாக்க மன்று உத்தரவிட்டது. அத்துடன் அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றைய படகின் உரிமையாளர் இல்லாதமையால், படகின் ஓட்டிக்கு மூன்று குற்ற சாட்டுக்களுக்கும் தலா 06 மாத காலமாக 18 மாத சிறைத்தண்டனை விதித்த மன்று, அதனை ஏக காலத்தில் அனுபவிக்கும் விதமாக 06 மாத சிறைத்தண்டனை விதித்தது.

மற்றையவர்களுக்கு 18 மாத சிறைத்தண்டனை விதித்து, அதனை ஐந்து வருட காலத்திற்கு மன்று ஒத்தி வைத்துள்ளது.

அதேவேளை கடந்த 16ஆம் திகதி தமிழக கடற்தொழிலாளர்கள் மூவருக்கு ஊர்காவற்துறை நீதிமன்று 06 மாத சிறைத் தண்டனை விதித்த நிலையில், குறித்த மூவரையும் விடுதலை செய்ய வேண்டும் என தமிழக கடற்தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருவதுடன், கச்ச தீவு திருவிழாவையும் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.



இந்நிலையில் இன்றைய தினம் ஒரு தமிழக கடற்தொழிலாளருக்கு 06 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம்!

பெப்ரவரி 14, 2024

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் வியாழக்கிழமை (22) ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது வெள்ளிக்கிழமை (23) மாலை 6:30 மணிவரை தொடரும் என தெரிவிக்கப் படுகிறது.

இந்த போராட்டமானது தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இடம்பெற்று வருகிறது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டுள்ளனர்.



# திருகோணமலை தென்னைமரவாடி கந்தசாமி மலை ஆலயத்தில் பொங்கல் நிகழ்வுக்கு சென்ற தமிழர்களின் வழிபாட்டு உரிமை மறுப்பு!

பெப்ரவரி 23, 2024

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான தென்னைமரவாடி கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் வழிபாடுகளுக்கு சென்ற மக்களுக்கு புல்மோட்டை பொலிஸாரால் நீதிமன்ற தடையுத்தரவு வழங்கப்பட்டு பொங்கல் நிகழ்வை நடாத்த விடாது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.





இன்று வெள்ளிக்கிழமை (23) தென்னைமரவாடி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கந்தசாமி மலை முருகன் ஆலயத்தின் மாதாந்த பௌர்ணமி தின பொங்கல் மற்றும் அன்னதான நிகழ்வினை புல்மோட்டை சிறீலங்காப் பொலிஸார் தடுத்து நிறுத்தி யுள்ளனர்.

மாதாந்தம் பௌர்ணமி நாளன்று தென்னமரவாடி கிராம மக்களால் நடத்தப்படும் பொங்கல் விழா வழமை போன்று இன்றைய நாளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இப்பொங்கல் விழாவிற்கு கிராம மக்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்து பக்தர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.




இச்சந்தர்ப்பத்தில் இக்கிராம மக்களால் பொங்கலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஆலய வளாகத்திற்குள் திடீரென நுழைந்த நூறுக்கணக்கான சிறீலங்காப் பொலிசார் மற்றும் விசேட அதிரடி படையினர், இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் கலகம் அடக்கும் ஆயுதங்களுடன் வருகை தந்து அப்பிரதேசத்திலிருந்த கிராம மக்களையும் வெளி பிரதேசத்திலிருந்து வருகை தந்த மக்களையும் காரணமின்றி தடுத்து வைத்தனர்.

புல்மோட்டை பொலிசாரால் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் தென்னமராவடி கந்தசாமி மலை முருகன் கோவில் அமைந்துள்ள பிரதேசம் சங்கமலை புராதன விகாரைக்குரிய இடமான தொல்லியல் பிரதேசம் என்பதால் அப்பகுதிக்குள் உள் நுழைந்து இந்துமத வழிபாடுகளில் ஈடுபடுவது மற்றும் ஏதெனும் செயற்பாடுகளில் ஈடுபடுவது ஆர்ப்பாட்டம் ஏற்படக்கூடிய வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை தடுக்குமாறு கோரி புல்மோட்டை பொலிஸார் திருகோணமலை நீதவான் மன்றில் செய்த விண்ணப்பத்துக்கு ஏற்றவகையில் நீதிமன்றம் மேற்குறித்தவாறு தடை ஏற்படுத்தியுள்ளது.

பொலிசாரால் பெறப்பட்ட அந்த தடையுத்தரவில் தென்னைமரவாடி பகுதியைச் சேர்ந்த நான்கு தமிழ் மக்களின் பெயர் குறிப்பிட்டும், அகம் அமைப்பினர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் ஆகிய அனைவரும் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை 106 (01) (3) பிரிவின் கீழ் இந்த தடையுத்தரவு செல்லுபடியாகும் என பொலிஸார் தடையுத்தரவை வழங்கி பொங்கல் நிகழ்வுக்கு வந்த தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டுள்ளனர்.





தென்னைமரவாடி பிரதேசம் முற்றுமுழுதாக தமிழ் மக்கள் நிறைந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லையில் திருகோணமலை மாவட்டத்தின் சிறப்பு வாய்ந்த தமிழ் கிராமமாகும் இந்த கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் 1984 ஆம் ஆண்டு சிங்கள காடையர்கள் மற்றும் இராணுவத்தினரால் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டு கிராமத்தை தீயிட்டு கொளுத்தி கிராமத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர் .

மீண்டும் 2010 க்கு பின்னர் தமிழ் மக்கள் மீள்குடியேறிய பின்னர் அப்பகுதியில் உள்ள பெருமளவான தமிழ் மக்களின் இடங்கள் சிங்களமயமாக்கபட்டிருந்த நிலையில் கந்தசாமி மலை முருகன் கோவில் அமைந்துள்ள பகுதியும் தொல்லியல் பிரதேசம் என குறிப்பிட்டு புல்மோட்டை அரிசிமலை பகுதியில் உள்ள பனாமுரே திலகவன்ச என்ற பிக்குவும் இராணுவத்தினரும் தமிழ் மக்களின் வழிபாடுகளுக்கு தடை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்கா காவல்துறையால் ஊடகவியலாளருக்கு வெற்றிலைக்கேணியில் அச்சுறுத்தல்!

பெப்ரவரி 24, 2024



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியடி பகுதியில் வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து மருதங்கேணி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும், மருதங்கேணியில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலையே குறித்த விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

படுகாயமடைந்த இரு இளைஞர்களும் மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த மருதங்கேணி போக்குவரத்து பொலிசார் விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்தவளைச் சம்பவ இடத்திற்கு மருதங்கேணி பொலிசார் சீருடையிலும் சிவில் உடையில் வந்திருந்தனர்.

சம்பவம் அறிந்து செய்தி சேகரிக்க சென்ற வடமராட்சி கிழக்கு ஊடகவியலாளரைச் செய்தி சேகரிக்க விடாது சிவில் உடையில் வந்த பொலிசார் தடுத்தது நிறுத்தி அவரது தொலைபேசியையும் பறித்து அதில் பதிவு செய்த வீடியோ மற்றும் புகைப்படங்களை அழித்துள்ளதுடன் அவரது ஊடக அட்டை, மோட்டார்சைக்கிள் பத்திரங்கள் பறிமுதல் செய்து சிறிது நேரத்தில் மீண்டும் ஒப்படைத்துள்ளதுடன் அவர் கடுமையாக மிரட்டப்பட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளரை பணி செய்ய விடாது தடுத்து அச்சுறுத்திய பொலிசார் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். பலாலி, வயாவிளானில் மூன்று ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய சிறீலங்கா இராணுவம்!

பெப்ரவரி 23, 2024

வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினரின் இடையூறுகள், அச்சுறுத்தல்கள் தொடர்வதாக குற்றச்சாட்டுகள் காணப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணம், பலாலி, வயாவிளான் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழ் ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

மூன்று ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசிகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு அதில் இருந்த புகைப்படங்கள் மற்றும் காணொளிகளும் அழிக்கப்பட்டுள்ளன.

பிரபாகரன் டிலக்சன், சுந்தரம்பிள்ளை ராஜேஸ்கரன், சின்னையா யோகேஸ்வரன் ஆகிய மூன்று தமிழ் ஊடகவியலாளர்களே இராணுவத்தால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

தம்மை புகைப்படம் எடுத்த இராணுவத்தினர், தமது பெயர் விபரங்களையும் கேட்டு பதிவு செய்துகொண்டதாக ஊடகவியலாளர் பிரபாகரன் டிலக்சன் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம், பலாலி வசாவிளான் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள ஆலயங்களின் இராணுவத்தின் முன் அனுமதியுடன் வழிபாடுகளில் ஈடுபட பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று வெள்ளிக்கிழமை (23) காலை 8 மணியளவில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களுக்கு செல்வதற்காக பொதுமக்கள் பலாலி வீதிக்கு அருகில் அமைந்துள்ள வயாவிளான் இராணுவ குடியிருப்பிற்கு முன்னால் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதியில் குழுமியிருந்தனர்.

இதனை புகைப்படம் மற்றும் காணொளி பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டு அவர்களின் கைத்தொலைபேசியில் உள்ள காணொளிகளும், புகைப்படங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட பகுதியில் வீதியோரமாக நின்றிருந்த பொது மக்களையும், அவர்கள் ஆலயங்களுக்கு வழிபடுவதற்கு ஆயர்த்தமாவதையும் காணொளி பதிவு செய்த மற்றும் புகைப்படங்களை எடுத்த பதிவு செய்த ஊடகவியலாளர்களே அச்சுறுத்தப்பபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயங்களில் சுமார் 34 வருடங்களின் பின்னர் பொது மக்கள் வழிபாடுகளில் ஈடுபட இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வழிபாடுகளை மேற்கொள்ள 290 பக்தர்கள் தமது பெயர் விபரங்களை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.

வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 21 ஆலயங்களில், பலாலி வடக்கு ஜே/ 254 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அம்மன் கோவில், நாகதம்பிரான் அம்மன் கோவில் ஜே/238 கிராம அலுவலர் பிரிவில் உள்ள முத்துமாரி அம்மன் கோவில், ஜே/245 வசவிளான் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மனாம்பிராய் பிள்ளையார் கோவில், சிவன் கோவில், நாகதம்பிரான் கோவில், சக்தியுடையாள் அம்மன் கோவில் ஆகிய ஏழு ஆலயங்களை தரிசிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.



இவற்றில் 5 ஆலயங்களை தரிசிக்க 290 பேர் தமது பெயர் விபரங்களை சமர்பித்துள்ளனர்.

இன்றைய தினம் காலை 9 மணியளவில் பலாலி இராணுவ தலைமையகத்தின் பிரதான நுழைவாயில் ஊடாக ஆலயத்தினை தரிசிப்பதற்கு வருகைத்தந்த பக்தர்கள் இராணுவத்தினரின் பஸ் மூலம் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை வழிபாடுகளில் ஈடுபடச் செல்வோருக்கு தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்களைச் கொண்டுச் செல்ல இராணுவத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலில் பொது மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு கைத்தொலைபேசி உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் இராணுவத்தினரால் பெற்றுக்கொள்ளப்படுவதோடு, வழிபாடுகள் முடிந்து வெளியே வரும்போது குறித்த உபகரணங்களை பொது மக்கள் மீள பெற்றுக்கொள்ள முடியும் என இராணுவம் அறிவித்துள்ளதாக யாழ்ப்பாண ஊடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# யாழ். பலாலி, வயாவிளானில் ஊடகவியலாளர்களை சிறீலங்கா இராணுவத்தினர் அச்சுறுத்தியமைக்கு கண்டனம்!

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஊடகப் பேச்சாளர் சுகாஷ்

பெப்ரவரி 25, 2024

யாழ்ப்பாணத்தின் பலாலி, வயாவிளானில் ஊடகப் பணிக்காகச் சென்ற ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி, அராஜகம் புரிந்த சிறீலங்காப் படையினரின் செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊடகவியவாளர்களின் புகைப்படக் கருவிகளைப் பறித்து, ஒளிப்பதிவுகளை அழித்து சிறீலங்காப் படையினர் அராஜகம் புரிந்த சம்பம் தொடர்பிலேயே இன்று (25.02.2024) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், பேனா முனையை ஆயுத முனையால் அடக்க முற்படுவது கோழைத்தனத்தினதும் அடக்குமுறை மனோ பாவத்தினதும் வெளிப்பாடே.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகத்துறை மீதான அடக்குமுறை, இலங்கையில் ஜன நாயகம் என்ற கட்டடம் முற்றாகத் தகர்ந்து விட்டதையே மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகும் இந்த தருணத்தில் அரங்கேற்றப்பட்ட வன்முறையானது, சர்வதேசத்திற்குப் பல செய்திகளைப் பட்டவர்த்தனமாக்குகின்றது என்பதை வலியுறுத்துவதோடு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் சுயாதீன செயற்பாட்டையும் உறுதிப்



படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் கோருகின்றோம்.

இந்நிலையில், அச்சுறுத்தப்பட்ட ஊடக உறவுகளுக்கு எமது ஆதரவுக் கரங்களை நீட்டுகின்றோம் என தெரிவிக்கப்

# இலங்கை அரசைப்போலவே ஸ்ராலின் அரசும் இலங்கைத் தமிழர்களை மாற்றான்தாய் மனப்பாங்குடன் நோக்குகின்றதா வடபகுதித் தமிழ் மீனவர்களின் பாதிப்புநிலையுணர்ந்து பொறுப்புடன் செயற்படுவது அவசியம்!

### முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்!

பெப்ரவரி 25, 2024

இலங்கை அரசைப்போலவே, முதல்வர் மு.க.ஸ்ராலின் தலைமையிலான தமிழ்நாடு அரசும், இலங்கைத் தமிழர்களை மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நோக்குகின்றதா என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை யுத்தவடுக்களுடன் பலத்த துன்ப துயரங்களுடன் வாழும் இலங்கையின் வடபகுதித் தமிழ் மீனவர்களின் பாதிப்பு நிலைகளை உணர்ந்து தமிழ்நாடு அரசும், எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களும் செயற்படவேண்டுமெனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதால், இலங்கையின் வடபகுதி மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இத்தகையசூழலில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்தியமீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் இலங்கைக் கடற்படையின் குறித்த கைது நடவடிக்கையைக் கண்டித்து தமிழ்நாட்டில் மீனவர்களால் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், இம்முறை தமிழ் நாடு மக்கள் கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வழிபாடுகளையும் புறக்கணித்திருந்தனர்.

இதுகுறித்து முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி எல்லைதாண்டி, இலங்கையின் கடற்பரப்பிற்குள் நுழைந்து தமது சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக இலங்கையின் வடபகுதி கடற்பரப்புக்களான முல்லைத்தீவு, மன்னார், யாழ்பாணம் கடற்பரப்புகளுக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து இழுவைமடி மீன்பிடிச்செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்திய மீனவர்களின் இத்தகைய அத்துமீறிய வருகையால் இன்றளவும் யுத்த வடுக்களுடன் வாழும் வடபகுதித் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தென்னிலங்கை மீனவர்களுடைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் எமது வடபகுதி மீனவர்கள் மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளாகிவரும்நிலையில், இந்தியமீனவர்களது மற்றும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் எமது கடல்வளங்கள் அழிக்கப்பட்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுகின்றன. இதனை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அதேவேளை தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் சேதமாக்கப்படுகின்ற சம்மவங்களும் பதிவாகின்றன.

இவ்வாறாக எமது மீனவர்களின் வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்டு, வாழ்வாதார மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களும் சேதமாக்கப்பட்டால், எமது மீனவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்வது.

எனவே தயவுசெய்து எல்லைதாண்டிவந்து எமது கடல்வளங்களையும், எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்தாமல், எமது மீனவர்களை வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய சட்டவிரோத செயற்பாடுகளாலும், இலங்கையின் தற்போதைய பொருளாதாரச் சூழலாலும் மிக மோசமாக எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தொப்புள்கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்கள் எமக்கு உதவுவார்கள் என எண்ணிக்கொண்டிருக்கும் போது, தமிழ்நாட்டிலிருந்தும், பாண்டிச்சேரியிலிருந்தும் சில இழுவைமடித் தொழிலாளர்களால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது.

எமது மீனவர்களின் இத்தகைய பாதிப்பு நிலைமைகள் தமிழ்நாடு மற்றும், பாண்டிச்சேரி மீனவர்களுக்குப் புரியவில்லையா, தமிழ்நாடு முதல்வருக்கும், அங்குள்ள ஏனைய அரசியல் பிரதிநிதிகளுக்கும் எமது மீனவர்களின் இத்தகைய அவலநிலைகள் புரியவில்லையா?

எம்மை மாற்றான்தாய் மனப்பான்மையோடு நோக்கும் இலங்கை அரசைப் போலவே, தமிழ்நாடு அரசும், அங்குள்ள எமது தொப்புள்கொடித் தமிழ் உறவுகளும் எம்மை மாற்றான்தாய் மனப்பான்மையோடு நோக்கினால் நாம் என்னசெய்வது.

இவ்வாறான நிலையில் தற்போது எம்மை இலங்கைஅரசும், தமிழ்நாடு அரசும் சேர்ந்து எம்மை அழித்துவிடுங்கள் என்று கூறுவதைத் தவிர எம்மால் வேறேதும் கூறமுடியாதுள்ளது.

எனவே தொப்புள்கொடி உறவுகளான இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் பாதிப்பு நிலையுணர்ந்து, பொறுப்புடன் செயற்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# யாழ். மாதகல் சம்பில்துறை கடலில் இறங்க தடை விதித்த சிறீலங்கா சிங்கள கடற்படையினர்! நூற்றுக்கணக்கான தமிழ் கடற்தொழிலாளர்கள் பாதிப்பு!

பெப்ரவரி 27, 2024

யாழ்ப்பாணம் - மாதகல் சம்பில்துறை (ஜம்புகோள பட்டினம்) விகாரைக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என சிங்கள கடற்படையினர்




உள்ளூர் மீனவர்களிற்கு தடை விதித்துள்ளனர்.

சம்பில்துறை பகுதியில் அமைந்துள்ள சங்கமித்த விகாரையின் பின்புறமாக உள்ள கடற்பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என கடந்த 2013ஆம் ஆண்டு கடற்றொழிலாளர்களுக்கு கடற்படையினர் தடை விதித்திருந்தனர்.

இந்நிலையில், அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, அப் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட கடற்படையினர் அனுமதித்தனர்.

தற்போது அப்பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி, விகாரையின் பின் பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அறிவித்துள்ளார்.

அத்துடன் அப்பகுதிக்கு அருகில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டால் கடற்படையினர் உள்ளூர் மீனவர்களை தாக்கி வருவதாக கடற்றொழில் அமைப்புக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளன.




ஏற்கனவே உயர்பாதுகாப்பு வலயத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில் தற்போது கடலிலும் மீனவர்கள் தாக்கப்படுவது அதிகரித்துள்ளது.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது கானல் நீராகவே உள்ளது!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சந்திவேல்

பெப்ரவரி 27, 2024

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது கானல் நீராகவே உள்ளது. காலத்தை இழுத்து அடித்து நீதியை மறுக்கும் செயற்பாடுகளையே அனைத்து ஆட்சியாளர்களும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.









அவரால் செவ்வாய்க்கிழமை (27) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கில் அரச பாதுகாப்பு படைகளால் யுத்த காலப்பகுதியில் பலவந்தமாக கடத்தப்பட்டு காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் நீதி கேட்டு தொடர் போராட்டம் ஆரம்பித்து அதன் ஏழாவது நிறைவு தினத்திலே மீண்டும் ஒரு கவனயீர்ப்பு போராட்ட பேரணியை நடத்தி ஐ.நா மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இக் கோரிக்கைகள் நியாயமானது. உறவுகளை பறிகொடுத்த வலிகளோடு தொடர் போராட்டங்களை நடத்தி வரும் வடகிழக்கு காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் தமது முழுமையான ஆதரவை நடத்துவதோடு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுமாறு ஐ.நா மனித உரிமை பேரவையை வலியுறுத்துகின்றது.

யுத்த காலத்தில் தமது உறவுகளை தேடி அலைந்த அவர்களின் உறவுகள் ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அமைப்பு ரீதியில் நீதி கேட்டு தலைநகர் உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் போராட்டங்களை நடாத்தியவர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். தன் உறவுகளை தேடி தேடித் மன வேதனைக்கு உட்பட்டவர்கள் பல்வேறு நோய் தாக்கத்தின் காரணமாகவும், வயது மூப்பினாலும், இரத்த உறவுகளின் பிரிவினாலும் இது வரை 200க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

இதனை இயற்கை மரணம் என கடந்து விட முடியாது. இலங்கை அரசு நீதி மறுத்து இவர்களை கொலை செய்தது என்றே அடையாளப்படுத்தல் வேண்டும். இந்நிலை இனியும் தொடர சர்வதேச மனித உரிமை அமைப்புகளும்,ஐ.நா மனித உரிமை பேரவையும் இனியும் இடமளிக்கக் கூடாது என்பது எமது உருக்கமானதும் அளுத்தமானதுமான வேண்டுகோள்.

ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 ஆண்டுகளை கடந்து கொண்டிருக்கின்ற நிலையிலும் வலிந்து காணமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது கானல் நீராகவே உள்ளது. இது விடயம் தொடர்பில் அரசின் செயற்பாடுகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கும், தமிழர்களுக்கும் மட்டுமல்ல வடகிழக்கிற்கு வெளியே நீதி மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் நம்பிக்கை இல்லை. காலத்தை இழுத்து அடித்து நீதியை மறுக்கும் செயற்பாடுகளையே அனைத்து ஆட்சியாளர்களும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்.

இலங்கையில் நிகழ்ந்த பல்வேறு பாரதூர சம்பவங்கள் தொடர்பில் ஆழ ஆராய்ந்து அதன் உண்மையை கண்டறிவதற்கும், நீதியை நிலை நாட்டுவதற்கும், அவ்வாறான நிகழ்வுகள் மீழ் நிகழ்வதை தடுப்பதற்கு என 1956 லிருந்து இதுவரை 36 வரை ஆணை குழுக்கள் அமைக்கப்பட்ட போதும் அவ் ஆணை குழுக்களின் அறிக்கைகள் முழுமையாக மக்கள் முன் வைக்காது மறைக்கவே ஆட்சியாளர்கள் முயற்சித்துள்ளனர். அது மட்டுமல்ல அவ் ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கும் எந்த ஒரு ஆட்சியாளருக்கும் துணிவு இருக்கவில்லை.காரணம் உண்மையை மூடி மறைத்து அரசியல் குளிர் காய்வதே அவர்களின் நோக்கம்.

அவ்வாறே யுத்தம் முடிவற்றதன் பின்னர் காணமலாக்கப்பட்டோர் தொடர்பிலும் பல்வேறு ஆணை குழுக்கள் நியமிக்கப்பட்டன.அவ் ஆணைக்குழுக்கள் நியாயமான பரிந்துரைகளை முன் வைத்த போதும் அதனை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் துணியவில்லை.

தொடர்ந்தும் சர்வதேசத்தின் கண்களில் மண்ணை தூவி உள்நாட்டு பொறிமுறையின் கீழ் நீதியை நிலைநாட்டப் போவதாக அறிவிக்கலாம். இதற்கு வலிந்து காணாமலாக்கட்ட உறவுகளின் அமைப்போ நாமோ உடன்பட போவதில்லை என உரத்து கூறுகின்றோம். ஆதலால் இச்சந்தர்ப்பத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு சர்வதேச மனிதாபிமான அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும், ஐ.நா மனித உரிமை பேரவைக்கு அளுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சர்வதேச மனிதாபிமான அமைப்புகளும், இலங்கை ஆட்சியாளர்கள் பெற்றுக் கொடுக்கப் போவதாக கூறப்படுகின்ற உதவிகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக தேவையை நிறைவேற்றலாமே தவிர அதன் மூலம் எதிர்பார்க்கும் நீதியை அடைய முடியாது என்பதே உண்மை. எனவே சர்வதேச உதவி அமைப்புகளும், நலன் விரும்பிகளும் வலிகளோடு வாழும் உறவுகளின் அமைப்பால் ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் விடயத்திலும், யுத்த காலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், ஐ. நா மனித உரிமை பேரவையும் இலங்கை ஆட்சியாளர்களை இனியும் நம்பக் கூடாது என்பதோடு எனது வாலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அவசர உடனடி நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என ஐநா மனித உரிமை பேரவையிடம் வேண்டிக் கேட்டுக் கொள்வதோடு யுத்த குற்றவாளிகளை அடையாளம் கண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வழிவகுக்குமாறும் தமிழர்கள் மீது தொடர்ந்து முன்னெடுக்கும் இன அழிப்பினை சர்வதேசம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது என்பது அதனை அங்கீகரிப்பதாக அமைந்து விடுமாதலால் ஆதலால் அதனை தடுப்பதற்கு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# மன்னார் தீவில் அரசு காற்றாலைத் திட்டத்தை கைவிடாதவரை தொடர்ந்து நாம் போராடுவோம்!

## மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லய்னல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

பெப்ரவரி 27, 2024

தமிழர் தாயகத்தில் இன்று எற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளன. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின்தள்ளப்பட்டு வருகின்றது. இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மன்னார் தீவில் முன்னெடுக்கப்படும் காற்றாலை திட்டத்தால் ஏற்படும் ஆபத்தை தெரிவித்தும் அரசு கவனிக்காது வருகின்றது என மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லய்னல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்ட இறை மக்களுக்கு தவக்காலத்தில் விடுக்கும் செய்தியில் தெரிவித்திருப்பதாவது

திருச்சபையின் திருவழிப்பாட்டு ஆண்டில் மீண்டும் ஒரு தவக்காலத்தில் கத்தோலிக்க மக்களாகிய நாம் காலடி பதித்துள்ளோம்.

இத்தவக்காலம் அருளின் காலமாகவும், மனமாற்றத்தின் காலமாகவும். ஊனியல்புக்குரிய பழைய பாவ இயல்புகளை களைந்துவிட்டு செபம், தவம். தானதருமம் வழியாக இறைவனோடும் தன்னோடும் அயல்வர்களோடும் ஒப்புரவாக வேண்டிய காலமாக இந்த தவக்காலம் அமைந்துள்ளது.

இன்றைய நாட்டின் அரசியல் தொடர்பாக ஆயர் அவர்கள் இம்மடலில் தெரிவிக்கையில் தமிழர் தாயகத்தில் இன்று எற்பட்டுள்ள பாரிய உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளன.

தேசிய அரசியல் கட்சிகளுக்கிடையே தொடர்ந்தும் இழுபறி நிலையே தொடர்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின்தள்ளப்பட்டு வருகின்றது.

இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியில் உள்ளவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்கு பல்வேறு காய்நகர்த்தல்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

ஆகவே இந்நிலையில் ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படவும் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவும் தொடர்ந்து நாம் செபிப்போம்.

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பெரும்போக நெல் அறுவடை நடைபெறும் இக்காலத்தில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லாத சூழ்நிலையில் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்கள் நுண்நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருள் பாவனையின் தாக்கத்தால் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி விட்டது.



மன்னார் தீவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 250 மெகா வாட் காற்றாலை சக்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முனைப்போடு செயல்படுகின்றது.

இத்திட்டத்தால் மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் குறித்து எம்மாலும் பொது அமைப்புக்களாலும் பல சந்தர்ப்பங்களில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்கம் இத்திட்டத்தை கைவிடுவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் தொடர்ந்தும் நாம் நமது எதிர்ப்பை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவோமாக என இவ்வாறு மன்னார் மாவட்ட இறை மக்களுக்கு மன்னார் ஆயர் தனது தவக்கால மடலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சாந்தனின் மரணத்திற்கு பதில் வேண்டும்!

## குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன்

பெப்ரவரி 28, 2024

சாந்தனின் மரணத்திற்கு இந்திய, இலங்கை அரசுகளும் தமிழ் தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் ஒரே இரவில் பேச்சுவார்த்தை மூலம் விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தனை உடன் விடுதலை செய்ய முடியாமல் போனது என மு.கோமகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு இலங்கையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு




நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித் துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பல்கலைக்கழக முன்றலில் போராட்டம்!

பெப்ரவரி 28, 2024




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் பல்கலைக்கழக முன்றலில் இன்றைய நாள் புதன்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்றைய நாள் புதன்கிழமை மற்றும் நாளைய நாள் வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாள் வேலைநிறுத்த போராட்டம் இடம் பெற்றுவருகின்ற நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.



பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சனைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும் அதேசமயம் நாளைய தினம் வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தடுத்துவைக்கப்பட்டுள்ள மற்றும் காணாமலாக்கப்பட்டுள்ள பிள்ளைகளை தேடி அலையும் தாய்மார்களின் ஒட்டுமொத்த குறியீடு சாந்தனின் தாயார்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

பெப்ரவரி 29, 2024

இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் ஆயிரக்கணக்கானோர் தடுத்துவைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில்... அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக திரு சாந்தன் அவர்களின் தாயார் இருக்கிறார். என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

சாந்தனின் மரணம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

33 வருடம் இந்திய மண்ணில் தனிமை சிறையில் போதிய மருத்துவ வசதிகள் அடைக்கப்பட்டிருந்த திரு சாந்தன் அவர்கள் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னரும் இந்திய சிறிலங்க அரசுகளின் மெத்தனப்போக்கால் ஒன்றரை வருடம் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில்... காலமானார் எனும் செய்தி எம்மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

33 வருடங்களுக்கு பின்னர் தன் மகனின் முகத்தை காணும் ஏக்கத்தில் காத்திருந்த அவரின் தாயார் மற்றும் குடும்பத்தவர்களின் துயரினை எந்த வார்த்தைகளும் ஆற்றுப்படுத்தப் போவதில்லை.

அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

கொடிய இன அழிப்புபோரினால் சிறீலங்கா இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் ஆயிரக்கணக்கானோர் தடுத்துவைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில்...

அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக திரு சாந்தன் அவர்களின் தாயார் இன்று இருக்கிறார்.



இனியாவது தடுத்துவைக்கப்பட்டவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் விடுதலைகள் துரிதப்படுத்தப் படவேண்டும். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே.

# இந்தியா – இலங்கை மீனவர் நெருக்கடி; இரு தரப்பிலும் எதிர்ப்பு வலுப்பது ஏன்?

பெப்ரவரி 29, 2024

இலங்கை சட்டங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே, எல்லை மீறிய இந்திய மீனவர்கள் மூவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்பதை இந்திய மீனவர்களும் மற்றும் அரசியல் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென தமிழ் மீனவர் சங்கத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

"இலங்கையிலுள்ள நீதிமன்றத்தினால் அரசியல் அமைப்பில் உள்ள சட்டத்திற்கு ஏதுவாகவே வழங்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக இந்திய மீனவர்கள் இரண்டு, மூன்று பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அச்செயலானது எவ்வித அடாவடித்தனமான செயலாக தென்படவில்லை. எல்லைக்குள் அத்துமீறி வந்தமையாலேயே அவர்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய தேவை வந்துள்ளது," யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீகந்தவேள் புனிதப்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப் பிட்டுள்ளார்.

எல்லை மீறும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இலங்கை கடல் எல்லையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 4) கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஏக மனதாக தீர்மானித்துள்ளதாக அவர் இந்த ஊடக சந்திப்பில் அறிவித்தார்.

எல்லை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு, இலங்கை அரசாங்கத்தை கோரும் இந்திய அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஸ்ரீகந்தவேள் புனிதப்பிரகாஷ் இந்த ஊடக சந்திப்பில் வலியுறுத்தினார்.

"சில இந்திய அரசியல் தரப்புகள் எமது அரசாங்கத்துடன் பேசி அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுள்ளார்கள். இது எந்த வகையிலும் நியாயமான செயற்பாடாக தென்படவில்லை. இது போல செயற்பாடுகள் இங்கு இடம்பெறுமானால் எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகவே போய்க்கொண்டிருக்கும் என்பதை எமது இலங்கை அரசாங்கமும் கணக்கில் எடுக்க வேண்டும்."

இலங்கை மீனவர்களை காப்பாற்ற வேண்டிய கடமை மற்றும் பொறுப்பு இலங்கை கடற்படை மற்றும் நீதித்துறைக்கு காணப்படுவதாகவும் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீகந்தவேள் புனிதப்பிரகாஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கடல் பரப்பில் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட, இரண்டு படகுகளையும் அதிலிருந்து 23 மீனவர்களையும் இலங்கை கடற்படையினரால் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப் பட்டனர்.

இந்த வழக்கு கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 23 மீனவர்களில் 20 மீனவர்களை விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், இரண்டு விசைப் படகு ஓட்டுநர்களுக்கு தலா ஆறு மாத காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதேபோல் இலங்கை கடற்படையால் 2019ஆம் ஆண்டு எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் ஒருவர், அதேத் தவறை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமையால் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

இலங்கை கடற்படை கைது செய்யும் தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட இந்த தண்டனைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த இராமேஸ்வரம் மீனவர்கள், இந்த வருட கச்சத்தீவு திருவிழாவைப் புறக்கணித்தனர்.

மேலும், இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதை கண்டித்தும், மீனவர்களின் படகுகளை இலங்கை அரசுடைமையாக்குவதை கண்டித்தும், 700றக்கும் மேற்பட்ட இராமேசுவரம் மீனவர்கள் கடந்த 18ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மேலும் இராமேசுவரம் தங்கச்சி மடத்தில் மீனவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

மீனவர்களின் உண்ணாவிரதப் போராட்டக் களத்திற்குச் சென்ற, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீடக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் மீனவர்களுக்கு சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்படும் எனவும் வாக்குறுதி அளித்த நிலையில், உண்ணாவிரதப் போராட்டம் நேற்றைய தினம் (பெப்ரவரி 25) முடிவுக்கு வந்தது.

இந்திய இழுவைப் படகுகள் எல்லைமீறி இலங்கையின் வடக்கு கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுத்து, வடக்கு தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை முற்கையிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் அமைப்புக்கள் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி போராட்டத்தை முன்னெடுத்தன.

இந்திய துணை உயர்ஸ்தானிகரிடம் தமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கைகள் அடங்கிய மஜரையும் கையளித்தனர்.

"நாங்கள் இந்திய இழுவைப் படகால் சாகப்போகின்றோம். இது தொடர் போராட்டமாகத்தான் மாறப்போகிறது. ஒரு சில நாட்களில் முடிவு தரவேண்டும். தராத பட்சத்தில் தொடர் போராட்டம் ஒன்று நடக்கும். கடலில் அசம்பாவிதங்களும் நடக்கும்" என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அத்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் இரட்ணகுமார் இதன்போது எச்சரித்திருந்தார்.

# தமிழீழத்தின் மைந்தன் சாந்தனின் வித்துடல் நாளை வெள்ளிக்கிழமை தமிழீழத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது!

பெப்ரவரி 29, 2024

சென்னையில் உயிரிழந்த சாந்தனின் வித்துடல் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.









முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் செய்யாத குற்றத்திற்காக தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப் பட்டிருந்தார். அவர் இலங்கை செல்ல இந்திய மத்திய அரசு கடந்த 24ஆம் திகதி அனுமதி அளித்த நிலையில், கல்லீரல் செயலிழப்பு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத் துவமனையில் சாந்தன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், திடீரென்று(?) நேற்றுக் காலை மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சாந்தன் உயிரிழந்தார்.

அவரின் உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், சாந்தனை ஏன் இலங்கைக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தப் பட்டது? என தமிழக அரசிடம் கேள்வி எழுப்பியது.

இந்நிலையில், சாந்தனின் உடலை இலங்கைக்கு அனுப் புவதற்கு தேவையான உதவிகள், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை நியமித்து நட வடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சாந்தனின் உடலை இலங்கை கொண்டு செல்லத் தேவையான தூதரக அனுமதி, ஆவணங்கள் அனைத்தும் உடனடியாக வழங்கப்படும் என்று மத்திய அரசுத் தரப்பில் நீதிமன்றில் உறுதி அளிக்கப்பட்டது.

இந் நிலையில் முன்னணி சட்டத்தரணி புகழேந்தி தலைமையில் நாளை சாந்தனின் வித்துடல் நாளை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக தமிழீழம் யாழ்ப்பாணத் திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

# குருந்தூர் மலை விவகாரத்தில் கைதானவர்களின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!

பெப்ரவரி 29, 2024

குருந்தூர் மலை தொடர்பான வழக்கொன்று இன்று வியாழக் கிழமை (29) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த வழக்கு எதிர் வரும் ஜூலை 25ஆம் திகதிக்கு மீண்டும் தவணையிடப்பட்டது.

B1053 /2022 என்ற இலக்கமுடைய வழக்கு தொடர்ச்சியாக தவ ணைகள் வழங்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில், இன்று மீண்டும் வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.



இதன்போது, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரை ராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

“நீதிமன்ற தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும்”, “சைவ வழி பாடுகளை மேற்கொள்ள எந்தவித இடையூறுகளும் விளைவிக் கக் கூடாது”, “குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் நில அபகரிப்பு தடுக்கப்பட வேண்டும்” என வலியுறுத்தி தண்ணி முறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் கடந்த 2022 செப்டெம்பர் 21ஆம் திகதி குருந்தூர் மலையில் பாரிய ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்ட முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோரை விசாரணைக்காக முல்லைத்தீவு பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

அதையடுத்து, பொலிஸ் நிலையம் சென்ற இருவரையும் பொலிசார் கைது செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கே இன்று நீதிமன்றத்தில் விசாரிக் கப்பட்டது.

மேலும் இந்த விவகாரத்தில் சந்தேக நபர்களாக பெயர் குறிப் பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன் னாள் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் அடுத்த வழக்கு தவணையில் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டுமெனவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் விடுதலை!

பெப்ரவரி 29, 2024

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விடுவிக்கப்பட்டுள்ளார்.




சிறீலங்கா கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று(29) வழங்கிய உத்தரவின் கீழ் இவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வழக்கிற்காக இந்தியாவிலிருந்து சிவாஜிலிங்கம் நேற்று இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்பியிருந்தார்.

வழக்கானது இலங்கை பயங்கரவாத விசாரணை பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு தொடர்பான சமர்ப்பணங்களை முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சார்பில் நீதிமன்றில் முன் னிலையான சட்டத்தரணி கடந்த 24ஆம் திகதி முன்வைத் திருந்திருந்தார்.

இந்நிலையில், சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம் வழக்கில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை விடுவித்து தீர்ப்பளித்துள்ளது.






# கனடா–இந்தியா உறவில் விரிசல் வெளியுறவுத்துறை மந்திரி மெலனி ஜூலியை சந்தித்த இந்திய மந்திரி ஜெயசங்கர்!

பெப்ரவரி 17. 2024

கனடா வெளியுறவுத்துறை அமைச்சரை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துள்ளார். ஜெர்மனி தலைநகர் முனிச்சில் சர்வதேச பாதுகாப்பு மாநாடு நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த தலைவர்கள், மந்திரிகள் உள்பட பலர் கலந்துகொண்டுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா உள்பட பல்வேறு நாடுகளில் வெளியுறவுத்துறை மந்திரிகளும் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் பங்கேற்றுள்ளார். இந்நிலையில், இந்த மாநாட்டின் ஒருபகுதியாக கனடா வெளியுறவுத்துறை மந்திரி மெலனி ஜூலியை இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் நேற்று சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு உள்பட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதேவேளை இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இடையிலான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.



# ஒன்ராரியோவில் பனிப்பாறை உருகுதல் தொடர்பில் காவல்துறை எச்சரிக்கை!

பெப்ரவரி 19, 2024

ஒன்ராரியோவில், பனிப்பாறை உருகுதல் தொடர்பில்




பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒன்றாரியோவின் நோர்த் பே, மரினா பகுதியில் பனி படர்ந்த பகுதிகளில் பயணம் செய்யக் கூடிய விசேட ஊர்தி நீரில் மூழ்கியுள்ளது.

எனினும், இந்த சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பனிபடர்ந்த பகுதிகள் பாதுகாப்பானதல்ல தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பனிபடர்ந்த நீர் நிலைகளில் மக்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவினால் மூடப்பட்ட நீர் நிலைகளின் மேற்பரப்பில் நடமாடுவது , விளையாடுவது, வாகனம் செலுத்துவது போன்ற



செயற்பாடுகளில் ஈடுபடுவது ஆபத்தானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடாவில் வாடகைத் தொகை அதிகரிப்பு!

பெப்ரவரி 19, 2024

கனடாவில் வாடகைத் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் கனடாவில் சராசரி வாடகைத் தொகை 2196 டொலர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாடகைத் தொகை கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் பத்து வீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

Rentals.ca என்ற இணைய தளம் இது தொடர்பிலான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கேள்வி அதிகரிப்பு காரணமாக கனடாவில் வீடுகளின் வாடகைத் தொகை தொடர்ச்சியாக அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கனடாவில் மிகவும் அதிகமான வாடகைத் தொகை பதிவாகும் நகரமாக வான்கூவார் கருதப்படுகின்றது.

ஒரு படுக்கை அறையைக் கொண்டு வாடகை வீடுகளின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வான்கூவாரில் ஒரு படுக்கை அறையைக்கொண்ட வீடு ஒன்றின் சராசரி வீட்டு வாடகைத் தொகை 2683 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கனடாவில் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலை!

பெப்ரவரி 20, 2024

கனடாவில் வாடகைக் குடியிருப்பாளர்கள் நிதிநெருக்கடி நிலையையும் தனிமையையும் உணர்வுதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர்களுடன் ஒப்பீடு செய்யும் போது வாடகைக் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரம் குறைவானதாக காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ம் ஆண்டு மற்றும் 2022ம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடகைக் குடியிருப்பாளர்கள் தங்களது நிதி தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

55 வயதுக்கும் மேற்பட்டவர்களே அதிகளவில் வீடுகளுக்கு சொந்தக்காரர்களாக உள்ளனர் எனவும் இளம் தலைமுறையினர் வீடு கொள்வனவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்ளட்ளது.

வட்டிவீதம், சனத்தொகை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு ஏதக்களினால் வாடகை குடியிருப்புக்களுக்கான கேள்வி அதிகரித்




துள்ளது.

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் வீட்டில் யாருமில்லை என விதிக்கப்பட்ட வரி!

பெப்பரவரி 21, 2024

கனடாவில் வீட்டில் யாருமில்லை என்ற அடிப்படையில் விதிக்கப்பட்ட வரியினால் ஒரு தம்பதியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.




பிரிட்டிஷ் கொலம்பியாவை சேர்ந்த தம்பதியினருக்கு எதிர்பாராத விதமாக இவ்வாறு வரி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீடுகளை காலியாக வைத்திருப்பவர்களுக்கு மாகாணத்தில் ஓர் வரி அறவீட்டு முறை காணப்படுகின்றது.

வேகன்சி வரி என இந்த வரிக்கு பெயரிடப்பட்டுள்ளது. அதாவது வீடுகளை பயன்படுத்தாது வைத்திருப்பவர்களிடமிருந்து இந்த வரி அறவீடு செய்யப்படுகின்றது.

எனினும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் வாங்கூவார் தீவுகளைச் சேர்ந்த மெடிசன் மற்றும் சார்லட் பக்கீரா தம்பதியினர் வீட்டில் வசித்து வந்த நிலையில் அவர்களுக்கு வரி செலுத்துமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் லேடிஸ்மித் பகுதியில் இவர்களது வீடு அமைந்துள்ளது. ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக 13,000 டாலர்களை செலுத்த வேண்டும் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த தம்பதியினர் குறித்த வீட்டை கொள்வனவு செய்துள்ளனர்.

வீட்டிற்கு வரி செலுத்த போதியளவு பணமில்லாத காரணத்தினால் வீட்டை இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் இருப்பதாக குறித்த தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளது!

பெப்ரவரி 21, 2024

கனடாவில் பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் கனடாவில் பணவீக்க வீதம் 2.9 வீதமாக பதிவாகியுள்ளது.

பெற்றோலின் விலை வீழ்ச்சி பணவீக்கத்தில் ஏற்பட்ட சரிவில் முக்கிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

பணவீக்க வீதம் 3.3 வீதமாக காணப்படும் என நிபுணர்கள் எதிர்வுகூறியிருந்த நிலையில் பணவீக்க வீதம் 2.9 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வருடாந்த அடிப்படையில் பெற்றோலின் விலை 4 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

எவ்வாறெனினும் அடகுக் கடன் வட்டி வீதங்கள் காரணமாகவே நாட்டில் பணவீக்க நிலைமை தொடர்ந்தும் அதிகரிக்கும் போக்கினை பதிவு செய்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# கனடாவில் காட்டுத் தீ குறித்து விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

பெப்ரவரி 22, 2024

கனடாவில் இந்த ஆண்டில் கடுமையான காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகும் சாத்தியம் உண்டு என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பருவ காலத்தில் காட்டுத் தீ ஆபத்தானதாக அமையக் கூடும் என தெரிவித்துள்ளது.

அவசர ஆயத்த அமைச்சர் ஹார்ஜிட் சஜ்ஜான் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மாகாண அரசாங்கங்களின் அவசர ஆயத்த அமைச்சர்களுக்கும் மத்திய அரசாங்க பிரதிநிதிகளும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண அரசாங்கங்கள் காட்டுத் தீ கட்டுப்படுத்தல் குறித்த சகல வளங்களையும் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2023ம் ஆண்டில் கனடாவில் வரலாறு காணாத அளவிற்கு காட்டுத் தீ பரவுகை ஏற்பட்டு பெரும் அழிவுகளை கனடாவின் சில மாகாணங்கள் எதிர்நோக்கியிருந்தன.

கியூபெக், அல்பேர்ட்டா போன்ற மாகாணங்களில் கடுமையான காட்டுத் தீ அனர்த்தம் ஏற்பட்டிருந்தது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# ஒன்ராரியோவில் மிக அதிகமான சட்ட விரோத துப்பாக்கிகளை பொலிசார் மீட்டுள்ளனர்!

பெப்ரவரி 22, 2024

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் அதிக அளவில் சட்டவிரோத துப்பாக்கிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் கனடிய பாதுகாப்பு தரப்பினர் இணைந்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

குறித்த விசாரணைகளில் 274 சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் கனடாவிலும், அமெரிக்காவிலும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் அதிக எண்ணிக்கையிலானவை கைத்துப்பாக்கிகள் என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவிலிருந்து ஆயுதங்கள் கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்த சம்பவம் தொடர்பில் சுமார் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் இணையத் தீங்கு தடைச்சட்டம் மிக விரைவில்!

பெப்ரவரி 25, 2024

கனடாவில் இணையத்தில் இடம்பெறும் தீங்குகளை தடை செய்யும் சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இணையத்தில் இடம்பெறக்கூடிய குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் இந்த புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இணையத் தீங்குச் தடைச் சட்டம் தொடர்பிலான சட்ட மூலத்தை அறிமுகம் செய்வதற்கு நீண்ட காலம் தகவல் திரட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இணையத்தை பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய தீங்குகளை தடுக்கும் நோக்கில் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி போலி ஆபாச காட்சிகள் உருவாக்கி இணையத்தில் வெளியிடுதல் போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான பல்வேறு இணைய குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

நிகழ்நிலை தீங்கு தடைச் சட்டம் என்ற பெயரில் இந்த சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

லிபரல் அரசாங்கம் ஏற்கனவே இந்த சட்டத்தை அறிமுகம் செய்ய முயற்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவின் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்!

பெப்ரவரி 26, 2024

கனடாவின் பாதுகாப்பிற்கு புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட உளவுச் சேவைகளினால் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




கனடிய பாதுகாப்பு புலனாய்வுச் சேவையின் முன்னாள் நிறைவேற்று முகாமையாளர் டான் சான்டோன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவுகளில் பணியாற்றுவோரினால் தகவல்கள் கசிய விடப்படுவதே தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் என தெரிவித்துள்ளார்.

உள்ளிருந்து பகிரப்படும் தகவல்கள் மிகவும் ஆபத்தானவை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கனடாவின் காவற்துறை சேவையின் புலனாய்வு அதிகாரி கெமரூன் ஒட்டிஸ் என்பவருக்கு இரகசியங்களை பகிர்ந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கனடாவின் பாதுகாப்பு தகவல் சட்டத்தின் கீழ் முதல் தடவையாக இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிகவும் முக்கியமான இரகசியங்கள் வெளிநபர்களிடம் பகிர்ந்து கொள்ளக்கூடிய பாரிய ஆபத்து காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




பணத்திற்காகவோ அல்லது வேறும் காரணிகளுக்காகவோ இவ்வாறு தகவல்கள் கசியவிடப்படுவதனை தடுத்து நிறுத்த பாதுகாப்பு நிறுவனங்கள் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கனடா பாதுகாப்பிற்காக அதிகளவில் செலவிடும்!

## கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ

பெப்ரவரி 27, 2024

கனடா பாதுகாப்பிற்காக அதிகளவில் செலவிடும் என பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

போலந்திற்கான விஜயத்தின் போது பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இதனை அந்நாட்டு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செலவுகள் தொடர்பில் போலந்து அரசாங்கத்தின் நிலைப்பாடு வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடிய இராணுவத்தின் ஆண் மற்றும் பெண் படையினருக்கும் தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது கனடிய அரசாங்கம் மொத்த தேசிய உற்பத்தியில் 1.3 வீதத்தை பாதுகாப்பிற்காக செலவிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பாதுகாப்பு செலவு மொத்த தேசிய உற்பத்தியில் குறைந்தபட்சம் இரண்டு வீதமாக பேணப்பட வேண்டுமென நேட்டோ அமைப்பு கோரியுள்ளது.

எனினும், இந்த இலக்கு இதுவரையில் கனடாவினால் எட்டப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் நேட்டோ படையினருக்கு பூரண ஒத் துழைப்பு வழங்கப்படும் என கனடிய பிரதமர் ட்ரூடோ போலந் தில் வைத்து தெரிவித்துள்ளார்.



# தமிழக செய்திகள்



## ஆதிச்சநல்லூர், கீழடி ஆய்வறிக்கைகளை வெளியிடுக; இந்திய அரசுக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் வலியுறுத்தல்!

பெப்ரவரி 15, 2024

11.02.2024 ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் ஆட்சிக்குழுவின் கூட்டம் பழ. நெடுமாறன் தலைமை யில் தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடைபெற்றது.

துணைத் தலைவர்கள் கவிஞர் காசி ஆனந்தன், சா. இராமன், துரை. மதிவாணன், சி. முருகேசன், த. பானுமதி, பொதுச் செயலாளர்கள் ந.மு. தமிழ்மணி, ஜோ. ஜான்கென்னடி, செயலாளர் து. குபேந்திரன், இலக்கிய முற்றத் தலைவர் வி. பாரி உள்பட ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

2022-2023 ஆண்டிற்கான வரவு-செலவு கணக்கை பொதுச் செயலாளர் ஜோ. ஜான்கென்னடி கூட்டத்தில் முன் வைத்து உரையாற்றினார். வரவு-செலவு கணக்கிற்கு ஆட்சிக் குழுக் கூட்டம் ஒப்புதல் அளித்தது.

இக்கூட்டத்தில் சி. முருகேசன், சா. இராமன், ஆத்மநாதன், து. குபேந்திரன், அறிவுறுவோன், சு. பழனிராசன், வேங்கடேசன், கடவூர் மணிமாறன், நல்லதுரை, பானுமதி, காசி ஆனந்தன் உட்பட பலர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இறுதியாக உரையாற்றிய பழ. நெடுமாறன், உறுப்பினர்களின் கருத்துகளை வரவேற்றும், அவைகள் நிறைவேற்றப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை பொதுச் செயலாளர் ந.மு. தமிழ்மணி முன்மொழிந்தார்.

இரங்கல் தீர்மானம்

1. தொல்லியல் அறிஞர், உலகப் பெருந்தமிழர் புலவர் செ. இராசு அவர்கள், வழக்கறிஞர் தடா சந்திரசேகர் ஆகியோரின் மறைவிற்கு ஆட்சிக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

2.வள்ளலார் அவர்களின் பெயரில் பன்னாட்டு ஆய்வு மன்றம் அமைக்கும் திட்டத்தினை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பதை இந்த ஆட்சிக்குழு வரவேற்றுப் பாராட்டுகிறது. வள்ளலார் அவர்களின் தத்துவச் சிந்தனைகளை உலகெங்கும் பரப்ப வேண்டியது இன்றியமையாததாகும். அந்தப் பணியினைத் தொடக்கி வைத்திருக்கும் முதல்வருக்கு இக்குழு தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

வள்ளலார் நிறுவிய சத்திய ஞானசபையின் முன்னால் அமைந்திருக்கும் பெருவெளியில் ஆண்டுதோறும் தைப்பூசத் திருநாளன்று இலட்சக்கணக்கான மக்கள் கூடி அவரை வழிபாடு செய்கிறார்கள். அந்த இடத்தில் பன்னாட்டு ஆய்வு மன்றக் கட்டடத்தை எழுப்பாமல் அதற்கு அருகேயுள்ள வேறு இடத்தில் இந்த மையத்தை அமைக்க முன்வருமாறு முதல்வரை இக்குழு வேண்டிக்கொள்கிறது.

3.1983ஆம் ஆண்டிலிருந்து கடந்த 40 ஆண்டு காலமாக தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படைத் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது. இதுவரை 1000த்திற்கும் மேற்பட்ட மீன வர்கள் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள். பல்லாயிரக கணக்கானவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். ஏராளமான தமிழக மீனவர்கள் சிங்களச் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பல்வேறு சித்ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் படகுகள், வலைகள் மற்றும் உடைமைகள் பறி முதல் செய்யப்பட்டுள்ளன. இந்திய குடிமக்களான தமிழ்நாட்டு மீனவர்களைக் காக்கும் கடமையிலிருந்து முற்றிலுமாக தவறிவிட்ட இந்திய அரசை இக்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.



இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபத்தில் இந்தியக் கடலோரக் காவல்படை நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட் டிருக்கிறது. ஆனாலும், அத்துமீறி நமது மீனவர்களைத் தாக்கிவரும் சிங்களக் கடற்படை மீது நடவடிக்கை எடுத்து நமது மீனவர்களைக் காப்பதற்குக் கடலோரக் காவல்படை இதுவரை ஒருமுறைகூட எவ்விதமான எதிர் நடவடிக்கையும் மேற்கொள்ளாததை ஆட்சிக்குழு மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் ஊர்க் காவல்படை அமைக்கப்பட்டு ஊர் தோறும் செயல்பட்டு வருகிறது. அதைப்போல மீனவர்கள் காவல்படை ஒன்றை அமைத்து, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்குவதற்குத் தமிழக அரசு முன்வரவேண்டும் என ஆட்சிக்குழு வேண்டிக்கொள்கிறது.

4.இராசீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களில் 19பேரை முதலிலும், தற்போது 7தமிழர்களையும் இந்திய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது. ஏறத்தாழ 31 ஆண்டு காலம் சிறையில் சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாகி வெளிவந்திருப்பவர்களில் நால்வர் ஈழத் தமிழர்கள் என்பதால், அவர்களை மீண்டும் சிறப்பு முகாம் என்ற பெயரில் சிறையில் வைத்திருப்பதை இக்குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இதற்கு முன்பாக விடுதலையான 19தமிழர்களில் 9பேர் ஈழத் தமிழர்கள் என்பதையும், அவர்களும் இவ்விதமே சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்ட போது, உயர்நீதிமன்ற தலையீட்டின் பேரில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள் என்பதை இந்திய அரசின் கவனத்திற்கு இக்குழு கொண்டு வருகிறது. எனவே இந்த நால்வரையும் உடனடியாக விடுதலை செய்து அவர்கள் விரும்பும் நாட்டிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென இக்குழு வேண்டிக்கொள்கிறது.

5.கீழடியில் அகழாய்வு செய்து அதன் முடிவுகளைத் தொல்லியல் அறிஞர் குழு சார்பாக திரு. அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்கள் ஏழு மாதங்களுக்கு முன் ஒப்படைத்துள்ளார். அதற்கு முன்பாக ஆதிச்சநல்லூர் அகழாய்வு முடிவுகளும் இந்திய ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு அறிக்கைகளையும் இதுவரை வெளியிடாமல் இந்திய அரசு மிகுந்த காலதாமதம் செய்து வருவதை இக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்அறிக்கைகளை உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமென இக்குழு வலியுறுத்துகிறது.

6. தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் கடந்த செப்டம்பர் 23, 24 - சனி-ஞாயிறு கிழமைகளில் நடைபெற்ற "தமிழர் தொன்மை வரலாற்றுச் சிறப்பு மாநாட்டில்" இடம்பெற்றிருந்த "தமிழர் தொன்மை வரலாற்றுக் கண்காட்சி"யை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி, பொது மக்களுக்குத் தமிழர் தொன்மை வரலாற்று உணர்வை ஏற்படுத்துவது என இந்த ஆட்சிக்குழு முடிவு செய்கிறது.

## விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்!

### பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

பெப்ரவரி 16, 2024

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காவிரி பாசன மாவட்டங்களில் சம்பா மற்றும் தாளடி அறுவடை தீவிரமடைந்து இருக்கும் நிலையில், அனைத்துப் பகுதிகளிலும் குறைந்தது 40 சதவீதம் முதல் 94 சதவீதம் வரை விளைச்சல் குறைந்திருக்கிறது.குறுவையைத் தொடர்ந்து சம்பா பருவத்திலும் விளைச்சல் வீழ்ச்சி அடைந்து விட்டதால் உழவர்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ள நிலையில், அவர்களுக்கு இழப்பீடு வழங்க தமிழக அரசு முன் வராதது கண்டிக்கத்தக்கது. காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக கடந்த ஜூன் 12-ம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டாலும் கூட, கர நாடகத்திடம் இருந்து போதிய தண்ணீர் பெற தமிழக அரசு தவறியதால் தொடர்ந்து தண்ணீர் வழங்க முடியவில்லை. உழவர்களை கடன் சுமையில் இருந்து காப்பாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உள்ளது.

ஆனால், குறுவை பருவத்தில் 2 இலட்சம் ஏக்கரில் பயிர்கள் முழுமையாகவும், 1.5 இலட்சம் ஏக்கரில் ஓரளவுக்கும் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், வெறும் 40,000 ஏக்கரில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டும் தான் ஏக்கருக்கு ரூ.5400 என்ற அளவில் தான் தமிழக அரசு இழப்பீடு வழங்கியது.

இது எந்த வகையிலும் போதுமானது அல்ல. சம்பா பயிர்களின் விளைச்சல் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து அரசு வாயைத் திறக்கவில்லை.

பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை என்றால், காலப்போக்கில் தமிழ்நாட்டில் விவசாயம் செய்ய உழவர்களே இருக்க மாட்டார்கள். அதன்பின் அரிசிக்காக நான் பிற மாநிலங்களிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு சம்பா பருவத்தில் விளைச்சல் வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 40,000 வரை இழப்பீடு வழங்க வேண்டும். அதேபோல், குறுவை பருவத்தில் முழுமையாக கருகிய பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 வீதமும், ஓரளவு கருகிய பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25,000 வீதமும் தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறி உள்ளார்.



# பழனி அருகே கண்டறியப்பட்ட 1,000 ஆண்டுகள் பழமையான தடுப்பணை!

பெப்ரவரி 16, 2024

பழனி அருகே 1,000 ஆண்டுகள் பழமையான தடுப்பணை கண்டறியப்பட்டுள்ளது. பழநி அருகே பொருந்தல் பகுதியில் தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி வழிகாட்டுதலின்படி, பழனியாண்டவர் மகளிர் கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் ஜெயந்திமாலா, பேராசிரியர்கள் தங்கம், ராஜேஸ்வரி தலைமையிலான மாணவிகள் கள ஆய்வுமேற்கொண்டனர். இதில், 1000ஆண்டுகள் பழமையான தடுப்பணை கண்டறியப பட்டது.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி கூறியதாவது: சுருளி ஆறு, சண்முக நதியின்கிளை ஆறாகும். இதை சுள்ளியாறு என்றும் அழைக்கின்றனர். இந்த ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் பொருந்தல் ஆற்றுக்கு மேற்குப் பகுதியில் உற்பத்தியாகி, காட்டாறாக சிலகி.மீ. தொலைவு வடக்கு நோக்கிப்பாய்ந்து, பச்சையாற்றில் கலக்கிறது.

இடையில் இந்த சுருளி ஆறு சுண்டக்காய்தட்டி கரட்டுக்கு கிழக்கே பாய்கிறது. அந்த இடத்தில் ஆற்றின் போக்கை மாற்றும் வகையில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. ஆற்றின் கிழக்குக் கரையில் 2 கி.மீ. தொலைவுக்கு இந்த அணை கட்டப்பட்டிருந்ததை, அணையின் சிதைந்துபோன இடிபாடுகளில் இருந்து அறிய முடிகிறது.

ஆற்றின் கிழக்கு கரைநெடுகிலும் ஓரமாக தடுத்து, அணை கட்டியதன் மூலம் ஆறு நேராக வடக்கே 2 கி.மீ. தொலைவு பாய்ந்து, அம்மாபட்டியான் குளத்திலும், குமார சமுத்திரக்குளத்திலும் கலப்பதால் அப்பகுதி விளைநிலங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்துகிறது.

ஆற்றின் கிழக்குப் பகுதியில் அடுத்தடுத்து 3 குளங்கள் இருப்பதால், ஆற்றில் வரும் மிகையான வெள்ளம்இந்த தடுப்பணையில் அமைக்கப்பட்ட மதகுகள் மூலம் 3 குளங்களையும் நிரப்பிவிட்டு, இறுதியாக சண்முகநதியில் கலக்கும்வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

காலப்போக்கில் காட்டாற்று வெள்ளம் தடுப்பணையையும், மதகுகளையும் உடைத்தெறிந்ததை அணையின் சிதைவுகளில் இருந்து அறிய முடிகிறது. ஏறக்குறைய 2 கி.மீ. தொலைவுக்குக் கட்டப்பட்ட இந்த தடுப்பணை, தற்போது வெறும் 50 மீட்டர் தொலைவு மட்டுமே காணப்படுகிறது.

இதை தடுப்பணை என்று சொல்வதைவிட, தடுப்புக் கரை என்று சொல்வதே பொருத்தமானது. இந்த தடுப்பணை மிகப் பெரிய பாறாங்கற்களைக் கொண்டும், செங்கற்களைக் கொண்டும் கட்டப்பட்டுள்ளது. இந்த செங்கற்கள் 10-ம்நூற்றாண்டு கட்டுமானங்களில் இடம் பெற்றிருப்பதால், தடுப்பணை கி.பி.10-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம்.



இதன் மூலம், இந்த தடுப்பணை 1,000 ஆண்டுகள் பழமையானது என்பதை அறிய முடிகிறது. அணையின் மேற்புறம் காரைப் பூச்சு உள்ளது. பூச்சு விலகாமல் இருக்கவும், கரையின் மேற்புறப் பிடிமானத்துக்காகவும் இரும்பைக் காய்ச்சி ஊற்றிய தடயம் தென்படுகிறது. இது ஒரு புதுமையான கட்டுமான வகை எனலாம்.

இந்த தடுப்பணையின் மூலம் இப்பகுதியில் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் வேளாண்மை, பாசனத் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# கச்சத்தீவு வருடாந்த திருவிழாவை புறக்கணிக்க தமிழக மீனவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

பெப்ரவரி 18, 2024

கச்சதீவு வருடாந்த திருவிழாவை புறக்கணிப்பதற்கு தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளதோடு, தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பில், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க செயலாளர் எமரால்ட் தெரிவிக்கையில்,

இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்திலிருந்து கடந்த மூன்றாம் திகதி மீன்பிடிக்க சென்று நான்காம் திகதி அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இரண்டு படகுகளையும் அதிலிருந்து 23மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

மீனவர்களின் வழக்கு 16ஆம் திகதி யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது அப்போது வழக்கு விசாரித்த நீதிபதி கஜநீதிபாலன் 23 மீனவர்களில் 20 மீனவர்களை விடுதலை செய்து உத்தரவிட்டதுடன், இரண்டு மீன்பிடி விசைப்படைகு ஓட்டுநர்களான பெக்கர் மற்றும் ரொபேர்ட் ஆகிய இருவருக்கும் ஆறு மாத காலம் சிறந்த தண்டனையும், அதேபோல் இலங்கை கடற்படையால் 2019ஆண்ட சிறைபிடிக்கப்பட்டு இலங்கை நீதிமன்றத்தால் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் மெல்வின் மீண்டும் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும் விதித்து தீர்பளித்தார்.

இலங்கை நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்த தீர்ப்பை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்.

சிறை தண்டனை விதிக்கப்பட்ட ரொபேர்ட், பெக்கர், மெல்வின் ஆகிய மூன்று மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்கம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று மீனவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டு கண்ணீருடன் தங்களது சிறையில் உள்ள தங்களது உறவினர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி கோரிக்கை வைத்தனர்.

பின்னர் கூட்டத்தின் முடிவில் வரும் 23,24 ஆகிய திகதிகளில் கச்சத்தீவில் நடைபெற உள்ள புனித அந்தோணியார் கோவில் திருவிழாவில் கலந்த கொள்ளாமல் தமிழக மீனவர்கள் புறக்கணிக்க வேண்டும்.

விசைப்படகு மீனவர்கள் நாளை (18) முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவார்கள். நாளை(18) மீன்பிடி விசைப்படகுகளில் கருப்பு கொடியேற்றி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள்.



இராமேஸ்வரத்தில் இருந்து செவ்வாய்கிழமை (20) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலிவலகத்திற்கு மூன்று நாட்கள் நடந்து சென்று விசைப்படகு மீனவர்கள் அனைவரும் தங்களது மடகு உரிமம், மீனவர் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை ஆட்சியரிடம் ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை எடுத்தனர்.

அத்துடன், எங்களது கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக இராமேஸ்வரம் மீன்பிடி அனுமதிச்சிட்டு வழங்கும் அலுவலகம் முன்பு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர் என்றார்.

# கச்சத்தீவு அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு வரமாட்டோம்; தமிழக யாத்திரீகர்கள்!

பெப்ரவரி 21, 2024

யாழிலிலுள்ள இந்திய துணை தூதரகத்தை முடக்கி நேற்றைய நாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கு இந்திய யாத்திரீகர்கள் பங்கெடுக்கப்போவதில்லையென அறிவித்துள்ளனர்.




அவ்வகையில் எதிர்வரும் 23 மற்றும் 24ம் திகதிகளில் கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நடைபெற உள்ள நிலையில் திருவிழாவை இரத்து செய்வதாக கச்சத்தீவு புனித பயண ஒருங்கிணைப்பாளர் வேர்க்கோடு பங்கு தந்தை சந்தியாகு தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா தொடர்பில் வெளியிட்ட செய்தி குறிப்பில் விசைப்படகு கடற்றொழிலாளர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக திருப்பயணிகளை அழைத்துச் செல்ல முடியாதுள்ளது. அதனால் கச்சத்தீவு திருவிழா இரத்து செய்யப்படுவதாகவும், விழாவில் இந்திய பக்தர்கள் யாரும் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட மூன்று தமிழக கடற்தொழிலாளர்களுக்கு சிறை தண்டனை விதித்து இலங்கை நீதிமன்ற தீர்ப்பளித்ததை கண்டித்தும் நீதிமன்ற தீர்ப்பை உடனடியாக இரத்து செய்ய வலியுறுத்தியும் இராமேஸ்வரம் கடற்தொழிலாளர்கள் கச்சத்தீவு திருவிழாவை புறக்கணித்துள்ளதுடன் தொடர் போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



PARISH PRIEST

ST. JOSEPH'S CHURCH
Verkottu, Rameswaram - 623 526.
Ramanathapuram District.
Tamilnadu, India.

Date ..........................

21.02.2024

பெறுநர்:

உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

அய்யா

பொருள் : கச்சத்தீவு திருவிழா ரத்து செய்யப்பட்டது சார்பு

வணக்கம். வருகின்ற 23.24ஆம் தேதிகளில் நடைபெறவிருந்த கச்சத்தீவு திருவிழா, விசைப்படகு மீனவர்களின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக திருப்பயணிகளை அழைத்துச் செல்ல முடியாததால், ரத்து செய்யப்படுகிறது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை தாங்கள் செய்த அனைத்து உதவிகளுக்கும் நன்றி

ஒருங்கிணைப்பாளர்.
கச்சத்தீவு திருப்பயணக் குழு

PARISH PRIEST
St. Joseph's Church,
Verkottu,
Rameswaram - 630 526,
Ramnad - Dt.

LIVE and LOVE Like CHRIST

# இராமேசுவரம் மீனவர்கள் சாகும் வரையான உணவுத் தவிர்ப்பு போராட்டம்!

பெப்ரவரி 23 2024



எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், இலங்கையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி, இராமேசுவரம் மீனவர்கள் சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நாளை காலை (24) முதல் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தங்கச்சிமடத்தில் இடம்பெற்ற அவசர கூட்டத்தின் போது, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து, இலங்கை கடற்பகுதிக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான மீனவர்களில் ஐவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் மூன்று பேருக்கு 6 மாத சிறை தண்டனையும், ஒருவருக்கு ஒருவருடமும், மற்றையவருக்கு இரண்டு வருட காலமும் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த 16ஆம் திகதி முதல் இராமேசுவரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதுடன், நாளை முதல் சாகும்வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# இராமேசுவரம் மீனவர்கள் தொடரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்!

பெப்ரவரி 25, 2024

சிறீலங்காச் சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேசுவரம் மீனவர்கள் இரண்டாவது நாளாக இன்று (25) தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



மேலும், தூத்துக்குடிக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிப்பதற்காக இந்திய கடல் எல்லையை தாண்டிய 5 மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் கைது செய்தனர்.

அதனை தொடர்ந்து, கைதான ஐந்து மீனவர்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய, வெலிக்கடை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

சிறையில் அடைக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், 2018ஆம் ஆண்டு முதல் சிங்கள கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட சிறீலங்கா வசமுள்ள 151 விசைப்படகுகளை விடுவிக்கக் கோரியும் இராமேசுவரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் நேற்று (24) காலை 10 மணி முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை தொடங்கினர்.

மீனவர்களின் இந்த உணவுத்தவிர்ப்புப் போராட்டம் இன்றும் இரண்டாவது நாளாக தொடர்கிறது.

இப்போராட்டத்தில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு மத்திய, மாநில மற்றும் சிங்கள அரசுக்கு எதிராக



கோஷங்களை எழுப்பினர்.

மீனவர்களின் இந்த போராட்டம் காரணமாக தங்கச்சி மடத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், சிறீலங்கா நீதிமன்றத்தால் கைதான மீனவர்கள் விடுதலை செய்யப்படும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என நேற்றிரவு முழுவதும் உண்ணாவிரதம் கைக்கொண்டனர்.

# பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க ஆந்திர அரசு தீவிரம் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தடையாணை பெற வேண்டும்! – வைகோ

பெப்ரவரி 26, 2024

கர்நாடக மாநிலத்தில் சிக்பெல்லாபூர் மாவட்டம், நந்திதுர்கம் மலையில் உற்பத்தியாகும் பாலாறு, கர்நாடகத்தில் 93 கிலோ மீட்டரும், ஆந்திர மாநிலத்தில் 33 கிலோ மீட்டரும் பாய்ந்து தமிழ் நாட்டில் வாணியம்பாடி அருகே புல்லூர் என்ற இடத்தில் நுழைகிறது.

தமிழகத்தில்தான் அதிக அளவாக 222 கி.மீ. தூரம் பயணித்து,



காஞ்சிபுரம் மாவட்டம், வயலூர் அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

உச்சநீதிமன்ற உத்தரவுகளை மீறி ஏற்கெனவே கர்நாடகத்தில் பாலாற்றின் குறுக்கே 3 தடுப்பணைகளும், ஆந்திர மாநிலத்தில் சிறியதும், பெரியதுமாக 21 தடுப்பணைகளும் கட்டப்பட்டதால் தமிழகத்தில் பாலாறு வறண்டு கிடக்கிறது.

இது தொடர்பாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், ஆந்திர மாநில அரசு. குப்பம் தொகுதிக்கு உட்பட்ட ரெட்டிகுப்பம் என்ற பகுதியில் பாலாற்றின் குறுக்கே கூடுதலாக புதிய தடுப்பணை ஒன்றைக் கட்ட ஏற்பாடுகள் செய்து வருகிறது.

இது தொடர்பாக அம்மாநில வனத்துறை அமைச்சர், நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில், ரெட்டிகுப்பம் பகுதியில் பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை ஒன்று கட்டப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி கலந்து கொண்டு தடுப்பணைக்கான பணிகளை தொடங்கி வைக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆந்திர அரசின் இந்த நடவடிக்கை 1892 ஆம் ஆண்டு மைசூர் மாகாணத்திற்கும், சென்னை மாகாணத்திற்கும் நதிநீர் பங்கீடு ஒப்பந்தங்களுக்கு எதிரானது. அது மட்டுமின்றி, குப்பம் பாலாறு படுகை முழுவதும் யானை வழித்தடம் ஆகும். இந்த பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதிக்கும் என்பதால் எந்தப் பணிகளும் மேற்கொள்ளக் கூடாது

யானைகள் வழித்தடத்தில் கணேசபுரம் எனும் இடத்தில் அணை கட்டக் கூடாது என உச்சநீதிமன்றம் தடையாணை வழங்கியுள்ளது.

எனவே கணேசபுரத்திலிருந்து புல்லூர் வரை யானைகள் வழித்தடம் என்பதால் அந்தப் பகுதிகளில் புதிய திட்டம் எதையும் செயல்படுத்தக் கூடாது. மீறினால் உச்சநீதிமன்றம் தீர்ப்புக்கு எதிரானதாக கருதப்படும்.

இதற்கான பணிகளை ஆய்வு செய்த ஆந்திர சுற்றுச்சூழல் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் பெத்தி ரெட்டி, பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டக்கூடாது என தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் பிரச்சனை தீர்ந்து விட்டதாகவும், தேர்தலுக்குப்பின் மேலும் 2 தடுப்பணைகள் பாலாற்றில் கட்டப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.



உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஆந்திர மாநில முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு இன்று அடிக்கல் நாட்டுவது உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிரானதாகும்.

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டால், தமிழ்நாட்டின் வட மாவட்டங்களின் நீர் ஆதாரம் கடுமையாக பாதிக்கப்படும்.

இதனால் குடிநீரின்றி மக்கள் அவதிப்படுவதுடன், வேளாண் தொழிலும் முற்றாக சீரழிந்து விடும்.

எனவே தமிழ்நாடு அரசு உடனடியாக உச்சநீதிமன்றத்தில் ஏற்கனவே கொடுத்துள்ள வழக்கை துரிதப்படுத்தி, பாலாற்றின் குறுக்கே அணைக்கட்ட முனையும் ஆந்திர மாநில அரசின் திட்டத்தை கைவிட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். என வைகோ அறிக்கை

# முன்னாள் பிரதமர் ராஜீவ் வழக்கில் விடுதலை செய்யப்பட்ட(?) சாந்தன் கொலையா?

பெப்ரவரி 27 2024

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட (?) இலங்கை தமிழர் சாந்தன் உடல்நலக் குறைவால் இந்தியாவால் காலமானார் என கூறப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.







இதனை தொடர்ந்து அவருக்கான தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இதன் பின்னர், கடந்த 2022 ஆம் ஆண்டு, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்த நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் உட்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சாந்தன் இலங்கை தமிழர் என்பதால், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள வெளிநாட்டவருக்கான சிறப்பு சிறை முகாமில் முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருடன் சாந்தன் அடைக்கப்பட்டார். தன்னை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் எனக் கோரி வந்தார் சாந்தன். சாந்தனை இலங்கை அனுப்பி வைக்க மத்திய அரசும் அனுமதி வழங்கியது (?).

ஆனால், சாந்தனுக்கு கடந்த ஜனவரி மாதம் 24-ம் தேதி உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது (?).

ராஜீவ் காந்தி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்து வந்த போதும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. கோமநிலைக்கு சென்ற சாந்தனின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்து இருந்தனர்(?). இந்நிலையில் சிகிச்சை (?) பலனின்றி இன்று அதிகாலை சாந்தன் மரணம் அடைந்தார் என அறிவிக்கப்பட்டார்.

# இறுதிவரை குடும்பத்தினரைக் காண முடியாமல் சாந்தன் மறைவு!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கல்!

பெப்ரவரி 28, 2024

இராசீவ்காந்தி கொலை வழக்கில் தடா நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்று பின்னர், உச்சநீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனையாக்கப்பட்டு 32 ஆண்டு காலமாக இருண்ட சிறையில் வாடிய சாந்தன், அதே உச்சநீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டும்கூட சிறப்பு முகாம் என்னும் சிறையில் அடைக்கப்பட்டார்.

உடல்நலம் குன்றியிருக்கக் கூடிய அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க இந்திய அரசு மறுத்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் அரசு மருத்துவமனையில் சாந்தன் உயிர் துறந்த செய்தி அனைவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. உச்சநீதிமன்ற ஆணையிட்டபடி உடனே விடுதலை செய்திருந்தால், அவர் தமிழீழம் சென்று தனது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்திருப்பார். அவர்களின் அன்பான பராமரிப்பில் உயிர்ப் பிழைத்திருக்கக் கூடும்.

சாந்தனுக்கு நேர்ந்த கதி மற்ற மூவருக்கும் நேர்ந்துவிடக் கூடாது. எனவே, சிறப்பு முகாமில் இருக்கக் கூடிய மூவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இந்திய அரசை வலியுறுத்துகிறேன்.

தனக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்டு, 31 ஆண்டுகள் சிறையில் சொல்லொண்ணாத வேதனைகளுக்கு ஆளாகி இறுதியில் மறைந்து போன சாந்தன் அவர்களுக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.




# சாந்தன் இந்திய அரசின் வன்மத்திற்கு பலியானார்

## மே17 இயக்கத்தின் நிறுவனர் திருமுருகன் காந்தி

பெப்ரவரி 28, 2024

சாந்தன் இந்திய அரசின் வன்மத்திற்கு பலியாகியுள்ளார் என மே 17 இயக்கத்தின் நிறுவுனர் திருமுருகன் காந்தி தெரிவித்துள்ளார்.

சாந்தன் மரணம் குறித்து திருமுருகன் காந்தி மேலும் தெரிவித்துள்ளதாவது,

எது நடந்துவிடக்கூடாது என அச்சப்பட்டோமோ அது நடந்துவிட்டது. தோழர் சாந்தன் இயற்கையெய்திய செய்தி துயரமான நாளாக்கிவிட்டது. சுதந்திரக் காற்றை சுவாசிக்காமலும், தாயை சந்திக்காமலும் விடைபெற்றுள்ளார். இந்திய அரசின் வன்மத்திற்கு பலியாகியுள்ளார். வேலூர் சிறையில் அவரைச் சந்தித்துள்ளேன்.

துயரமும், அவநம்பிக்கையும் சூழ்ந்த நிலையில் மிக அமைதி தோய்ந்த அவரது முகம் நினைவில் என்றும் நிற்கும். 2018 ஆகஸ்டில் சந்தித்த சமயத்தில் அன்றய அதிமுக அரசின் முடிவால் விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. “நாங்கள் வெளியே போய்விடுவோம்,

வெளியே உங்கள் உடல்நலம் பற்றி சொல்கிறோம்” என்றார் முருகன். விடுதலை செய்யப்பட வேண்டுமென அரசு முடிவெடுக்கப்பட்டு ஒன்றிய அரசால், ஆளுனரால் தடுக்கப்பட்ட நீதிக்கு இயற்கை விடுதலை கொடுத்திருக்கிறது. சிறப்பு முகாமெனும் சித்தரவதை முகாமில் நம்மைவிட்டு சிறைவாசத்திலேயே பிரிந்திருக்கிறார்.






**ஈழத் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்!**

**சிறப்பு முகாம்களை இழுத்து மூடு!**

# சாந்தனின் ஆன்மா மானுடத்தை மன்னிக்காது!

## தமிழ்ப் பேரரசு கட்சி பொதுச் செயலாளர் வ. கௌதமன்

பெப்ரவரி 28 2024

இந்திய தேசமும் தமிழ்நாடு அரசும் நிரந்தரமாக தலை குனியட்டும்.

36 ஆண்டுகள் மரண தண்டனை, ஆயுள் தண்டனை என முடித்து விடுதலை கிடைத்த பின்பும் மீண்டும் சிறையிலடைத்த இந்திய அதிகார வர்க்கமும் தமிழ்நாடு அரசும் தங்களது குரூர எண்ணம் கொண்ட மரண தண்டனையை நிறைவேற்றிக் கொண்டது.

எங்கள் சாந்தனின் உயிரை குடித்த அதிகார வர்க்கங்களே…

தயவு செய்து அவன் உடலை இந்த மண்ணில் புதைத்து விடா தீர்கள். வெறி அடங்கா அகோரி நர மனிதர்களான உங்களது வயிற்றில் சமாதியாக்கிக் கொள்ளுங்கள்.

கருணையிலா அரசு கடுகி அழிக.

வ.கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி



# சாந்தன் இயற்கை மரணமல்ல, படுகொலை!

## சட்டத்தரணி புகழேந்தி

பெப்ரவரி 28, 2024

சாந்தன் உயிரிழந்த விவகாரமானது இயற்கை மரணமல்ல எனவும் அது இந்திய அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலை எனவும் சட்டத்தரணி புகழேந்தி அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு பின், சிறையிலிருந்து விடுதலையான சாந்தன் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இன்று உயிரிழந்தார்.

இந்நிலையில் சாந்தனின் மரணம் தொடர்பில் ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே இந்த விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தார் சட்டத்தரணி புகழேந்தி.

மேலும், "ஈழத்தமிழருக்கு எதிராக இந்தியாவில் காணப்படும் திருச்சி சிறப்பு முகாம் என்பது இழுத்து மூடப்படவேண்டும்.

அண்ணன் சாந்தன் விட்டுச்சென்றுள்ள இந்த செய்தியானது உலகத்தில் கொடுமைகளை அனுபவிக்கும் ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் ஒரு பாடமாக மாறியுள்ளது. இந்நிலையில், இலங்கை அரசு அனுமதி வழங்கியும் கூட இந்திய அரசினால் சாந்தன் தனது தாய்நாட்டுக்கு அனுப்பப்படாமல் மரணித்த சம்பவம் மிகவும் வேதனைக்குரியது." என்றார்.



# சாந்தனின் உடலுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிளைப்பாளர் சீமான் கண்ணீர் வணக்கம்!

பெப்ரவரி 28, 2024

அன்புத்தம்பி சாந்தனுக்கு முழுமைபெறாத நீதி விசாரணை காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு 32 ஆண்டுகள் கடும் சிறை தண்டனையுடன், வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் மரணம் குறித்தான சிந்தனையுடன் வாழவேண்டிய கொடுந் தண்டனையும் வழங்கி தண்டித்தது இந்த நாடு.



பல கட்ட சட்டப்போராட்டங்களுக்கு பிறகு மரண தண்டனையிலிருந்தும், சிறைக்கொடுமையிலிருந்தும், தண்டனை விதித்த நீதிமன்றமே விடுதலை செய்த பிறகும், தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு சிறிதும் கருணையற்று சிறப்பு முகாம் எனும் சித்ரவதை முகாமில் அடைத்து சிறுக சிறுக சிதைத்து இன்றைக்கு தம்பி சாந்தனை மரணம் வரை தள்ளியிருக்கிறது. அவரை உயிரோடு தாயகத்திற்கு அனுப்புவதில்லை என்ற முடிவில் வென்றுள்ளது இந்திய ஒன்றிய அரசும், தமிழ்நாடு மாநில அரசும் தான்.

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிரோடு பார்த்துவிட வேண்டுமென 33 ஆண்டுகளுக்கும் மேலாக கவலை தோய்ந்த இதயத்தோடும் கண்கள் நிறைந்த கண்ணீரோடும் காத்திருந்த தாயின் வாழ்நாள் ஏக்கம் இறுதிவரை நிறைவேற வில்லை என்பதுதான் வரலாற்றுப் பெருந்துயரம். தம்பி சாந்தனின் உயிரற்ற உடலையாவது அவரது தாயிடம் ஒப்படைக்க இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இத்துயர்மிகுச் சூழலில் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பிறகும் திருச்சி சித்ரவதை முகாமில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ளவர்களையாவது திமுக அரசு உடனடியாக விடுதலை செய்ய




அன்புத்தம்பி சாந்தனுக்கு முழுமைபெறாத நீதி விசாரணை காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு 32 ஆண்டுகள் கடும் சிறை தண்டனையுடன், வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் மரணம் குறித்தான சிந்தனையுடன் வாழவண்டிய கொடுந்தண்டனையும் வழங்கி தண்டித்தது இந்த நாடு.

பல கட்ட சட்டப்போராட்டங்களுக்கு பிறகு மரண தண்டனையிலிருந்தும், சிறைக்கொடுமையிலிருந்தும், தண்டனை விதித்த நீதிமன்றமே விடுதலை செய்த பிறகும், தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு சிறிதும் கருணையற்று சிறப்பு முகாம் எனும் சித்ரவதை முகாமில் அடைத்து சிறுக சிறுக சிதைத்து இன்றைக்கு தம்பி சாந்தனை மரணம் வரை தள்ளியிருக்கிறது. அவரை உயிரோடு தாயகத்திற்கு அனுப்புவதில்லை என்ற முடிவில் வென்றுள்ளது இந்திய ஒன்றிய அரசும், தமிழ்நாடு மாநில அரசும் தான்.

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிரோடு பார்த்துவிட வேண்டுமென 33 ஆண்டுகளுக்கும் மேலாக கவலை தோய்ந்த இதயத்தோடும் கண்கள் நிறைந்த கண்ணீரோடும் காத்திருந்த தாயின் வாழ்நாள் ஏக்கம் இறுதிவரை நிறைவேறவில்லை என்பதுதான் வரலாற்றுப் பெருந்துயரம். தம்பி சாந்தனின் உயிரற்ற உடலையாவது அவரது தாயிடம் ஒப்படைக்க இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இத்துயர்மிகுச் சூழலில் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பிறகும் திருச்சி சித்ரவதை முகாமில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ளவர்களையாவது திமுக அரசு உடனடியாக விடுதலை செய்ய முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புத்தம்பி சாந்தனுக்கு எனது கண்ணீர் வணக்கம்!

செந்தமிழன் சீமான் | தலைமை ஒருங்கிணைப்பாளர், நாம் தமிழர் கட்சி

Seeman4TN Seeman4TN_Official SenthamizhanSeeman 28.02.2024

முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புத்தம்பி சாந்தனுக்கு எனது கண்ணீர் வணக்கம்!

# சாந்தனின் உடலுக்கு நளினி, வைகோ கண்ணீர் வணக்கம் செலுத்தினார்கள்!

பெப்ரவரி 28, 2024

இந்தியாவின் - தமிழ்நாடு ராஜீவ்காந்தி மருத்துவமனையில் உயிரிழந்த சாந்தனின் உடலுக்கு நளினி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட பலரும் வணக்கம் செலுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி 24ஆம் திகதி சாந்தனுக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந் துள்ளார்.

தமிழ்நாடு ராஜீவ்காந்தி வைத்தியசாலையில் உயிரிழந்த சாந்தனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நளினி மற்றும் அவரது சட்டத்தரணி புகழேந்தி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவரது பூதவுடல் இன்று இலங்கைக்கு கொண் டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





# "சாந்தனுக்கு ஏற்பட்ட நிலை சிறப்பு முகாமில் உள்ள மற்ற மூவருக்கும் ஏற்படு விடக்கூடாது!"

ரொபார்ட் பயஸ்

பெப்ரவரி 29 2024

சாந்தனுக்கு ஏற்பட்ட நிலை சிறப்பு முகாமில் உள்ள மற்ற மூவருக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என ரொபார்ட் பயஸ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைது செய்யப்பட்ட நளினி, முருகன், ஜெயக்குமார், ரொபார்ட் பயஸ், ரவிச்சந்திரன், சாந்தன் ஆகியோரை கடந்த 2022 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் விடுவித்தது. இதில் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் இந்தியர்கள் என்பதால் அவர்களது இல்லத்திற்கு சென்றனர்.

ஆனால் முரகன், ஜெயக்குமார், சாந்தன், ரொபார்ட் பயஸ் ஆகியோர் இலங்கை குடிமக்கள் என்பதால் அவர்கள் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த சாந்தன் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து சாந்தனின் இறப்பு குறித்து சிறப்பு முகாமில் உள்ள ராபர்ட் பாயஸ் உலகத் தமிழர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், திருச்சி சிறப்பு முகாம் சிறையை விட கொடுமையானது என குறிப்பிட்டுள்ள அவர், தன் மகனை ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டும் என்று ஏங்கிய சாந்தனின் தாயிடம் உயிரற்ற உடலை தான் கொண்டு சேர்க்கப்போகிறோம் என தெரிவித்துள்ளார்.

மேலும், நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களை பிரிந்த துயரமும் எங்களை நோயாளிகளாக்கியுள்ளது என குறிப்பிட்டுள்ள ரொபார்ட் பயஸ், சாந்தனுக்கு ஏற்பட்ட நிலை, சிறப்பு முகாமில் உள்ள மற்ற மூவருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என தெரிவித்துள்ளார்.மேலும், தங்களின் கடைசி காலத்தை குடும்பத்தினருடன் செலவழிக்க அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# சாந்தனின் உடல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு!

பெப்ரவரி 29, 2024

சாந்தனின் உடலை விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசிற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளை நியமித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை தூதரக அனுமதி, இறப்புச் சான்று, பயண ஆவணம், உடல் பதப்படுத்துதல் சான்று ஆகியவற்றை பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உரிய சான்றிதழ்களை பெற்று மத்திய அரசிடம் தமிழக அரசு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 4 ஆவணங்களும் வழங்கப்படும் பட்சத்தில் உடனடியாக உடலை அனுப்பி வைப்பதற்கான அனுமதி தாமதமின்றி வழங்கப்படும் என்று மத்திய அரசு தரப்பில் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றிய பின், எதிர்வரும் மார்ச் 4ம் திகதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



# சாந்தனின் வித்துடலுக்கு இறுதி வணக்கம் செலுத்தினார் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன்!

பெப்ரவரி 29, 2024

உடல் நல பாதிப்பால் உயிரிழந்த சாந்தனின் வித்துடலுக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இன்றையதினம்(29) இறுதி வணக்கம் செலுத்தினார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர் சாந்தன், பல போராட்டங்களின் பின்னர் தாயகம் திரும்ப இருந்த நிலையில் உடல் நலக்குறைவால் நேற்றைய நாள்(28) காலை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், சாந்தனின் உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையின் தலைமை வைத்திய அதிகாரி தேரணிராஜன் தெரிவித்துள்ளார்.

சாந்தனின் மறைவுச் செய்தியை அறிந்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், திரைப்பட இயக்குநர் மு.களஞ்சியம் மற்றும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான நளினி மற்றும் பேரறிவாளன் உள்ளிட்டோர் நேற்றைய நாள் இறுதி வணக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சாந்தன் இறப்பதற்கு முன்பே இலங்கைக்கு அனுப்பாதது ஏன்? தமிழ்நாடு அரசுக்கு நீதிமன்றம் கேள்வி!

பெப்ரவரி 29, 2024

"சாந்தனை அவர் இறப்பதற்கு முன்பே இலங்கைக்கு ஏன் அனுப்பவில்லை என தமிழ்நாடு அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், குமரேஷ் பாபு அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு சார்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முனியப்பராஜ் ஆஜராகி, சாந்தனை இலங்கை அனுப்பவதற்கான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துவிட்டதாக கூறினார்.

சாந்தனை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி எப்போது கிடைத்தது என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்தரேசன், கடந்த 22ஆம் தேதி அவரை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்தார். சாந்தனை இலங்கைக்கு அனுப்ப 22ஆம் தேதியே மத்திய அரசு அனுமதி அளித்தும் ஏன் அனுப்பவில்லை எனநீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அரசு தரப்பு வழக்கறிஞர், ஜனவரி 24ஆம் தேதி முதலே சாந்தன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அவரால் நகரக்கூட முடியவில்லை எனவும் தெரிவித்தார். இதையடுத்து, சாந்தனின் மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை தள்ளி வைத்தனர்.






**ஈழத் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்!**

**சிறப்பு முகாம்களை இழுத்து மூடு!**

# உலக செய்திகள்

## தமிழீழ தனியரசு பேரவாவினை பறைசாற்றும் ஐ.நா. நோக்கிய மனித நேய ஈருருளிப்பயணம் தொடங்கியது பிரித்தானியாவில்!

பெப்ரவரி 15, 2024

தமிழின அழிப்புக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழீழமே எமது இறுதி தீர்வு என்பதையும் வலியுறுத்தி, மனித நேய ஈருருளிப் பயணம் பிரித் தானியாவிலிருந்து 15.02.2024 இன்று ஆரம்பித் துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் முக்கிய அரசியல் மையங்களின் கவனயீர்ப்பு போராட்டங்கள் ,அரசியல் சந்திப்புக்களோடு, ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அவை நோக்கி அறவழிப்போராட்டம் நகரவுள்ளது.




தனிச்சிங்களச் சட்டம், கல்வித் தரப்படுத்தல், தமிழர்கள் மீதான திட்டமிட்ட வன்முறை, படுகொலைகள், தமிழர் பாரம்பரிய நிலங்களில் திட்ட மிட்ட சிங்கள குடியேற்றம் தமிழர்களுக்கெதிரான சட்டங்கள் என தாங்கொணா இன்னல்களினால் பிறப்பெடுத்த தமிழீழப் விடுதலைப் போராட்டம் பல்லாயிரம் மாவீரர்களினதும் தமிழ் மக்களி னதும் தியாகத்தினால் உயர்நிலைக்குச் சென்று, 2009 இல் நடந்த திட்டமிட்ட இனவழிப்புப் போருக்குப் பின்னும் அறவழிப்போராட்டமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரினை முன்னிட்டு, தமிழின அழிப்பிற்கு எதிராக, உணர்வெழுச்சியுடன் அனைத்துல நீதி வேண்டி விடுதலை நோக்கி வீறுகொண்டு அறவழியில் இப்போராட் டம் பயணிக்கின்றது.

தமிழர்கள் இப்படியான தொடர்ச்சியான அறவழிப் போராட் டங்களூடாக,வெகுவிரைவாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட் டலில், எமது தமிழீழ மண்ணை மீட்டு சுதந்திரமாக வாழ காலத்தின் தேவை அறிந்து நாம் செயலாற்ற வேண்டும்.

சிறீலங்கா சிங்களப் பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை நடத்த வேண்டும் என்ற கருத்தை நடைமுறைப்படுத்த கோரியும் தமிழர்களுக்கு நிரந்தரத்தீர்வு தமிழீழம் என்பதை வலியுத்தியும் உரிமைக்குரல் எழுப்பி நீதிக்கான போராட்டமானது, இன்று பிரித்தானியாவிலிருந்து ஆரம் பித்து, 04.03.2024 அன்று ஜெனிவாவைச் சென்றடைய வுள்ளது.




தமிழின அழிப்பற்கு உள்ளாக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் ஏதிலிகளாக பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்களாகிய நாம், தம்வாழிட நாடுகளில் தமிழின அழிப்பிற்கான நீதியினை வேண்டி, எம் வாழிட நாடுகளை தமிழர்களின் நியாயமான நீதிக்கான கோரிக்கைக்கு குரல் கொடுக்க வைப்பதன் மூலம் அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் சிங்களப் பேரினவாத அரசினை நிறுத்தி தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும் என்பதையும் தமிழீழமே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு என்பதை உறுதியாக வலியுறுத்த முடியும்.



எனவே இப்போராட்டங்களுடன் நீங்களும் இணைந்து ஓரணியாய் முரசறைவோம்.

“ காலத்திற்கேற்ப வரலாற்றுக் கட்டாயத்திற்கமைய போராட்ட வழிமுறைகள் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை” -தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன்”

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்.”

எனவே இப்போராட்டங்களுடன் நீங்களும் இணைந்து ஓரணியாய் முரசறைவோம்.

## பாலஸ்தீனம் மீதான இசுரவேலின் ஆக்கிரமிப்பை மறு ஆய்வு செய்கிறது சர்வதேச நீதிமன்றம்!

பெப்ரவரி 19, 2024

பாலஸ்தீனப் பகுதிகளை இசுரவேல் ஆக்கிரமித்ததை சட்டரீதி யான விளைவுகள் குறித்து ஒரு வார விசாரணைகளைத் தொடங்கியது ஐக்கிய நாடுகள் சபையின் உயர் நீதிமன்றமான சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice).

அக்டோபர் 7 அன்று இசுரவேல் மீதான ஹமாஸ் போராளி களின் தாக்குதல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து காஸா மீதான இசுரவேலிய தாக்குதலுக்கு முன் ஆலோசனைக் கருத்தை வழங்குமாறு ஐ.நா பொதுச் சபை சர்வதேச நீதிமன்றத்திடம் கோரியது.




விசாரணையின் போது அமெரிக்கா, சீனா, ரஷ்யா, தென்னாப் பிரிக்கா மற்றும் எகிப்து உள்ளிட்ட ஐம்பது நாடுகள் நீதிபதிக ளிடம் தங்கள் கருத்துகளை தெரிவிக்கவுள்ளன. இசுரவேல் நேரடியாக பங்கேற்காது ஆனால் எழுத்துப்பூர்வ அவதானிப் புகளை அனுப்பியுள்ளது.

இசுரவேலுக்கு எதிரான பிற நடவடிக்கைகள்,

பாலஸ்தீனப் பகுதிகளை இசுரவேல் ஆக்கிரமித்தது தொடர்பாக ஐ.நா., ஐ.நா. சர்வதேச நீதிமன்றத்திடம் கட்டுப்பாடற்ற கருத்தை கேட்பது இது இரண்டாவது முறையாகும்.

ஜூலை 2004 இல், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இசுரவேலின் பிரிப்புச் சுவர் சர்வதேச சட்டத்தை மீறுவதாக சர்வ தேச நீதிமன்றம் கண்டறிந்தது. ஆனால் இசுரவேல் அதனை அகற்றவில்லை.

1948 இனப்படுகொலை உடன்படிக்கையை மீறியதாக இசுரவேலுக்கு எதிராக ICJ இல் தென்னாப்பிரிக்கா தாக்கல் செய்த வழக்கிலிருந்து இந்த வார விசாரணைகள் வேறுபட் டவை.

இனப்படுகொலையைத் தடுக்கவும், மனிதாபிமான உத விகளை காசா பகுதிக்குள் அனுமதிக்கவும் இசுரவேல் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்தது.

ஆனால் இசுரவேல் போர்நிறுத்தத்திற்கு உத்தரவிடவில்லை என்ற குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இசுரவேல் மீது கூடுதல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தென்னாப்பிரிக்காவின் முறையீட்டை சர்வதேச நீதிமன்றம் நிராகரித்தது.

1967 ஆம் ஆண்டு ஆறு நாள் போரில் மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் காசாவை இசுரவேல் கைப்பற்றியது. பின்னர் 2005 ஆம் ஆண்டு காசா பகுதியில் இருந்து வெளி யேறியது.

1967 முதல், இசுரவேல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் குடியிருப்புகளை விரிவுபடுத்தி கிழக்கு ஜெருசலேமை இணைத்தது.

# பரிதாப நிலையில் டியாகோ கார்சியாவில் சிக்குண்டுள்ள ஈழத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள்!

பெப்ரவரி 19, 2024

டியாகோர்கார்சியாவில் சிக்குண்டுள்ள ஈழத் தமிழ் குடியேற்ற வாசிகள் தங்கள் பாதுகாப்பாக இல்லை மறக்கபட்டுள்ளோம் என ஐநாவின் விசாரணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

பாலியல்வன்முறைகள் சிறுவர்கள் துன்புறுத்தப்படுதல் குறிததும் தெரிவித்துள்ள அவர்கள் தற்கொலைகளும் தங்களிற்கு தாங்களே காயங்களை ஏற்படுத்திக்கொள்ளுதலும் அங்கு சிக்குண்டுள்ள குடியேற்றவாசிகள் மத்தியில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் அகதிகள் முகவர் அமைப்பின் அதிகாரிகள் அகதிகளின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக டியாகோகாரசியாவிற்கு சென்றுள்ளனர்.

அங்கு காணப்படும் நிலைமை கட்டாயமாக தடுத்துவைத்தல் போன்று காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்தநவம்பரில் ஐக்கியநாடுகளின் அகதிகளிற்கான அமைப்பின் பிரதிநிதிகள் டியோகோ கார்சியாவிற்கு விஜயம் செய்துள்ளனர்.

டியோகோர் கார்சியாவில் இலங்கையை சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் சிக்குண்ட பின்னர் அவர்களின் நிலைமைகளை பார்வையிடுவதற்காக வெளிதரப்பு உள்ளே சென்றது இதுவே முதல்தடவை.

ஐநா அமைப்பின் விஜயத்தின் பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நீதிமன்றம் பிபிசிக்கு வழங்கியுள்ளது.

ஐநாவின் அகதிகளிற்காக அமைப்பின் பிரதிநிதிகள் டியோகார்சியாவில் உள்ள இலங்கை தமிழ் புகலிடக்கோரிக்கையையாளர்களை சந்தித்தவேளை அவர்கள் பாலியல் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்கள் குறித்து தெரிவித்துள்ளனர்.

சிறுவர்களும் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டியாகோர் கார்சியாவில் சிக்குண்டுள்ள ஏனைய இலங்கை புகலிடக்கோரிக்கையாளர்களே இந்த குற்றங்களில் ஈடுபடுகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அவமானம் சமூகத்தின் பார்வை குறித்த கவலைகள் காரணமாக பாலியல்வன் முறைகள் குறித்து முழுமையான விபரங்கள் வெளியாகவில்லை என குடியேற்றவாசிகள் கருதுகின்றனர். வலுவான பதில் நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கப்போகவில்லை என கருதுவதாலும் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடுகளை முன்வைக்க தயங்குகின்றனர் என தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் கருதுகின்றனர்.

புகலிடக்கோரிக்கையாளர்களுடன் பேசியவேளை அவர்கள் பாலியல்வன்முறைகள் துன்புறுத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்ததால் எந்த பயனும் இல்லை என கருதுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.என தனது அறிக்கையில் தெரிவித்துள்ள ஐநா முறைப்பாடு செய்வதால் பாதுகாப்பு நீதி போன்ற விடயங்களில் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை என அவர்கள் கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பாலியல் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒரே முகாமில் வசிப்பதாலும் முறைப்பாடுகள் செய்வதால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை என புகலிடக் கோரிக்கையாளர்கள் கருதுகின்றனர்.

இதனை தொடர்ந்து கடந்த ஜீலை மாதம் குடும்பங்களிற்கு ஒரு கூடாரம் திருமணமாகத ஆண்களிற்கு ஒரு கூடாரம் என பிரித்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் இதன் பின்னர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐநா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும் பாலியல் குற்றங்களை தடுப்பதற்கான போதுமான பொறி முறையாக இது காணப்படவில்லை என தெரிவித்துள்ள ஐநா ஏனைய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை காணமுடியவில்லை எனவும் தெரிவித்துள்ளது.




உரிய வேலிகள் இல்லாத முகாம்களில் வசிக்கும் குடியேற்ற வாசிகள் தாங்கள் எலிக்கடிக்குள்ளாவதாகவும் தெரிவித்துள்ளனர் என ஐநா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடற்கரைக்கு செல்ல விரும்பினால் கூட பாதுகாப்பு தரப்பினருடனேயே செல்லவேண்டியுள்ளது என டியாகோகார்சியாவில் சிக்குண்டுள்ள தமிழ் குடியேற்றவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இது அந்த மக்கள் விரக்தியால் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது மேலும் தற்கொலைகள் தங்களுக்குதாங்களே தீங்கிழைத்தல் போன்றவை இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது என ஐநா தெரிவித்துள்ளது.

16 சிறுவர்களை உள்ளடக்கிய தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் குழுவினர் தாங்கள் சலிப்படைந்துள்ளதாகவும் மனச்சோர்வுடனும் நம்பிக்கையற்றவர்களாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர் .

நாங்கள் மறக்கப்பட்டவர்களாகிவிட்டோம் என ஒருவர் தெரிவித்துள்ளனர் - எங்கள் வாழ்க்கைய முடித்துக்கொள்வது குறித்து எங்களில் அனேகமானவர்கள் கருதுகின்றோம் என பெண்மணியொருவர் தெரிவித்துள்ளார் என ஐநா தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவில் செய்யாத குற்றத்திற்காக 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை!

பெப்ரவரி 19, 2024

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் செய்யாத குற்றத்திற்காக 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த ராபர்ட் டுபோயிஸ் என்பவர் உண்மை நிரூபிக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

19 வயதில் உள்ளே சென்று 56 வயதில் விடுதலை ஆகி வாழ்க்கையை தொலைத்தவருக்கு ரூ.100 கோடி இழப்பீடாக வழங்கப்பட உள்ளது.

சம்பவத்தின் போது 18 வயது இருந்த டுபோயிஸ் 19 வயதுடைய பார்பரா கிராம்ஸ் என்பவரை கற்பழித்து கொலை செய்ததாக கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் 2018 ஆம் ஆண்டு இது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இன்னசன்ஸ் ப்ராஜெக்ட் அமைப்பின் உதவியால் இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வழக்கறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் இறந்த பெண்ணின் பிரேத பரிசோதனையில் இருந்து எடுக்கப்பட்ட டிஎன்ஏ சான்றுகள் மூலம் அமோஸ் ராபின்சன், அப்ரோன் ஸ்காட் ஆகிழோர்தான் குற்றவாளிகள் என கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் டுபோயிஸ் விடுவிக்கப்பட்டார்.

பின்னர் தவறான குற்றத்திற்கு தண்டனை அனுபவித்ததற்கு எதிராக தம்பா நகரின் மீது டுபோயிஸ் வழக்கு தொடர்ந்தார். வழக்கின் மூலம் செய்யாத குற்றத்திற்காக 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்ததற்காக ரூ.100 கோடி தம்பா நகர கவுன்சில் வழங்க உள்ளது. இதுகுறித்து ராபர்ட் டுபோயிஸ் கூறியதாவது "நான் ஒவ்வொரு நாளும் கடவுளிம் பிராத்தித்தேன்.

விடுதலையை எதிர்ப்பார்த்தேன். தற்போது நீதி கிடைத்து விட்டது. உண்மையான இதயமுள்ளவர்கள் உள்ளனர். இது



ஆச்சர்யமாக உள்ளது. உங்கள் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்" என தெரிவித்தார்.

# உக்ரைனிற்கு மேற்குலக படைகள்; சாத்தியம் உள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி!

பெப்ரவரி 27, 2024

உக்ரைனிற்கு மேற்குலகநாடுகள் தங்கள் படையினரை அனுப்பக்கூடும் என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

பாரிசில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் மக்ரோன் இதனை தெரிவித்துள்ளார்

இந்த சந்திப்பில் உக்ரைனிற்கு மேற்குலக நாடுகள் படையினரை அனுப்புவது குறித்து ஆராயப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று மாலைவரை படையினரை உக்ரைனிற்கு அனுப்புவது குறித்து எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை ஆனால் இதற்கான வாய்ப்புகளை தவிர்க்க முடியாது என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஸ்யா யுத்தத்தில் வெல்வதை தடுப்பதற்காக எங்களால் ஆனா அனைத்தையும் செய்வோம் என தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நான் இதனை மிகுந்த உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக படையினரை ஒருபோதும் உக்ரைனிற்கு அனுப்பகூடாது என்று அன்று சொன்னவர்கள் விமானங்களையும் ஏவுகணைகளையும் டிரக்குகளையும் அனுப்பகூடாது எனவும் சொன்னார்கள் தற்போது உக்ரைனிற்கு அதிகளவு ஏவுகணைகள் டாங்கிகளை அனுப்பவேண்டும் என தெரிவிக்கின்றனர் எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உக்ரைனிற்கு ஏவுகணைகள் குண்டுகளை அனுப்புவதற்கான புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி




அறிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# இந்தியா புது டெல்லியில் விவசாயிகள் மீது கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல்!

பெப்ரவரி 21, 2024

இந்திய மத்திய அரசாங்கத்துடன் விவசாயிகள் நடத்திய நான்கு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து, இந்தியாவின் தலைநகர் புது டெல்லியில் மீண்டும் அணிவகுப்பு போராட்டத்தை விவசாயிகள் தொடங்கியிருந்தார்கள். அப்போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது இன்று புதன்கிழமை காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டுத் தாக்குதல்.

புது டெல்லியின் எல்லைகள் பல அடுக்கு தடுப்புகள் மற்றும் முட்கம்பிகளால் விவசாயிகள் உள்ளே வரமுடியாத அளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் தடைகளை உடைப்பதற்கு கனரக வாகன இயந்திரங்களைப் பயன்படுத்துவோம் என்று விவசாயிகள் எச்சரித்துள்ளனர்.

புது டெல்லிக்கு அருகில் உள்ள மாநிலங்கான பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களுக்கு இடையே உள்ள ஷம்பு எல்லையில் இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் புல்டோசர்கள் மற்றும் மண் அள்ளும் கருவிகளைப் பயன்படுத்தி கடந்த தடைகளைத் தள்ளத் தயாராகி வருகின்றனர்.

போராட்டக்காரர்கள் எல்லையை நோக்கி செல்ல முயன்றபோது அவர்கள் மீது போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை காவல் துறையினர் வீசினர்.

காவல்துறையின் தாக்குதலில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முகமூடிகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு உடைகளைப் பயன்படுத்தினர்.

காவல்துறையினன் டிரோன்களைச் செயலழிழக்கச் செய்ய பட்டங்களை (காத்தாடிகளை) விவசாயிகள் பறக்கவிட்டனர். காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீச டிரோன்களைப் பயன்படுத்தினர்.

காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படைகள் தங்கள் சகோதரர்களை தாக்க வேண்டாம் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர்.



விவசாய அமைச்சர் அர்ஜுன் முண்டே ஐந்தாவது சுற்று பேச்சு வார்த்தைக்கு விவசாயிகளை அழைத்துள்ளார். அமைதியைப் பேணுவது எங்களுக்கு முக்கியம் என்று அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த அழைப்பிற்கு விவசாயிகள் இதுவரை பதிலளிக்கவில்லை.

விவசாயிகள் தங்களின் பயிர்களுக்கு உறுதியான விலையைக் கோரி வருகின்றனர். அத்துடன் பல மாதங்கள் வழங்கக்கூடிய விநியோகத்திற்கும் தயாராக இருப்பதாகவும் கூறுகின்றனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்தை போர்க்களமாக மாற்றிய ஐரோப்பிய விவசாயிகள்!

பெப்ரவரி 26, 2024

ஐரோப்பா முழுவதிலும் இருந்து வந்த விவசாயிகள் இன்று திங்கள்கிழமை காலை பெல்ஜியம் பிரஸ்ஸல்ஸ் நகருக்கு அணிவகுத்து உளவூர்திகளில் வந்தனர்.

தங்கள் தயாரிப்புகளுக்கு குறைந்த விலை, சுற்றுச்சூழல் கட்டுப்பாடு மற்றும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் உட்பட பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போராட்டத்தில் பெல்ஜியம், நெதர்லாந்து, பிரஞ்சு மற்றும் இத்தாலிய விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இப்போராட்டத்தில் 1,000 உளவூர்திகள் பிரஸ்ஸல்ஸில் உள்ள Rue de la Loi. முக்கிய ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களை நடத்தும் தெரு மற்றும் அதன் சுற்றுப்புறங்களைக் முற்றுகையிட்டு கைப்பற்றினர்.

காவல்துறையினர் போட்ட தடைகளை அவர்கள் உளவூர்திகள் கொண்டு உடைந்து நுழைந்தனர். ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களைச் சுற்றி விவசாயிகள் டயர்கள், குப்பைகள் மற்றும் கொள்கலன்களை எரித்தனர்.

முட்டை மற்றும் புகைக்குண்டுகளை வீசினர். சாலைப் போக்குவத்தை சீர்குலைத்தனர். பல பகுதிகளில் வைக்கோல்களை வீசினர். உரம் வீசும் வாகனத்தின் மூலம் பரப்பினர்.

தலைக்கவசம் மற்றும் கேடயங்களை அணிந்திருந்த காவல்துறை அதிகாரிகள், கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பீரங்கிளை பயன்படுத்தி விவசாயிகளைப் பின் தள்ள முயன்றனர். சில சமயங்களில் உளவூர்திகள் மற்றும் காவல்துறை வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.



இப்போராட்டமானது ஐரோப்பிய ஆணையத்தின் தலைமையகத்திற்கு அருகில் உள்ள ஷூமன் ரவுண்டானாவை கொந்தளிப்பு கொண்டு வந்தது.

பேருந்துகள் திருப்பி விடப்பட்டன. மேலும் பல ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் வீட்டிலேயே தங்கி தொலைப்பேசி மூலம் வேலை செய்ய நேர்ந்தது.

பொது விவசாயக் கொள்கையில் (CAP) இலக்கு மாற்றங்கள் மற்றும் அதிகாரத்துவச் சுமையைக் குறைப்பது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

திங்கட்கிழமை ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைக்க உதவிய சிறிய விவசாயிகள் சங்கமான ஏயை Campesina இன் பொது ஒருங்கிணைப்பாளரான Morgan Ody, மிகவும் குறைந்த விலையில் உள்ள விலைகளுக்கு வழிவகுத்த "நவ-தாராளவாத தர்க்கத்தை" EU கைவிட வேண்டும் என்றார்.

நாங்கள் உற்பத்தி செய்யும் விலைகளை உள்ளடக்கிய விலைகளை நாங்கள் விரும்புகிறோம். இதன் மூலம் எங்கள் வாழ்வாதாரத்தைப் பெறமுடியும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருளின் விலையை விட குறைவாக இருக்கக்கூடாது என ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்தில் எழுதப்பட வேண்டும் என்றும் இதை ஸ்பெயின் செய்தது என்றும் அதை ஏன் ஐரோப்பிய மட்டத்தில் செய்யக்கூடாது என்று விவசாயிகள் கேள்வி எழுப்பினர்.

ஜனவரியில் விவசாயிகளின் போராட்டங்கள் வெடித்ததில் இருந்து, கமிஷன் அவர்களின் கோபத்தை தணிக்க கணக்கீடுகளை செய்துள்ளது. இதில் உற்பத்தியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமையிலிருந்து ஓரளவு விலக்கு அளிப்பது மற்றும் உக்ரேனில் இருந்து சுங்கவரி இல்லாத தானியங்கள் மீதான தேசிய கட்டுப்பாடுகளை செயல்படுத்துவது உட்பட. MEP கள் முன் ஒரு உரையில், ஜனாதிபதி Ursula von der Leyen, பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு மற்றும் அபாயங்களை 2030 க்குள் பாதியாகக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்ட சர்ச்சைக்குரிய சட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்தார். பசுமை ஒப்பந்தத்தின் கீழ் இது முதல் பெரிய தோல்வியைக் குறித்தது.

# நேட்டோவில் 32வது நாடாக இணைகிறது சுவீடன்!

பெப்ரவரி 26, 2024

சுவீடன் நேட்டோவில் இணைவதற்கு ஆதரவாக ஹங்கேரியின் நாடாளுமன்றம் திங்கள்கிழமை பிற்பகல் வாக்களித்தது.

பிரதமர் விக்டர் ஓர்பனின் அரசாங்கம் பல மாதங்கள் தாமதத்திற்குப் பிறகு வாக்கெடுப்புக்கு வர அனுமதித்ததை அடுத்து, ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இந்த பிரேரணையை எதிர்த்தனர்.

பிரேரணைக்கு ஆதரவாக 188 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன.

நேட்டோவின் 32வது உறுப்பினராக இருக்கும் "வரலாற்று நாள்" என்று ஸ்வீடன் பாராட்டுகிறது.

இன்று ஒரு வரலாற்று நாள். அனைத்து நேட்டோ உறுப்பு நாடுகளின் நாடாளுமன்றங்களும் இப்போது ஸ்வீடன் நேட்டோவில் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

யூரோ-அட்லாண்டிக் பாதுகாப்பிற்கான பொறுப்பை ஏற்க சுவீடன் தயாராக உள்ளது என்று சுவீடன் பிரதமர் உல்ஃப் கிறிஸ்டர்சன் சமூக ஊடகங்களில் எழுதினார்.

நேட்டோவில் சுவீடனின் உறுப்புரிமையை அங்கீகரிப்பதற்காக ஹங்கேரிய நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்பை நான் வரவேற்கிறேன் என்று நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் கூறினார்.



இப்போது அனைத்து நட்பு நாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளதால், சுவீடன் 32வது நேட்டோ நட்பு நாடாக மாறுகிறது.

# அமெரிக்க தலைநகரில் இசுரவேல் தூதரகம் முன்பாக தீக்குளித்து உயிரிழந்த அமெரிக்கப் படைவீரர்!

பெப்ரவரி 26, 2024

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உள்ள இசுரவேல் தூதரகம் முன்பாக தீக்குளித்த அமெரிக்க விமானப்படை வீரர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்க விமானப்படை வீரர் ஆரோன் புஷ்னெல் (Aaron Bushnell) கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தியும் காஸாவில் இனப்படுகொலையை நிறுத்துமாறு கோரியும் வாஷிங்டனில் உள்ள இசுரவேல் தூதரகம் முன்பாக தீக்குளித்தார்.

25 வயதான ஆரோன் புஷ்னெல் அதனை நேரடியாக ஒளிபரப்பவும் செய்தார்.

பாலஸ்தீனத்தை விடுதலை செய்ய வேண்டும், இனப்படுகொலைக்கு துணை போக மாட்டேன் என கோஷம் எழுப்பிய வாறு திடீர் என அவர் தீக்குளித்தார்.

தீக்காயங்களுக்குள்ளான அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.



# ‘உலக நியதிகளுக்கு முரணாகத் தமிழர்களின் தன்னாட்சி உரிமை மறுக்கப்படுகிறது!’ பிரித்தானிய நாடாளுமன்றில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மாநாட்டில் எழுந்த கண்டனக் குரல்கள்!

பெப்ரவரி 28, 2024

தமிழீழ தேசத்தின் தன்னாட்சி உரிமையைக் குற்றச் செயலாக்கும் சிறீலங்கா அரசியலமைப்பின் ஆறாம் திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரித்தானிய அரசை வலியுறுத்தும் மாநாடு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் (WTCC) ஏற்பாட்டில் நேற்று 28.02.2024 புதன் கிழமை பிரித்தானிய நாடாளுமன்ற அரண்மனையில் சிறப்பாக இடம்பெற்றது.



தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் (Tamils for Labour) அமைப்பின் உறுதுணையுடன், தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டேம் சிபோன் மக்டொனா அம்மையாரின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அரசியல் பிரிவைச் சேர்ந்த கலாநிதி A.R.சிறீஸ்கந்தராஜா தலைமை தாங்கினார்.

இம் மாநாட்டில் தொடக்க உரையை நாடாளுமன்ற உறுப்பினர் டேம் சிபோன் மக்டொனா அம்மையாரும், சிறப்புரையினை தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிழல் நிதித்துறை அமைச்சருமான மாண்புமிகு ஜோன் மக்டொனல் அவர்களும், ஆதரவு உரையை ஆளும் பழமைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டீன் ரசெல் அவர்களும் ஆற்றினார்கள்.



இம் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் டேம் சிபோன் மக்டொனா அம்மையார் உரையாற்றுகையில், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அனைத்துலக குற்றமீறல்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் கடப்பாடு பிரித்தானிய அரசுக்கு இருப்பதை சுட்டிக் காட்டியதோடு, தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கு இடையூறாக விளங்கும் ஆறாம் திருத்தம் நீக்கப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது சிறப்புரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஜோன் மக்டொனல், ஆறாம் திருத்தம் நீக்கப்பட்டால் மட்டுமே தமிழர்கள் தமது அரசியல் அபிலாசைகளை சுதந்திரமாக வெளிப்படுத்தும் சூழல் ஏற்பட்டுத் தமது தன்னாட்சி உரிமையைத் தமிழர்கள் நிலைநாட்ட முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு தமிழர்களின் தன்னாட்சி உரிமையை சிறீலங்கா அரசாங்கம் மறுப்பது உலக நியதிகளுக்கு விரோதமானது என்பதை சுட்டிக் காட்டிய மாண்புமிகு ஜோன் மக்டொனல், தமிழீழ தாயகத்தில் தமிழர்களின் வழிப்பாட்டுத் தலங்களை ஆக்கிரமித்தல், போதைப் பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை சிறீலங்கா படைகள் மேற்கொள்வதையும் வன்மையாகக் கண்டித்தார்.

இவ்விடத்தில் ஆளும் பழமைவாதக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டீன் ரசெல் அவர்கள் உரையாற்றுகையில், தமிழர்களின் உரிமைகளை சிறீலங்கா அரசாங்கம் நசுக்குவது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

இம் மாநாட்டில் உரையாற்றிய பிரெஞ்சு விரிவுரையாளர்



கலாநிதி இனெஸ் ஹசன்-டக்லி, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் வேற்றுமை காட்டும் சிறீலங்கா ஒரு இன நாயக நாடு என்று அழைக்கப்படும் தகுதியை மட்டும் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விடத்தில் பிரித்தானியாவில் பிறந்து வளர்ந்த மருத்துவபீட மாணவி செல்வி மூவாம்பிகை சதீஸ் அவர்கள் உரையாற்றுகையில், பிரித்தானியாவில் தான் அனுபவிக்கும் உரிமைகளையும், தாயகத்தில் எமது மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதையும் ஒப்பிட்டதோடு, தமிழ் மக்களின் உரிமைகளை அமைதிவழியில் வென்றெடுப்பதற்குக் கடந்த காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளைப் பிரித்தானிய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதன்போது உரையாற்றிய குர்திஷ் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான ஹொாஷ்வான் சதீக், தமிழ் மக்களுக்கு என்றும் குர்திஷ் மக்கள் உறுதுணை நிற்பார்கள் என்று உறுதியளித்ததோடு, ஈராக்கில் சுயாட்சி கொண்ட மாநிலமாக விளங்கும் தென்குர்திஸ்தான் தமக்கென்று தனியானதொரு இராணுவத்தையும், வெளியுறவுக் கொள்கையையும் கொண்டிருப்பது போன்று தமிழீழ மக்களுக்கு அவர்களைப் பாதுகாக்கக் கூடிய தமிழ் இராணுவத்தைக் கொண்ட சுயாட்சி மாநில அரசைப்






பெறுவதன் மூலமே குறைந்த பட்சம் தனிநாட்டுக்கு அடுத்த படியாக அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று ஆலோசனை வழங்கினார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய தென்சூடான் அரசியல் ஆய்வாளர் ஜஸ்ரின் மோராற், உறுதியோடு போராடியதன் விளைவாகவே தென்சூடான் விடுதலை பெற்றதாகவும், அது போன்று அரசியல் வழியில் ஒன்றுதிரண்டு போராடுவதன் மூலம் என்றோ ஒரு நாள் தமிழர்களும் தமது விடுதலையை வென்றெடுக்க முடியும் என்றும், இரவுக்கு முடிவாக நிச்சயம் விடியல் ஏற்படும் என்று தமிழர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அரசியல் பிரிவைச் சேர்ந்த கலாநிதி A.R.சிறீஸ்கந்தராஜா உரையாற்றுகையில், அரசியல்-ஜனநாயக முறைகளைத்



தழுவி அமைதிவழி நின்று தமிழீழ மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே தேசத்தின் புதல்வி மருத்துவர் துவாரகா பிரபாகரன் அவர்கள் வெளிப்பட்டிருப்பதாக குறிப்பிட்டதோடு, அரசியல் வழியில் தமது உரிமைகளைத் தமிழீழ மக்கள் வென்றெடுப்பதற்கான திண்ணியமான அரசியல் வேலைத்திட்டங்கள் அடுத்த கட்டமாகப் பிரித்தானியாவிலும், ஏனைய நாடுகளிலும் தொடங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தென்சூடான், சூடான் ஆகிய தேசங்களைச் சேர்ந்த தமிழீழ ஆதரவாளர்களோடு, ஈரானில் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கும் அரபு சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், ஆங்கிலேய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களோடு இந் நிகழ்வில் கலந்து கொண்ட மாடபாவித சுலோச்சன என்ற சிங்கள சகோதரர் கருத்துக் கூறுகையில், உண்மை தெரியாததன் காரணமாகவே பெரும்பாலான சிங்களவர்கள் தவறான பாதையில் செல்வதாகவும், எனினும் தன் போன்ற உண்மை தெரிந்த சிங்களவர்கள் தமிழர்களின் தன்னாட்சி உரிமையை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பொதுமக்களோடு, பிரித்தானியாவின் ஆளும் கட்சிக்கு ஆதரவான தமிழ் அமைப்பு ஒன்றின் பிரமுகர் ஒருவரும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாட்டாளர்களும், தாயகத்தில் இயங்கும் அரசியல் கட்சியான ரெலோ இயக்கத்தின் பிரித்தானிய பொறுப்பாளரான சாம் சம்பந்தன் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 15 நாளாக 29.02.2024 தொடரும் மனித நேய ஈருருளிப்பயண அறவழிப்போராட்டம் சுவிசு நாட்டினுள் பயணிக்கின்றது!

பெப்ரவரி 29, 2024

கடந்த 15.02.2024 பிரித்தானிய பிரதமரின் வதிவிடத்தின் முன் ஆரம்பித்த ஈருருளிப் பயணம் நெதர்லாந்தில் அமைந்திருக்கும் அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்திலும் சந்திப்புக்களை மேற்கொண்டு எமது கோரிக்கை அடங்கிய மனுக்களைக் கையளித்திருந்தது. சிறீலங்கா பேரினவாத சர்வாதிகார அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழீழ தனி அரசே நிரந்தர தீர்வு என்பதனையும் கோரிக்கைகளாக முன்னிறுத்தியவாறு தொடருகின்ற இப்போராட்டம் பிரித்தானியா, நெதர்லாந்து, பெல்சியம், லக்சாம்பூர்க், யேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் பல முக்கிய அரசியற் சந்திப்புக்களை நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.






கடந்த 2021 தை மாதம் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மதிபிற்குரிய பசுலேட் அம்மையார் அவர்கள் கூறப்பட்ட கருத்திற்கு "தமிழின அழிப்பினை மேற்கொண்ட சிறீலங்கா பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் விசாரிக்க சர்வதேச குமுகம் முன் வரவேண்டும்" இக் கருத்தை இக் கூட்டத் தொடரில் நடைமுறைப் படுத்த வலுச்சேர்க்க அனைத்து தமிழ் உறவுகளும் போராட வேண்டும். இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் போராட்டங்கள் இந்தக் கோரிக்கையில் ஒரு சேர் புள்ளியில் சந்திக்க வேண்டும். அவை எமக்கான இலக்கான "சுதந்திர தமிழீழமும், சிறீலங்கா பேரினவாத அரசினால் மேற்கொண்ட திட்டமிட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணையே.. ICC ஆகும்.

சர்வதேச ஊடகங்களும் முக்கிய அரசியல் மையங்களும் தமிழர்களின் நீதிக்கான போராட்டங்களில் கவனம் செலுத்தும் இவ்வேளை எந்தத் திரிபும் விட்டுக்கொடுப்பும் இன்றி நாம் போராட வேண்டும். அதன் அடிப்படையே 28வது தடவையாக தொடரும் மனித நேய ஈருருளிப்பயண அறவழிப்போராட்டம். 10ம் நாளாக 25.02.2024 தொடர்ந்து பிரான்சு நாட்டின் எல்லையினை மிக எழுச்சிகரமாக வந்தடைந்தது.

பிரான்சில் சிற்றிகைம், ஐரோப்பிய பாராளுமன்றம், செலாட்சாட், கொல்மார், வித்தனைம், முல்கவுசு, சான் லூயி, நகரசபைகளிலும் தமிழர்களுடைய நியாயமான கோரிக்கை அடங்கிய மனுக்களைக் கையளித்திருந்தது,

ஐக்கிய நாடுகள் அவையிலும் பாதுகாப்பு சபையிலும் சம நேரத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பிரான்சு நாடும் மிக முக்கியமானது. எனவே பல்லின வாழ் மக்களின் சக்தியோடும் ஊடகங்களின் முக்கியத்துவத்தோடும் பிரான்சு நாட்டு மக்களான தமிழர்களின் நியாயமான கோரிக்கைக்கு பிரான்சு நாட்டினைச் செவிசாய்க்க வைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கேற்ப நாமும் எமது அறவழிப்போராட்டங்களாலேயே எம்முடைய நியாயமான கோரிக்கையினை செவிமடுக்க வைக்கமுடியும்.



அறவழி ஈருருளிப்பயணத்தின் மூலம் வலுவான அரசியற் செய்தியினை சிற்றிகைம், ஐரோப்பிய பாராளுமன்றம், செலாட்சாட், கொல்மார், வித்தனைம், முல்கவுசு, சான் லூயி, நகரசபைகளில் முதல்வர்கள், மேற்சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனான சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் மனித நேய செயற்பாட்டாளர்களை இன்முகத்தோடு வரவேற்றது மட்டுமல்லாமல் பன்னெடுந்தூரம் சுமந்து வந்த நியாயமான கோரிக்கைகளினை தாம் வெளி நாட்டு வெளிவிவகார அமைச்சிடமும் பிரான்சு அரச அதிபரிடமும் சமர்ப்பிப்பதாகவும் உறுதிமொழி தந்து ஊக்குவித்தனர். நகரசபை முதல்வர்கள் தம் முகநூல் பக்கங்களிலும் தமிழின அழிப்பிற்கு நீதி கேட்கும் மனித நேய ஈருருளிப்பயணம் சார்ந்த பதிவுகளை பதிவுசெய்து தம் ஆதரவினைத் தெரிவித்தனர்.

எமது அறவழிப் போராட்டத்தை பாராட்டி மாநகர சபையின் இலச்சினை பதித்த நினைவுப்பரிசுகள் அறவழிப் போராளிகளுக்கு வழங்கி வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

இலக்கு நோக்கி பயணித்துக்கொண்டு இருக்கின்றனர். எதிர் வரும் திங்கட் கிழமை 04.03.2024 திகதி அன்று 14மணிக்கு ஐ.நா முன்றலில் ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில் தமிழீழ மக்களின் நீதிக்காகவும் விடுதலைக்கும் நடக்க இருக்கும் கவனயீர்ப்பு போராட்டத்தில் இணைந்து கொள்ள இருக்கின்றது. எனவே அனைத்து மக்களும் உங்கள் வரலாற்றுக் கடமையினை ஆற்ற வாருங்கள்.

சவால்கள் வழி நெடுகிலும் இருப்பினும் உடல் உபாதைகள் தாங்கி விடுதலைச் செய்தியினை விட்டுக்கொடுப்பின்றி இடித்துரைக்கப்படுகின்றது இப்போராட்டம் மூலமாக. 55வது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் முக்கியத்துவம் அறிந்த எம் உறவுளே, உங்கள் நாடுகளில் இந்தப்



போராட்டம் பயணிக்கையில் உங்கள் வரலாற்றுக்கடமையினை ஆற்ற தவறாதீர்கள். இது காலத்தின் கட்டாயம்.

# உணவுப் பொருட்கஞ்ககாக காத்திருந்த மக்கள் மீது இசுரவேல் படையின் தாக்குதல்!

பெப்ரவரி 29, 2024

காஸா நகரத்தில் உணவு பொருட்களுக்காக காத்திருந்த பாலஸ்தீனர்கள் மீது இசுரவேல் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 100-க்கும் அதிகமானோர் பலியானதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.





அமைச்சகம், இசுரவேல் இராணுவம் மக்கள் திரள் நோக்கி தாக்குதல் நடத்தியதாக தெரிவித்தது. ஆனால் சம்பவ இடத்திலிருந்தவர்கள் உதவி பொருள்கள் வந்த டிரக்கிலிருந்து மாவு மற்றும் கேனில் அடைக்கப்பட்ட பொருள்களைப் பாலஸ்தீனர்கள் எடுக்க முயன்றபோது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்தனர்.

போர் தொடங்கியபோது, காஸாவின் நகரப்பகுதி மற்றும் வடக்கு காஸாவின் பகுதிகள் இசுரவேலின் தாக்குதலுக்கு முதலில் உள்ளாகின.

இந்த பகுதி அதிகமாக பாதிக்கப்பட்டதோடு உணவு கொண்டு வரும் டிரக்குகள் இந்த மாதத்தில் பெரியளவில் வருவது இதுவே முதல்முறை என்பதால் மக்கள் திரள் கட்டுக்குள் வராமல் இருந்தது.

காஸாவின் பெரும்பாலான பகுதிகளில் உதவி பொருள்களைக் கொண்டு சேர்ப்பதில் இன்னும் சவால் நீடிப்பதாக அமைப்புகள் தெரிவிக்கின்றன.

சட்ட ஒழுங்கின்மை மற்றும் விரக்தியில் உள்ள மக்கள் டிரக்குகளை வழிமறித்து தங்களுக்கான பொருள்களை எடுத்து கொள்வது போன்ற நிகழ்வுகள் அரங்கேறுகின்றன.

போர் தொடங்கியது முதல் பலியான பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவிக்கிறது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






# சர்வதேச பெண்கள் நாள் – மார்ச் 08

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எமது பெண் போராளிகளின் அபாரமான போராற்றலையும் அவர்களின் வீரத்தையும் எதிரியே நன்கறிவான். அவர்கள் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியுமுகமாக வரலாற்றுப்பதிவாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும். இதற்கு எமது போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலை பற்றிய அறிவும் எமது போராளி களது நுண்மையான மன உணர்வுகளை புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். இல்லாது போனால் எமது போராட் டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக்கொள்வது கடினம். போர் பற்றிய அறிவு ஞானம் இல்லாத பழமையில் புதைந்து போன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளது வர லாற்றை துல்லியமாகக் கிரகித்தறிவது சிரமம். எனவே போர்க் களத்தில் அளப் பெரும் தியாகங்களையும். சாதனைகளையும் படைத்த பெண்போராளிகளே இப்பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பது நீண்டநாளாக என்னிடம் இருந்த பேரவா. எனது பேரவாவுக்கு விருந்தளிக்கும் மாலதி படையணியின் வெளியீடாக நெஞ்சையுறைய வைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக பெண் போராளிகளது வீரத்தையும் விவேகத் தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவேடாக இந்நூல் வெளிவருவது பெரும் மகிழ்வைத்தருகிறது.

எனவே எமது விடுதலைப் போராட்டத்திற் பெண்களையும் அணி சேர்ப்பதனூடாக படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற் படுத்தி பெண் விடுதலையையும் தேசவிடுதலையையும் சாத்திய மாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறு தான் எமது போராட்டத்திற் பெண்புலிகள் தோற்றம் பெற்று இன்று எதிரியின் படைபலத்தைச் சிதைத்து யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கின் றார்கள். ஒருநூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி புரட்சிகளை நடத்தி விவா தங்கள் புரிந்து கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத் தவற்றையும் விட எமது பெண்புலிகள் மிகவும் குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்கு பெற்றுக் கொடுத்த உரிமை களும் சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றார்கள். சமூக கருத்துலகின் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள். எல்லா வற்றுக்கும் மேலாக ஆணும் பெண்ணும் சமமான ஆற்ற லுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களின் கூற்றுக்கு பெண்புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்கின்றார்கள்.

புரட்சிப் புலிகளாகக் களமிறங்கியுள்ள எமது பெண்புலிகள் எத் தகைய துன்பங்களையும் சுமந்து எத்தகைய நெருக்கடிகளைம் சமாளித்து எத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டு போராடுகிறார்கள். அசைக்கமுடியாத மனவுறுதியும் அதனால் பிறக்கும் துணிவும் அவர்களிடம் உள்ளன. அபாரமான சகிப் புத்தன்மையும் தளராத உறுதியும் கடும் உழைப்பும் கொண் டவர்கள் அவர்கள். அவர்கள் தரையில் மட்டுமல்லாது கடலிலும் சண்டை செய்கிறார்கள். கடற்போர்க்கலை மிகவும் நுட் பமானது. அதற்கு நிறையப்பயிற்சியும் அனுபவமும் தேவை. கடல் சதா அசைந்து கொண்டிருக்கும். அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு சண்டையிடுவது மிகவும் கடினமானது. எமது பெண்புலிகள் மீன்குஞ்சுகள் போலக் கடலோடு வாழப் பழகி விட்டார்கள். இந்தப் பெண் போராளிகளை அவர்களது போராட்ட வாழ்க்கையை அவர்களிடையே நிலவும் ஆழமான புரிந் துணர்வை அளவிட முடியாத அன்புறவை இந்நூல் அழகு தமிழில் எளிய நடையில் மிக நுட்பமாக வெளிப்படுத்தப்படுகிறது. பல்வேறு இடங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களுக்கூடாக மாலதி படையணியின் வரலாறு சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது. மேலும் பெண்புலிகளது போரனுபவத்தை மாலதி படையணியின் சண்டையனுபவத்துடன் பின்னிப் பிணைத்து பெண்புலிகளது வரலாறு இந்நூலில் அழகாகப்படைக்கப் பட்டிருக்கிது. இந்நூலின் ஆக்கத்துக்கு அயராது உழைத்த மாலதிபடையணிப் போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு இந்நூல் சிறப்புடன் வெளிவர எனது நல் லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுதுமாகி வேருமாகி " நூலில் தேசியத் தலைவரின் வாழ்த்திலிருந்து...!

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்திலிருந்து


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி

# உன்னுடைய மற்றும் என்னுடைய கிராமங்களின் மீதொரு பாடல்!



எனக்குத் தெரியாது.
ஒரு ஆர்ப்பரிக்கும் கடலோரமோ
அல்லது
வனத்தின் புறமொன்றிலோ
உன் கிராமம் இருந்திருக்கும்.
பெரிய கூழாமரங்கள் நிற்கிற
செம்மண் தெருக்களை
வசந்தத்தில் வந்தமர்ந்து பாடும்
உன் கிராமத்துக் குருவிகளை
எனக்குத் தெரியாது.
மாரிகளில்
தெருவோரம் கண்மலரும் சின்னஞ்சிறிய பூக்களை
நீள இரவுகளில்
உடுக்கொலித்து நீ பாடிய கதைகளை
நிலவு கண்ணயரும்
உன் வாவிகளை
நானறியேன்

காற்றும் துயர்ப்படுத்தும்
இவ்விரவில்
நானும், நீயும் ஒன்றறிவோம்.
ஒரு சிறிய
அல்லது பெரிய
சுடுகாட்டு மேடுபோலாயின
எமது கிராமங்கள்.
அலைபாடும் எங்கள் கடலெல்லாம்
குருதி படர்ந்து மூடியது.
விண்தொட மரமெழுந்த வனமெல்லாம்
மனிதக் குரல்கள் அலைவுற
சதைகள் தொங்கும் நிலையுமாயிற்று.
முற்றுகையிடப்பட்ட இரவுகளில்
தனித்துவிடப்பட்ட நாய்கள் ஊளையிட
"முந்தையர் ஆயிரம்" காலடி பாவிய
தெருவெல்லாம் புல்லெழுந்து மூடியது.
நானும், நீயும் இவையறிவோம்.
இறந்து போன பூக்களை
கைவிடப்பட்ட பாடலடிகளை
நினைவுகூரப்படாத கணங்களைக் கூட
அறிவோம்.

ஆனால்
கருகிப்போன புற்களிற்கு
இன்னும் வேர்கள் இருப்பதை
கைவிடப்பட்ட பாடல்
சொற்களின் மூலத்துள் அமர்ந்திருப்பதை
நீ அறிவாயா?
குருதி படர்ந்து மூடிய
கடலின் ஆழத்துள்
இன்னும்
எங்கள் தொண்மைச் சுடர்கள் மோனத்திருப்பதை
அவர்களைப் போல
நீயும் அறியாது விடின்
இன்றறிக
"ஓராயிரம் ஆண்டுகள் ஒய்ந்து கிடந்த பின்"
ஓர்நாள் சூரியன் எழுந்து
புலர்ந்ததாம்.

நன்றி: பா. அகிலன்




# 'சத்ஜய'வும் 'ரிவிரச'வும் ஓயாத அலைகளும் தவளையும்!



மூன்று கட்டங்களாக சிங்கள அரசு நடாத்திய "சத்ஜய" இராணுவ நடவடிக்கையின் விளைவாக - கிளிநொச்சி நகர் உள்ளிட்ட 60 ச.கிலோ மீற்றர் நிலத்தில், சிங்களப் படைகள் நிலை கொண்டுள்ளன.

அத்துடன், படையினர் கைப்பறிய நிலப்பகுதியைச் சூழவுள்ள, மேலும் 100 ச. கிலோ மீற்றர் நிலப்பரப்பு, மக்கள் வாழாத வாழ்வதற்கு அஞ்சும் - பகுதிகளாக மாறிவிட்டன.

மொத்தத்தில், குடிசன அடர்த்தியையும் விளைநில வளங்களையும் உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்டத்தின் 150 ச. கிலோ மீற்றர் நிலத்தை "சத்ஜய" ஆக்கிரமித்துள்ளது.

இந்த நிலைப்பரப்பில் இருந்து சுமார் 1.5 இலட்சம் மக்கள் இடம் பெயர்துள்ளனர். இவர்களின் கணிசமானோர் யாழ் குடா நாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வந்து - வதிவிடங்களை அமைத்து வாழ்ந்த மக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுத் தளத்தின் (முன்னைய) முன்னணிக் காவலரண்கள் அமைந்திருந்த உப்பளம் மற்றும் தட்டுவன்கொட்டிப் பகுதியில் 26.07.1996 அன்று ஆரம்பித்த "சத்ஜய-1" சண்டை முனையிலிருந்து - இப்போது "சத்ஜய" படையினர் நிலை கொண்டுள்ள (கிளிநொச்சி) டிப்போச் சந்திவரையான தூரம், 12 கி.மீ. நீளம் ஆகும்; இதன் அகலம் 3.5 கிலோ மீற்றர்.

"சத்ஜய" சமர் ஆரம்பிக்கும் முன்னரே, பரந்தன் சந்திவரையான நிலப்பகுதி, மக்கள் வாழாத பகுதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1279 ச. கிலோ மீற்றர் பரப்பளவை உடைய கிளிநொச்சி மாவட்டத்திலேயே, ஆனையிறவுப் படைத்தளம் அமைத்திருக்கின்றது.

கிளிநொச்சி நகர்ப் பகுதியையும் கைப்பற்றி ஆனையிறவுடன் இணைத்ததன் மூலம் இப்போது, இம்மாவட்டத்தின் மேலும் 60 ச.கிலோ மீற்றர் நிலப்பரப்பு, படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் வீழ்ந்துவிட்டது.

"சத்ஜய" சமரில் 269 படையினர் பலியாகினர் 311 போர் காயமடைந்தனர்" என அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

"கிளிநொச்சி சண்டையில் காயமடைந்த படையினருக்குச் சிகிச்சை செய்ய இரத்ததானம் செய்யுங்கள்" என, சிங்கள மக்களிடம் சிறீலங்கா ஜனாதிபதி அவசர வேண்டுகோள் விடுத்திருந்தார். அத்துடன், "வழமையான சத்திரசிகிச்சைகளை தற்காலிகமாக நிறுத்திவிட்டு படையினருக்கு சிகிச்சை அளிப்பதாக" கொழும்பு பிரதான வைத்தியசாலை நிருவாகம் அறிவித்தமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அரசு சொல்லியிருப்பது போல 311 படையினருக்குச் சிகிச்சை அளிக்க இத்தனை தடபுடல்களும் தேவையா?

சிங்கள தேசத்தின் தலைமையும் அதன் பிரதான வைத்தியசாலையின் நிர்வாகமும் நெருக்கடியைச் சந்திக்கும் அளவுக்கு "சத்ஜய" சமரில், பெருந்தொகைப் படையினர் காயப்பட்டு விட்டனர் என்பதே உண்மையாகும்.

"இழப்புக்களை அரசு அரைப்பங்காகக் குறைத்து வெளியிட்டுள்ளது" என, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டியுள்ளதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது.

மூன்று கட்டங்களாக நடந்த "சத்ஜய" சமரில், சுமார் 700 படையினர் கொல்லப்பட்டுவிட்டனர்; ஏறக்குறைய 2,500 படையினர் காயமடைந்துவிட்டனர் என்பதே உண்மையாகும்.

இரண்டு "பிரிகேட்" டுக்கள் "சத்ஜய" சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, முன்னர் அரசு கூறியிருந்தது. ஆயினும், பின்னர் மேலும் ஒரு "பிரிகேட்" சண்டைக்கு அனுப்பப்பட்டதாக அரசு அறிவித்திருந்தது. காயம்பட்டு அல்லது கொல்லப்பட்டதால் களத்திலிருந்து அகற்றப்பட்ட படையினருக்குப் பதிலாகவே, புதிய "பிரிகேட்" சமர்முனைக்கு அனுப்பப்பட்டது என்ற கள யதார்த்தத்தை, எவரும் மறுக்க முடியாது. ஒரு "பிரிகேட்" என்பது சிங்கள இராணுவ நடைமுறையில் 4,500 இலிருந்து 5,000 ஆட்தொகையைக் கொணடதாகும்.

இதேவேளை, மூன்று கட்ட "சத்ஜய" சண்டைகளிலும் 254 புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

"சத்ஜய" சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்த வரையில், நிலத்தைக் கைப்பற்றிய விடயத்தில் சிங்களப் படை வெற்றியைப் பெற்றுள்ளது. ஆனால், இதற்காக அரச படைகள் செலுத்திய விலையைக் கருத்தில் எடுத்தால், அதை, புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும். 700 படையினரை இழந்து 2,500 படையினர் காயப்பட்டதுடன், பாரிய தொகைப் படைக்கல சக்தியையும் (குண்டு + எறிகணைகள்) அரசுப் படைகள் செலவிட்டுள்ளன.

இந்த வகையில், "சத்ஜய" சமரின் போது சிங்களப் படைகள் கொடுத்த உயிர் விலைக்கும் செலவிட்ட படைக்கலங்களுக்கும் இணையாக புலிகள் தரப்பில் இழப்புக்களை ஏற்படுத்த, அரசுப் படைகளால் முடியவில்லை. "புலிகள் தரப்பில் 1,000 பேரைக் கொன்று 3,000 பேரைக் காயப்படுத்தியதாக" அரசு பிரச்சாரம் செய்தது. "சத்ஜய" சமருக்காக சிங்களப் படைகள் செலுத்திய விலைக்கு இணையாக, புலிகள் தரப்பில் எவ்வளவு ஆள் இழப்பு இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற சிங்களத் தளபதிகளின் கணிப்போ 1,000-உம், 3,000-உம் என்ற சிங்கள அரசின் பிரச்சாரமாகும்.

குறைந்த எண்ணிக்கையான இழப்புடன் கூடிய எண்ணிக்கையான இழப்பை படையினருக்கு வழங்கிய செயலை "சத்ஜய" சமரில் புலிகள் பெற்ற ஒரு இராணுவ வெற்றியாகக் கொள்ளமுடியும்.

இதேவேளை, மக்கள் நெருக்கமாக வாழ்ந்த கிளிநொச்சியின் 60 ச.கிலோ மீற்றர் நிலத்தை சிங்களப் படை கைப்பற்றியதால், அங்கு வாழ்ந்த மக்கள் பெருந்துன்பத்தைச் சந்தித்துள்ளனர்; இவர்களது அன்றாட வாழ்க்கை பேரிடருக்குள்ளாகியுள்ளது. எனினும், பரந்த வன்னிப் பெருநிலத்தில் 60 ச.கிலோ மீற்றர் நிலத்தைச் சிங்களப்படை தனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்த செயல் புலிகள் இயக்கத்திற்கு எந்த ஒரு இராணுவ பின்னடைவையோ அல்லது அரசியல் நெருக்கடியையோ வழங்கவில்லை.

"சத்ஜய" சமரின் இராணுவ நோக்கங்களில் ஒன்று, புலிகளைச் சமருக்கு இழுத்து - இயன்றவரை அழிப்பது என்று அரசு கூறியிருந்தது. அத்துடன் கிளிநொச்சியைப் பிடிப்பதன் மூலம் புலிகளின் பின் தளமான வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளுக்கு ஒரு இராணுவ அச்சுறுத்தலைக் கொடுப்பதுடன், அங்கே தனது இராணுவ மேல்நிலையைக் காட்டுவது என்பதும் "சத்ஜய" வின் இன்னொரு இராணுவ நோக்கமாகும்.

இதில் முதலாவது இராணுவ நோக்கம் ஈடேறவில்லை. கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதும் அதன் இரண்டாவது இராணுவ நோக்கம் நிறைவேறி விடும் என்று முரசறைந்திருப்பது முட்டாள்தனமாகும்.

"சத்ஜய"வின் அரசியல் நோக்கங்களில் ஒன்று, முல்லைத்தீவு தோல்வியை கிளிநொச்சியைக் கைப்பற்றி ஈடுகட்டுவது; அடுத்து, புலிகளின் தற்போதைய நிர்வாக மையமான கிளிநொச்சியைக் கைப்பற்றிப் புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது.

முதலாவது அரசியல் நோக்கம் - சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை - ஈடேறி இருக்கலாம்; ஆனால், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு இது, எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது. நிர்வாக அலகுகள் இயங்கிய கட்டடங்களை அல்லது இடங்களைக் கைப்பற்றுவது என்பது, புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கைப்பற்றுவது என்றோ அல்லது அதை அழித்தொழிப்பது என்றோ அர்த்தமாகாது.

அத்துடன், பூகோள ரீதியில் காட்டையும் காடுசார்ந்த இடங்களையும் பிரத்தியேக இயல்பாகக் கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பை, புலிகள் இயக்கம் தனது பின்தளமாக மாற்றிக் கொண்டுவிட்ட இன்றைய சூழலில், புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது என்ற அரசின் பிரச்சாரம் இல்லது அரசியல் நோக்கம் நகைப்பிற்கு இடமாக உள்ளது அல்லவா!

60 ச.கிலோ மீற்றர் பரப்பளவை படையினர் புதிதாகக் கைப்பற்றிவிட்டனர் என்பது, தமிழினத்திற்கு கவலைதரும் விடயமாகும். ஆனால், இந்த நிலப்பரப்புக்குப் பதிலாக 30 ச. கிலோ மீற்றர் நிலப்பரப்பை விழுங்கி வைத்திருந்த பூநகரித் தளத்தை அகற்றவேண்டிய தேவை அரசிற்கு எழுந்துவிட்டதை, நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

'சத்ஜய' சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்த வரையில், நிலத்தைக் கைப்பற்றிய விடயத்தில் சிங்களப் படை வெற்றியைப் பெற்றுள்ளது. ஆனால், இதற்காக அரச படைகள் செலுத்திய விலையைக் கருத்தில் எடுத்தால், அதை, புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும்.




புதிதாக ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றி இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் சிலவற்றைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் அரசுப் படைக்கு இன்றும் இருக்கின்றது; இனியும் இருக்கும் என்பதே இராணுவ யதார்த்தம் ஆகும். குடாநாட்டைக் கைப்பற் றிவைத்திருக்க கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதியைக் கைவிட வேண்டியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

“வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இரா ணுவத்தினருக்கு நான் எங்கே செல்வது…? கிழக்கில் இருந்து துருப்புக்களை எடுக்க நான் தயங்காமாட்டேன்” என்று, அண் மையில் ரத்வத்த குரலெழுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அழித்ததன் மூலம் புலிகள் இயக்கம் பெற்ற இராணுவ வெற்றி, கிளிநொச்சியை இழந்ததால் அர்த்தமற்றுப் போய்விட்டதல்லவா எனச் சிலர் கேள்வி எழுப்பக் கூடும்.

முல்லைத் தளம் மீதான தாக்குதலையும் “சத்ஜய” சமரையும் ஒரே இராணுவத் தராசில் வைத்து எடைபோட்டுத் தீர்ப்புக்கூற முனைவது, ஒரு இராணுவத் தவறு ஆகும்.
முல்லைத் தளம் மீதான தாக்குதலின் இராணுவப் பரிமாணம் வேறு; “சத்ஜய” சமரின் இராணுவப் பரிமாணம் வேறு.

முல்லைத்தீவுத் தாக்குதல், கெரில்லாப் போர் உபாயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாரிய திடீர்த் தாக்குதல்.

இத் திடீர்த் தாக்குதலை புலிகள் இயக்கமே நடாத்தியது.

தாக்குதல் திட்டம் தீட்டி - இரகசியமான முறையில் படை பலத்தை ஒருங்கு திரட்டி - திட்டத்திற்கேற்ப பயிற்சி அளித்து - தாக்குதலுக்கான நாள், நேரம் குறித்து - சிங்கப்படை நிலைமீது நடாத்தப்பட்ட ஒரு வலிந்த தாக்குதலே (Offfence) முல்லைத் தளம் மீதான் தாக்குதல் ஆகம்.

ஆனால், “சத்ஜய” சமர் அப்படியானதல்ல.

இச்சமருக்கான போர்த்திட்டத்தை சிங்களத் தளபதிகள் வரைந் தனர். படையினருக்குப் பயிற்சி கொடுத்தனர். தாக்குதலுக்கான நாளும், நேரமும் நகரும் திசையும் குறித்தனர். இவ்விதம் தமிழர் படையின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த ஒரு பகுதி மீது, மரபு வழிப் போர்முறையில் படையினர் நடாத்திய ஒரு வலிந்த தாக்குதலே “சத்ஜய” சமர் ஆகம்.

புலிகள் இயக்கத்திடமிருந்த மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை யும், பலத்தையும் அடிப்படையாக வைத்து, முல்லைத்தளம் மீதான தாக்குதலைத் தலைவர் பிரபாரகன் திட்டமிட்டு நடாத்தி யிருந்தார். இத்தாக்குதல் திட்டத்தின் அனைத்து இலக்குகளை யும் புலிகள் வென்றுவிட்டனர்.

“சத்ஜய” ஒரு மரபுவழிச் சமர். ஆட்தொகையும், ஆயுத பலமும், படைக்கல சக்தி வளமும் இந்தவகைப் போர் முறையின் முது கெலும்பு. சிங்களப் படையின் முதுகெலும்பு சற்றுப் பலமானது. இந்தப் பலத்தை அடித்தளமாக வைத்து, “சத்ஜய” சமரை ரத் வத்த திட்டமிட்டார். கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதுடன் புலிகளுக்குப் பாரிய ஆள் இழப்பை உண்டுபண்ண வேண்டும் என்பதும், ரத்தவத்தவின் பிரதான இலக்குகளாக இருந்தன. இதில் ஒன்று ஈடேறியுள்ளது; மற்றையது நடைபெறவில்லை. “சத்ஜய” சமரில் ரத்வத்தவுக்கு பாதி வெற்றிதான்.

“சத்ஜய” சமரை இராணுவ ரீதியில் ஒப்பிட விரும்புவோர். “ரிவிரச” சமருடன் இதை இணைத்துப் பார்க்கலாம்.

அதுபோல முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலை இரா ணுவ ரீதியில் ஒப்பிட விரும்புவோர் அதை, பூநகரித் தளம் மீதான தாக்குதலுடன் ஒப்பிட்டு அவற்றின் இராணுவ பரி மாணங்களை ஆய்வுசெய்து பார்க்கலாம்.

அதாவது, ஒரு மரபுவழிச் சமரை அதே இராணுவ பரி மாணத்தை உடைய இன்னொரு மரபுவழிச் சமருடனேயே ஒப் பீடு செய்து பார்க்க வேண்டும். அதுபோல, இராணுவத் தளம் மீதான ஒரு பெருந் தாக்குதலை, இன்னொரு தளம் மீதான பெருந் தாக்குதலுடன் ஒப்பிட்டு இராணுவ மதிப்பாய்வுகளைச் செய்வவே இராணுவ ரீதியில் சரியானதாகும்.

“ரிவிரச” வைப் போலவே “சத்ஜய”வும் மூன்று கட்டங்களாக நடாத்தப் பட்டுள்ளது. “சத்ஜய” வின் இரண்டாம் மூன்றாம் கட் டங்கள் தீவிர சண்டைகளைக் கொண்டிருந்தன. அதுபோல, “ரிவிரச”வின் முதலாம் கட்டமான வலிகாமச் சமரை மட்டும், புலிகள் எதிர்கொண்டிருந்தனர்.

“ரிவிரச”வின் வெற்றிக்குப் பிரதான காரணமாக “ஆட்டிலறி”ப் பலத்தையே நான் கொள்வேன்” என, முன்னாள் இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா கூறியிருந்தார். “ரிவிரச”வில் மட்டுமல்ல, “சத்ஜய”விலும் எறிகணை - குண்டுப் பிரயோகம் பிரமாண்ட மான அளவில் பயன்படுத்தப்பட்டது.

“ரிவிரச -1” அதாவது வலிகாமச் சமர், 50 நாட்கள் நடந்தது. அந்த ஐம்பது நாள் சமரில், தொண்ணூறாயிரம் (90,000) எறி கணைகளை அரசுப் படைகள் பயன்படுத்தியிருந்தன என, சிறீலங்காச் செய்திகள் தெரிவித்துள்ளன.

எனவே, நாளொன்றுக்கு 1,800 எறிகணைகள் என்ற வீதத்தில், புலிகள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வலிகாமச் சமரில் 494 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்; படையினர் தரப்பில் 750 பேர் வரையில் பலியாகியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க,

“சத்ஜய” சமரின் இரண்டாம் கட்டமும் மூன்றாம் கட்டமும் தீவிர சண்டைகளைக் கொண்டமைந்திருந்தன.

04.08.1996 அன்று தொடங்கிய “சத்ஜய - 2” நான்கு நாட்கள் தீவிரமாக நடந்தது.

22.09.1996 அன்று தொடங்கிய “சத்ஜய - 3” பத்து நாட்கள் தீவிரமாக நடந்தது.

26.07.1996 அன்று தொடங்கிய “சத்ஜய - 1” ஒருநாள் மட்டுமே தீவிரமாக நடந்தது.

மொத்தத்தில் “சத்ஜய” சமர் 15 நாட்கள் தீவிரமான முறையில் நடந்தது எனலாம். இந்தப் 15 நாள் சமரில் மட்டும் சுமார் 50,000 (ஐம்பதாயிரம்) எறிகணைகளை அரசுப் படைகள்

> “வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இராணுவத்தினருக்கு நான் எங்கே செல்வது....? கிழக்கில் இருந்து துருப்புக்களை எடுக்க நான் தயங்கமாட்டேன்” என்று, அண்மையில் ரத்வத்த குரலெழுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.



பயன்படுத்தின எனக் கணிப்பிடக்கூடியதாக உள்ளது.

அதாவது, நாளொன்றிற்கு மூவாயிரம் (3,000) எறிகணைகள் வீதத்தில் புலிவீரர்கள் மீது ஏவப்பட்டுள்ளன. (“ரிவிரச” வில் நாளொன்றுக்கு 1,800)

இது ஒரு கற்பனைக் கணக்கு என்று எவரும் கருதிவிடக்கூடாது. உதாரணத்திற்கு 26.09.1996 அன்று அதிகாலை நடந்த சண்டையின் தன்மை பற்றி இங்கு பார்ப்போம்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுநாளான அன்று, உருத்திரபுரத்தில் நிலைகொண்டிருந்த படையினர் மீது புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தி, 200 இற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றனர் என்பது முன்னர் வெளிவந்த செய்தி.

புலிகளின் அந்த அதிரடித் தாக்குதல், அதிகாலை 5:30 இலிருந்து 8:30 வரை மூன்று மணிநேரம் நடைபெற்றது. புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்காக அந்த வேளையில் படையினர் எறிகணைகளை அள்ளி விதைத்தனர். செக்கனுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட எறிகணைகள் என்ற வீதத்தில், அந்த மூன்று மணிநேரமும் எறிகணை வீச்சு இடம்பெற்றிருந்தது. அந்த மூன்று மணி நேரத்தில் மட்டும், அரசுப்படைகள் 10,000 (பத்தாயிரம்) எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பர் என்று கணிக்க முடியும். மேலும், சண்டை தீவிரமாக நடைபெறாத மிகுதி 55 நாட்களும் - தற்பாதுகாப்புக்காக எதிரி பல்லாயிரம் எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பான். (இந்த எறிகணைகள் இந்த ஆய்வில் கையாளப்படவில்லை).

இவை ஒருபுறமிருக்க,

“ரிவிரச”வில் சிங்கள வான்படை வீசிய குண்டுகளை விட பல



பத்து மடங்குகளை அவை, “சத்ஜய” சமரில் வீசியுள்ளன. “கிபீர்” உந்துவிசைப் போர் விமானங்களின் முழுவீச்சான குண்டு வீச்சுத் தாக்குதலை, கிளிநொச்சிச் சமர்முனை அனுபவித்தது.

ஆடி 26ம் திகதி “சத்ஜய -1” இல் இருந்து “சத்ஜய -3” ஓய்வுக்கு வந்த ஐப்பசி 2ம் நாள் வரையான சுமார் 65 நாட்கள், கிளிநொச்சியும் அதன் சுற்று வட்டாரமும் “இரும்புக் கழுகுகளின்” எச்சம் பட்டு அதிர்ந்தபடியிருந்தன!

சண்டை தீவிரமாக நடந்த 15 நாட்களும், நாளொன்றிற்கு நான்கு தடவைகள் என்ற வீதத்தில் பறந்து வந்த “கிபீர்” விமானங்கள் குண்டு வீசிச் சென்றன. ஒரு தடவையின் போது, இரண்டு “கிபீர்” விமானங்கள் வந்து குண்டு வீசுவது வழமை. இந்த வகையில், 120 குண்டு வீச்சுப் பறப்புக்களை அந்தப் 15 நாட்களிலும் “கிபீர்” விமானங்கள் செய்துமுடித்துள்ளன.

இதைவிட மற்றைய நாட்களில் நாளொன்றிற்கு இரண்டு தடவைகள் என்ற வீதத்தில் “கிபீர்” விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

“சத்ஜய”வின் இந்த 70 நாட்களில், சுமார் 10 அல்லது 15 நாட்கள் மட்டுமே குண்டுவீச்சு நடைபெறாத நாட்களாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, மிகுதி நாட்களில் “கிபீர்” விமானங்கள் சுமார் 100 குண்டுவீச்சுப் பறப்புக்களை நடாத்தி உள்ளன எனக் கணிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் “சத்ஜய”வின் 65 நாட்களில் சுமார் 220 குண்டு வீச்சுப் பறப்புக்களை “கிபீர்” புக்காரா விமானங்கள் செய்துள்ளன.

ஒரு “கிபீர்” அல்லது “புக்காரா” விமானம் ஒரு பறப்பின் போது, 1,500 கிலோ நிறைகொண்ட குண்டுகளை எடுத்துச்சென்று வீசவல்லது. அவை 500 கிலோ கொண்ட மூன்று குண்டுகளாக அல்லது 250 கிலோ கொண்ட ஆறு அல்லது 125 கிலோ கொண்ட பன்னிரண்டாக இருக்கும்.

அப்படியாயின், 220 பறப்புக்களின் போதும் மொத்தம் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் கிலோ எடைகொண்ட குண்டுகளை அவை வீசிமுடித்தன.

இது ஏறக்குறைய 325 தொன்கள் ஆகும்.

இதேவேளை, “சத்ஜய”வில் பயன்படுத்தப்பட்ட 50,000 எறிகணைகளின் எடையைப் பருமட்டாக மதிப்பிடால், அது ஏறக்குறைய 500 தொன் நிறையுடையது என்ற முடிவிற்கு வர முடிகின்றது.

எனவே, இந்த 825 (500 + 325) தொன் வெடிபொருளை கிளிநொச்சிச் சமர் முனையில் எதிரிப்படை பயன்படுத்தியும் கூட, புலிகளின் தரப்பில் 254 போராளிகளைக் கொல்ல மட்டும் தான் முடிந்தது. “சத்ஜய” சமரில் புலிவீரர்களுக்கு கிடைத்த ஒரு அற்புதமான இராணுவ வெற்றியாக இதைக் கருதுவது தவறா?

மேலும், எறிகணை மழையையும் - வெடிமருந்துப் புயலையும் ஏவிவிட்டவர்களின் தரப்பில் 700 பேரைக் கொன்று 2,500 பேரைக் காயப்படுத்திய புலிவீரர்களின் செயல், ஆச்சரியமூட்டும் ஓர் அற்புதமாகத் தெரியவில்லையா?

“ரிவிரச” மற்றும் “சத்ஜய” சமர் முனைகளில் ஏற்பட்ட இருதரப்பு இழப்புக்களின் விகிதாசார வேறுபாடு, மற்றும் படையினர் செலவிட்ட படைக்கல சக்தியின் அளவு வேறுபாடுகள் என்பவற்றைக் கருத்தில் எடுத்து இரண்டு சமர்களையும் ஆராய்ந்து பார்த்தால், மரபுவழிப் போர்முறையில், “ரிவிரச” வை விட “சத்ஜய” வில்



“புலிகள் இயக்கம்” தனது போரிடும் திறனில் வளர்ச்சியைக் காட்டியுள்ளது எனலாம்.

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கும் பல்வேறு இராணுவ அம்சங்களில் மேற்குறித்த அம்சமும் ஒன்றாகும்.

ஆயினும், நிலத்தைக் கைப்பற்றும் விடயத்தில் படையினர் பெறுகின்ற தற்காலிக வெற்றிகள், புலிகளின் பக்கமுள்ள மேற்குறித்த வெற்றிகர இராணுவ அம்சத்தை மறைத்துவிடுகின்றன என்பதே உண்மையாகும்.

1939 - ஆம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் உலகப் போரில், இப்போது சிங்களப் படை நிலங்களைக் கைப்பற்றுவது போலத்தான் கிட்லரின் நாஜிப் படைகளும், வரிசையாக நாடுகளைப் பிடித்தன. புலிகள் இயக்கம் இப்போது தனது படைப்பலத்தைப் பாதுகாத்தபடி - குறித்த சில பகுதிகளில் இருந்து பின்வாங்குவதைப் போலத்தான், அமெரிக்கா - பிரிட்டன் உள்ளிட்ட நேச நாடுகளின் அணியும் அப்போது, சில பிராந்தியங்களை விட்டுப் பின்வாங்கித் தளங்களை நிலைப்படுத்தத் தொடங்கின.

ஆயினும், நிலங்களைக் கைப்பற்றி வைத்திருந்த நாஜிப் படைகளால் போரை வெல்லமுடியவில்லை. அது நிலங்களைக் கைப்பற்றிக் கைப்பற்றி, அதுகாரணமாக ஏற்பட்ட இராணுவத் தவறுகளினால் போரில் தோற்றது.

எதிரிப் படையானது அரசியல் - இராணுவ ரீதியில் பலவீனப்பட்டுச் சிதைவடையும் போது அதன் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே, உண்மையான இராணுவ வெற்றியாகும். குறித்த சில இராணுவ நோக்கங்களுக்காக அது தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்யும்போது அதன் நிலத்தைக் கைப்பற்றுவது என்பது, ஒரு நிரந்தர இராணுவ வெற்றியாகக் கொள்ளப்பட முடியாதது.

கிட்லரின் படைகள் படித்த அதே இராணவப் பாடத்தைத்தான் சிறீலங்காவின் படைகளும் படிக்கப் போகின்றன என எதிர்வு கூறுவது தவறாகுமா?

எரிமலை மார்ச் 1997




# I.P.K.Fஇன் தமிழின அழிப்பு: இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகள்

இந்திய அமைதிப்படைகளின் காலத்தில் அவர்கள் தமிழ் பெண்கள் மீது பரவலான பாலியல் வல்லுறவுகளையும் மேற்கொண்டார்கள். இதுபற்றிய முறைப்பாடுகளுடன் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய இராணுவத் தளபதியிடம் சென்றபோது, இப்படியான முறைப்பாடுகளுடன் தன்னிடம் வரவேண்டாம் என்றும், யாரையாவது அவரது படைகள் சுட்டால் மட்டுமே முறைப்பாடுகளுடன் வரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இந்திய இராணுவத்தால் பாலியல் வன்முறைகளை மிகப் பரவலாக இடம்பெற்று வந்ததால் இதை ஒரு குற்றச்செயலை கருதவேண்டாம் என்று இராணுவத் தளபதிகள் மக்களை நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

இக்காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் பணியாற்றிய பல தமிழ் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகிய நூற்றுக்கணக்கான இளம் பெண்களுக்கு சிகிச்சையளித்திருக்கின்றார்கள். பல்கலைக்கழக ஆசிரியரும் சமூகப்பணி ஆர்வலருமாக இருந்து பின்னர் படுகொலை செய்யப்பட்ட ரஜினி தினகரகம இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார். இந்தியப் படைகள் புரிந்த பாலியல் கொடுமைகள் சர்வதேச மன்னிப்புக் சபையின் அறிக்கைகளிலும் ஒரு தலைப்பாக இடம்பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் வெளிவந்த உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் இந்தியப் படைகள் புரிந்த பாலியல் குற்றஞ்செயல்கள் பற்றிய செய்திகள் அதிகமாக வெளிவந்திருக்கின்றன.

இக்காலப்பகுதியில் நிலவிய பாலியல் வல்லுறவுக்குட்படும் பயம் காரணமாக இளம் பெண்கள் அதிக அளவில் தமிழ் ஆயுதக் குழுக்களில் இணைந்து கொண்டார்கள். தங்களது நண்பர்களும் அயலவர்களும் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குடபடுத்தப்பட்டதே தாங்கள் இவ்வாறு இணைவதற்கு உந்து சக்தியென்று பலர் கூறியுள்ளார்கள். மானுடவியலாளர்கள் கூற்றில் கூறுவதனால், ஒரு இளம் பெண்ணின் இம்முடிவானது, அவரை பாதிக்கப்படக்கூடியவர் என்ற நிலையை களைந்து சமூகத்தில் சக்தியுள்ள ஒருவராக மாற்றுகிறது எனலாம்.

**புள்ளிவிபரங்கள்**

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் தொடர்பான ஆவணங்கள் தமிழ்ச் செயற்பாட்டாளர்களால் பரந்தளவில் சேர்க்கப்பட்டுள்ளன. 1987 ஒக்ரோபருக்கும் 1988 யூனிற்கும் இடையில் தனித்தனியாக 60 இற்கும் மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதற்கான ஆவணங்கள் உள்ளன. இவ்வாறன சில ஆவணங்களில் மருத்துவ அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சம்பவங்களில் 350 வரையான பெண்களும் யுவதிகளும் இவ்வாறாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்படடவர்களில் 14 வயது இளம் பெண்கள் தொடக்கம் 45 வயதான பெண்கள் வரைக்கும், கர்ப்பிணிகள்கூட உள்ளடங்குகின்றனர். ஏறத்தாழ அரைவாசிக்கும் மேல் 18 வயதுக்குட்பட்டவர்களேயாவர்.

பெரும்பான்மையான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இந்திய இராணுவத்தின் கைகளில் அகப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாகினர். தமிழர் கலாச்சாரத்தில் இக்குற்றச்செயல் மிகவும் பாரதூரமான தன்மையில் பார்க்கப்படுவதால், பெருந்தொகையான சம்பவங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவானது ஒரு திட்டமிட்ட வன்முறை வடிவமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இச்சம்பவங்களின் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களும் ஏனைய விபரங்களும் காட்டுகின்றன.

**இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகளின் பொதுவான அம்சங்கள்**

பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் காட்டுவது போன்று, அவை ஒரு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியப் படைகள் மத்தியில் இது ஒரு பரவலான ஒரு செயற்பாடாகவும் இருந்துள்ளது. பல சம்பவங்களில் இந்தியப் படையினர் பெண்களை அவர்களது வீடுகளில் வைத்தே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். மற்றைய சம்பவங்களில் பெண்களைக் கடத்தி தமது முகாம்களுக்கோ அல்லது கைவிடப்பட்ட இடங்களுக்கோ கொண்டுசென்று வல்லுறவுக்குட்படுத்தியுள் ளார்கள். முகாம்களிலும் காவலரண்களிலும் நிலைகொண்டிருந்த படைவீரர்கள்? மக்களுடைய குடியிருப்புகளுக்குச் சென்று, வீடுகளுக்குள் நுழைவார்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைவீரர்கள்? குடும்ப அங்கத்தவர்களைத் தாக்கிவிட்டுப் பின்னர் பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லு றவுக்குட்படுத்துவார்கள் அல்லது பாலியல் துஸ் பிரயோகம் செய்வார்கள். அதன்பின்னர், அவர்கள் வீட்டைச் சூறையாடி, குடும்பத்தின் தனிப்பட்ட உடைமைகளை அல்லது பெறுமதியான பொருட்களை தம்முடன் எடுத்துக் கொண்டு சென்றுவிடுவார்கள். சில சம்பவங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் பெண்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளார்கள்.

1988 ஜனவரி 2 ஆம் திகதி, யாழ்மாவட்டத்திலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்னும் இடத்தில் மூத்ததம்பி கனகேஸ்வரி என்பவரின் வீட்டிற்குள் மூன்று இந்திப்படையினர் நுழைந்தார்கள். அவர்கள் அவரை தொல்லைப்படுத்தி, பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்துவிட்டு அவரது வீட்டையும் சூறையாடினர். அதே இடத்தில், நாகமுத்து சரவணை என்பவருடைய வீட்டிற்குள் நுழைந்த வேறு மூன்று இந்தியப் படையினர் அவருடைய மகள்மாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்திருக்கின்றார்கள்.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தின் கோண்டாவில் கிழக்கில் இரண்டு இந்தியப் படையினர் காங்கேசன் துறை வீதி மற்றும் முதட்டு மடம் வீதிச் சந்தியிலிருந்த எஸ். சற்குணதேவியின் வீட்டுக்குள் நுழைந்து அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார். அவர்கள் அவரது கணவரைக் கட்டி அவரைத் தாக்கியும் இருந்தனர்.

1987 நவம்பர் 26 ஆம் திகதி. ஜி.செல்வநாயகத்தின் வீட்டுக்குள் நுழைந்த சில படையினர் அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். இவ்விரு சம்பவங்களும் எவ்வாறு இந்தியப் படையினர் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்களை பாலியல் வல்லுறவுக் குட்படுததினார்கள் என்பதை காட்டுகின்றன.

1987 நவம்பர் 21 ஆம் திகதி. யாழ்மாவட்டத்திலுள்ள உடுவிலைச் சேர்ந்த பல பெண்கள் உடுவில் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த படையினரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள்.

1987 ஒக்ரோபர் 17 அம் திகதி. யாழ்ப்பாண மாவட்டத்தின் உரும்பிராய் என்னும் இடத்தில் 30 பெண்கள் இந்தியப் படைவீரர்களால் கடத்தப்பட்டார்கள். அவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, யாழ்ப்பாண மானிப்பாயில் ஒரு தாயும் அவருடைய மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

1989 வரை வடமராட்சியில் பணியாற்றிய தமிழ் வைத்தியர் ஒருவர் இந்தியப் படைவீரர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்ட பலருக்குச்சிகிச்சையளித்தார். அவர் கேட்ட தகவல்களின் படி, அதிகமான பாலியல் வல்லுறவுகள், இந்திய இராணுவத்தினர் வீடு களைச் சுற்றிவளைத்து ஆண்களை பிடித்துச் செல்லும் நடவடிக்கைகளின்போதே இடம் பெற்றிருக்கின்றது. இந்நேரத்தில் இந்தியப் படையினரின் ஏனைய வீரர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவார்கள். இவ்வாறான ஒரு சம்பவத்தில் 8. 10, 12 வய துடைய மூன்று சகோதரிகள் படைவீரர்களால் பாலியல் துன்புறுத்தலுக்காளாக்கப்பட்டார்கள். சிகிச்சையின்போது அவர்களது மார்பகங்களைச் சுற்றி கடித்த அடையாளங்கள் இருந்ததை அவ் வைத்தியர் கண்டார்.




இவ்வாறு பாலியல் வல்லுறவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத்துணைச் சிகிச்




சை, உடற்காயங்கள் மற்றும் பாலியல் ரீதியாகக்கடத்தப்படும் தொற்றுநோய்களுக்கும் அவர் சிகிச்சையளித்துள்ளார். பாலியல் வல்லுறவு காரணமாக பெண்கள் கர்ப்பமடைந்த நிலையையும் எதிர்கொண்டிருந்தனர். உடற்காயங்கள் சிகிச்சையளிப்பதற்கு இலகுவானவையாக இருந்தன என்றும், ஆனால் உளவியல் தாக்கங்களுக்குச் சிகிச்சை வழங்குவது மிகவும் கடினமாது என்றும் கூறினார். பெரும்பாலான பெண்கள் அது தங்களுடைய தவறே என்று நம்புவதாகக் கூறி ஒரு குற்ற உணர்வினாலேயே மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அவ்வைத்தியர் அவ தானித்தார். இம் மனநிலையிலிருந்த தனது நோயாளர்களை வெளியில் கொண்டு வருவது அவ்வைத்தியருக்குப் பெரும்பாடாக இருந்தது.

**பாதிக்கப்பட்டவர்களது பதில் நடவடிக்கைகள்**

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகத்தால் கறை பூசப்படும் என்ற பயம் காரணமாக பாலியல் வன்முறைச் சம்பவங்களைப் பற்றி முறை யிடுவது தமிழ் சமூகத்தில் மிகவும் அரிதான செயல். இருந்தும் கூட, சில பாலியல் வன் முறைச்சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் வெளிகொண் டுவரப் பட் டன. இப்பாதிப்புகளை எதிர்கொள்ளும் வேறு சில வழிகளையும் இவர்கள் செயற்படுத்தியள்ளார்கள்.

1988 ஏப்ரலில், கிளிநொச்சி இரணைமடு மற்றும் முல்லைத்தீவின் விசுவமடு ஆகிய இடங்களில் ஆறு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட அயலவர்களும் அவ்விடங்களில் வாழ்ந்த மக்களும் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்ததுடன் ஏப்ரல் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் தங்களது கடைகளைப் பூட்டி, வியாபாரங்களையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். இச்சம்பவமானது எதிர்ப் பை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக மட்டுமன்றி, கொடூரமாக தாக்கப்பட்ட பெண் களின் குடும்பத்தவர் சோகம் ஆறும் நேர மாகவும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக் கும் செயலாகவும் இருந்தது.

1987 நவம்பர் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 47 குடிமக்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று, பின்வருமாறு சொல்கின்றது:

“இச்சம்பவங்களானது இப்பகுதி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்களில் சிலர் இவ்விடத்தைவிட்டு வெளியேறிக் கொண்டும் இருக்கின்றார்கள். பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் எமது வீடுகளுக்குத் திரும்பும்போது, அமைதி காக்கும் படையினரால் நாம் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றோம்.”

**அதிகாரிகள் பதில் நடவடிக்கைகள்**

பாலியல் வல்லுறவுக்குச் சம்பவங்களுக்கு இந்தியப் படையினரும் இலங்கை அரசாங் அதிகாரிகளும் வழங்கிய பதில்கள் ஒன்றில் அச்சம்பவங்கள் நடக்கவில்லை என்று மறுப்பதாக அல்லது அவற்றை குறைத்துக்காட்டுவதாகவே இருந்தன. இந்தத் தந்திரமானது பொறுப்பிலிருந்தும் நீதியிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கு மட்டுமன்றி, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் கௌரவத்தையும் இழந்த நிலையினைப் பதியச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதானது பெண்களையும் அவர்கள் சமூகத்தையும் பாரியளவில் பாதிப்புறச் செய்ததுடன், இவ்வாறு அதனை மறுப்பதானது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த மன அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்தது.

1987 நவம்பர் 21 ஆம் திகதி, உடுவில் இராணுவ முகாமில் வைத்து பல பெண்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். பின்னர் இச்சம்பவம் பற்றி முறையிடுவதற்காகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களும் அவர்களது பெற்றோரும் அதிகாரிகளிடம் சென்றார்கள். அதற்கு அதிகாரிகள்,

“பாலியல் வல்லுறவு என்பது பொதுவாக நடக்கும் ஒன்றே. இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்வதற்கு இங்கே வரவேண்டாம். யாராவது சுட்டுக்கொல்லப்பட்டால் நாங்கள் அதைப் பதிவதற்குத் தயாராக இருக்கின்றோம்” என்று சொன்னார்கள்.

பாலியல் வல்லுறவு என்பது “பொதுவாக நடக்கும் ஒன்று” என்று வகைப்படுத்துவதன் ஊடாக, அக்குற்றச்செயலதும் மனித உரிமை மீறலதும் தீவிரத்தன்மையினை குறைத்துக் காட்டும் ஒரு செயற்பாடாகவே இவர்களது பதில் அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி புன்னாலைக் கட்டுவன் வடக்கு, சிறீ துர்க்கா சனசமூக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றில் அக்கிராமத்தின் 60 குடியிருப்பாளர்கள் கையொப்பமிட்டிருந் தார்கள். பாலியல் வல்லுறவுக்கு அல்லது துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த பல பெண்கள் பற்றிய ஒரு அறிக்கை உட்பட இந்தியப்படைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளை அவ் ஆவணம் கோடிட்டுக் காட்டியது.

படையினர் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றார்கள் என்ற ஊடகச் செய்திகளை யாழ்ப்பாண இந்திய இராணுவத் தலைமையகம் மறுத்தது. இவ்வறிக்கைகள் விஷத்தன்மையானதும் படையினரை கேவலப்படுத்துவதுமாக உள்ளது என அவர்கள் இதற்கு பதிலளித்தனர். மேலும்,

“பெண்களை போற்றுவது இந்திய கலாசாரத்தின் ஒரு உன்னதமான அம்சம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லா இலங்கை தமிழருக்கும் மதிப்பளித்து வரும் இந்திய படை வீரர்கள் இப்படி மோசமான குற்றச்செயல்களை புரிவார்கள் என்பது ஏற்க முடியாதது”, என்றும் கூறினார்கள். பெண்களுக்கு மதிப்பளிக்கும் இந்திய கலாசாரத்தை காட்டி இந்திய இராணுவம் பாலியல் வல்லுவுறவுக் குற்றச்சாட்டுகளை மறுக்க முயற்சிப்பதையே இது காட்டுகிறது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






தமிழீழம்

1987...1990





# கிளைமோர் தாக்குதலில் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட இருவர் படுகொலை 06.03.2008

கிளைமோர் தாக்குதலில் யாழ்ப்பாணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் கொல்லப்பட்டார். 06.03.2008



யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் K.சிவநேசன், ஓமந்தை/புளியங்குளம் நுழைவாயில் ஊடாக வன்னியை கடந்த 30 நிமிடங்களில் ஏ-9 வீதியில் சிறீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். வியாழன். புளியங்குளம் மற்றும் மாங்குளம் பகுதிகளுக்கு இடையில் பிற்பகல் 1.20 மணியளவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. கொழும்பில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு மல்லாவியில் உள்ள தனது இல்லத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் இலக்குவைக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் அவரது டிரைவரும் உயிரிழந்தார்.

வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த திரு.சிவநேசனின் சாரதியான பெரியண்ணன் மகேஸ்வரராஜா (வயது 27) ஒரு பிள்ளையின் தந்தையாரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சிவநேசன் எம்.பி படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதியில் சைக்கிளில் பயணித்த குஞ்சுக்குழம் பகுதியைச் சேர்ந்த அருள்நாதன் லூஜித்நாதன் என்ற 11 வயது சிறுவனும் தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

1957 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி பிறந்த கே. சிவநேசன், இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், 1996 மற்றும் 2004 க்கு இடையில், வடக்கு பிராந்திய பனை அபிவிருத்தி CO-OP சமூகத்தின் யூனி-கிளஸ்டரின் பொது முகாமையாளராக இருந்தார். யாழ்ப்பாணம் பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கணக்காளராகவும், வன்னி மல்லாவியில் உள்ள மக்கள் சங்க சம்மேளனத்தின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் நெல்லியடி மத்தியா மகா வித்தியாலயத்தின் முன்னாள் மாணவராவார்.















எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு வலய படுகொலை 04.03.2009

சிறீலங்கா இராணுவத்தின் "பாதுகாப்பு வலயத்தில்" கொலை வெறி தாக்குதலில், 73 பேர் கொல்லப்பட்டனர், 01.03.2009

முல்லைத்தீவு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை "பாதுகாப்பு வலயத்திற்குள்" இருந்த மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலிலும், சிறீலங்கா விமானப்படையின் பீரங்கி குண்டுகள் மற்றும் விமானத் தாக்குதல்களில் குறைந்தது 73 பொதுமக்களின் உயிர்களை பலிகொண்டுள்ளதாக மருத்துவ மற்றும் உள்ளூர் உதவி ஊழியர்களின் விவரங்கள் தெரிவிக்கின்றன. மாவட்டம். 160க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர். கடந்த 3 நாட்களில் சுமார் 35 கிளஸ்டர் பொருத்தப்பட்ட பீரங்கி குண்டுகள் வீசப்பட்டன. செவ்வாய்க்கிழமை மட்டும் 15 கிளஸ்டர் குண்டுகள் பொதுமக்கள் பகுதிகளில் வீசப்பட்டன. 10 வயதுக்குட்பட்ட 11 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், காலை 4, இரவு 5 மற்றும் காலையில் காணாமல் போன இரண்டு குழந்தைகளில் ஒன்று குழந்தையின் தாய் அதன் தலையின் ஒரு பகுதியை மீட்டதால் பின்னர் அடையாளம் காணப்பட்டது. மாத்தளன் மருத்துவமனை, காயம் பட்ட தங்கள் குழந்தைகளை மரணத்திலிருந்து காப்பாற்றும்படி மருத்துவர்களிடம் மன்றாடி அழுதுகொண்டிருந்த தாய்மார்களால் நிறைந்திருந்தது.

சமீபத்தில், ஒரு பெண் பொக்கனையிலிருந்து மாத்தளன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார், அவரது காலில் வெடிக்காத நிலையில் ஒரு கொத்து குண்டுடன், மருத்துவர்களின் கூற்றுப்படி, அவரது உயிரைக் காப்பாற்ற அவரது காலை துண்டிக்க வேண்டியிருந்தது.

கொத்து வெடிகளில் பல குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். ஒரு பீரங்கி ஷெல் அல்லது மோட்டார் ஷெல் போன்ற வெடிப்பைக் காட்டிலும் வித்தியாசமான வெடிப்புச் சத்தத்தைக் கேட்கும் போது, சத்தம் போன்ற வானவேடிக்கைகளுடன் ஒரு சிலந்தி போன்ற வெடிப்பு மாதிரியைக் கேட்கும் போது, மக்கள் கொத்து வெடிப்புகளை அடையாளம் கண்டுகொள்கிறார்கள்.

மாத்தலான் பகுதியில் 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் குறைந்தது 16 பேர் தற்காலிக மருத்துவமனைக்கு அருகில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நான்கு பேர் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள். அவர்கள் 1 வயது ஐ. நிலக்சன், 6 வயது ஆர். நிஷாந்தன், 9 வயதுடைய என். கஸ்தூரி மற்றும் 10 வயதுடைய ஆர். திரேசன் என அடையாளம் காணப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் குமிழமுனை பாடசாலையின் ஆசிரியை மொஹான் தர்ஷிகாவும் அடங்குவார்.

செவ்வாய்க்கிழமை காயல் பகுதிக்கு அருகில் உள்ள பொக்கனி பகுதியில் குறைந்தது 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



இரணைப்பாலையில் 18க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

முளிவாய்க்காலில் குறைந்தது 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விமானப்படையின் குண்டுவீச்சுக்காரர்கள் காலை சாலையையும் மாலை 4:30 மணியளவில் இரணைப்பாலையையும் தாக்கினர். "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டது.

# முல்லைத்தீவு பொக்கனை மற்றும் மாத்தளன் பாதுகாப்பு வலயப் படுகொலை - 04.03.2009

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் "பாதுகாப்பு மண்டலத்தில்" அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

சிறீலங்கா இராணுவம் புதன்கிழமை "பாதுகாப்பு வலயத்திற்குள்" பீரங்கித் தாக்குதலில் 78 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் 21 பேர் குழந்தைகள் என்று பல்வேறு குடியிருப்புகளில் இருந்து வெளிவரும் விவரங்கள் தெரிவிக்கின்றன. காலை 5:30 மணி முதல் 9:00 மணி வரையிலும், மாலை 5:00 மணி முதல் 9:00 மணி வரையிலும் 47 பேர் பீரங்கித் தாக்குதல்களில் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 182 பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர். பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பொக்கனை மற்றும் மாத்தளனில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. காயமடைந்த பொதுமக்களை ICRC கப்பலுக்கு ஏற்றிச் சென்று தனது தார்ப்பாலின் கூடாரத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த ICRC ஊழியர் ஒருவர் பொக்கனாயில் கொல்லப்பட்டார். பலியானவர்களில் கர்ப்பிணித் தாயும் அடங்குவார்.

காலை 5:30 மணி முதல் 6:45 மணி வரை நடந்த சரமாரி தாக்குதலில் 6 பொதுமக்கள் பொக்கனாயில் கொல்லப்பட்டதுடன், 11 பேர் காயம் அடைந்தனர், கொல்லப்பட்டவர்களில் ஒரு குழந்தையும் உள்ளது. ICRC ஊழியர் உட்பட 19 பொதுமக்கள்



மாலையில் கொல்லப்பட்டனர் மேலும் 69 பேர் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலில் காயமடைந்தனர்.

மாலை 5:00 மணி முதல் 9:00 மணி வரையிலான ஷெல் தாக்குதலில் மாத்தளனில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும்



9 பேர் காயமடைந்தனர். மாலையில் 19 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 37 பேர் காயமடைந்தனர்.

முள்ளிவாய்க்கால் இரட்டைவாய்க்காலில் இரவு 7.00 மணிக்குள் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மற்றும் 7:40 மாலை 56 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இரணைப்பாலை, பாதுகாப்பான வலயத்திற்கு வெளியே, காலையில் 4 குழந்தைகள் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் மாலையில் மேலும் 10 பேர் கொல்லப்பட்டனர், 51 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 07.03.2009

கடந்த 72 மணி நேரத்தில் 208 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 07.04.2009

இலங்கை இராணுவம் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் "பாதுகாப்பு வலயத்திற்குள்" பல IDP குடியிருப்புகளைத் தாக்கியது, சனிக்கிழமை பிற்பகல் 3:00 மணி வரை குறைந்தது 53 பொதுமக்களின் உயிர்களைக் கொன்றது. சுமார் 112 பொதுமக்கள் காயம் அடைந்தனர். வெள்ளிக்கிழமை, 86 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 100 க்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்தனர். ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் இறந்த உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படவில்லை. பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பதுங்கு குழிகளுக்குள்ளேயே இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வியாழன் அன்று கண்மூடித்தனமான ஷெல் மற்றும் இலங்கை விமானப்படையின் குண்டுத் தாக்குதல்களில் 69 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கடந்த 3 நாட்களில் 330க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

கொத்துக் குண்டுகளுடன் கூடிய பீரங்கி குண்டுகள் சனிக்கிழமை அம்பலவன்பொக்கனி மற்றும் மாத்தாளன் வெடித்தன. பீரங்கி குண்டுகள் சில பதுங்கு குழிகளைத் தாக்கி பதுங்கு குழிகளுக்குள் இருந்த பொதுமக்களைக் கொன்றன. முள்ளிவாய்க்கால் மற்றும் இரட்டைவாய்க்கால் மீது குண்டுகள் வீசப்பட்டன. இரணைப்பாலை, "பாதுகாப்பு வலயத்திற்கு" வெளியே தொடர்ந்து சரமாரியாக தாக்கப்படுகிறது. இரணைப்பாலையில் இருந்து உயிரிழப்பு விவரங்கள் கிடைக்கவில்லை.

சனிக்கிழமையன்று, மருத்துவமனையிலிருந்து 500 மீட்டர் தொலைவில் குண்டுகள் வெடித்தன. மாத்தளனுக்கும் அம்பலவன்பொக்கனைக்கும் இடைப்பட்ட இடத்தில் மனிதாபிமானப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக GS (கிராம அதிகாரி) அவர்களிடம் பதிவு செய்யக் காத்திருந்த பொது மக்களில் இருவர் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

வியாழன் அன்று ஐரானைப்பாலை அனந்தபுரத்தில் விமானப் படையின் குண்டுவீச்சு மற்றும் ளுடுயு ஷெல் தாக்குதல்களில் 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இரண்டு குண்டுவீச்சுகள் நாள் முழுவதும் இரண்டு சுற்றுகளில் 8 முறை கைவிடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வெளியிடப்படும் ஈழநாதம் நாளிதழின் முல்லைத்தீவு மாவட்ட விநியோக முகாமையாளர் சசி மாதன், 27, அனந்தபுரத்தில் கொல்லப் பட்டவர்களில் ஒருவர். இவர் முள்ளியவலையைச் சேர்ந்தவர்.

வலைஞர்மடத்தில் அரசாங்க வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடத்தியதில் வியாழக்கிழமை நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



வியாழன் அன்று பொக்கனாய் பகுதியில் வெடிகுண்டு வெடித்ததில் மேலும் 4 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வியாழக்கிழமை முல்லிவாய்க்கால் உட்பட எஞ்சிய இடங்களில் சுமார் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

வியாழன் அன்று சாலையில் இருந்து நீண்ட தூர இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா இராணுவத்தினர் கடலுக்குள் சுட்டது. தகவலறிந்த ஆதாரங்களின்படி, குறைந்தது ஒரு புல்லட் ICRC கப்பலைத் தாக்கியது.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத் தாக்குதல் 07.03.2009








# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 11.03.2009

11.03.2009 செவ்வாயன்று சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 49 குழந்தைகள் உட்பட 133 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

செவ்வாயன்று சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் “பாதுகாப்பான வலயத்திற்குள்” கொல்லப்பட்ட 133 பொதுமக்களில் 49 க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள் மற்றும் அவர்களில் 16 பேர் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகள். கொலைக்களமாக மாறியுள்ள “பாதுகாப்பான வலயத்திற்குள்” தங்குமிடமின்றி தவித்த பொதுமக்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் மற்றும் தீக் குண்டுகளை சிறீலங்கா சிங்கள இராணுவம் நிலைநிறுத்தியதாக வன்னியிலிருந்து தமிழ்நெட் செய்தியாளர் தெரிவிக்கிறார். ஒரு GS (கிராம அதிகாரி) மற்றும் ICRC தொழிலாளி உட்பட 273 பொதுமக்கள் செவ்வாயன்று காயமடைந்தனர். பொதுமக்களில் 47 பேர் காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலோ அல்லது அனுமதிக்கப்பட்ட பின்பும் உயிரிழந்தனர்.

மனிதாபிமான பொருட்களைப் பெறுவதற்காக கிராம அதிகாரியிடம் (GS) தங்களைப் பதிவு செய்ய வரிசையில் காத்திருந்த மூன்று பொதுமக்கள் மாத்தளனில் கொல்லப்பட்டனர். கிராம அலுவலர் திரு.புலேந்திரன் காயம் அடைந்தார்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் தர்மபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. வனிதா என்ற ஆசிரியையும் அடங்குவார். இதில் காயமடைந்த ICRC ஊழியர் வி. வின்செண்ட் அவர்கள்.

Multi-Barrel Rocket Launcher (MBRL) ராக்கெட் வெடிப்பில் சுமார் 300 தார்ப்பாய் குடிசைகள் எரிந்து சாம்பலாயின. வலைஞர்மடத்தில் உள்ள மெடிக்கல் ஸ்டோர் எறிகணை வீச்சில் சேதம் அடைந்ததுடன், மருத்துவக் கடைக்கு அருகில் உள்ள தங்குமிடத்திற்குள் இருந்த மருத்துவர் சிற்றம்பலத்தின் மகன் கொல்லப்பட்டார்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 12.03.2009

12.03.2009 புதனன்று “பாதுகாப்பு மண்டலத்திற்குள்” சிறீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் 82 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு மருத்துவ அத்தியட்சகர் வி.சண்முகராஜா புதன்கிழமை சிறீலங்கா இராணுவத்திடம் இருந்து பல்குழல் ரொக்கெட் லாஞ்சர் (MBRL) குண்டுகளால் “பாதுகாப்பான வலயத்திற்குள்” முள்ளிவாய்க்காலைத் தாக்கியதுடன், நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் 7 வயது குழந்தை உயிரிழந்தது. மாத்தலானில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகளுக்கு அருகில். மொத்தத்தில், 82 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 130 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மனிதாபிமானப் பொருட்களைப் பெற வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் MBRL மற்றும் பீரங்கித் தாக்குதலால் பாதிக்கப்பட்டனர். 500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் அடைக்கலம் மற்றும் மருத்துவ சிகிச்சையின்றி கடும் மழைக்கு மத்தியில் போராடி வருகின்றனர்.

உள்நாட்டு கடல் வழியாக நீண்ட தூரம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர்.

எஸ்.எல்.ஏ.வின் MBRL தீ, வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் குடியிருப்புகளை குறிவைத்தது. முள்ளிவாய்க்காலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 43 பேர் காயமடைந்தனர்.

பொக்கனை - வலைஞர்மடத்திற்கு இடையில் நள்ளிரவில் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை வரை, மார்ச் மாதத்தின் முதல் பத்து நாட்களுக்குள், புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் 964 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) தெரிவித்தார்.

”கிட்டத்தட்ட அனைத்து வழக்குகளும் தீவிர ஷெல் தாக்குதலுக்கு ஆளானவை. ஒரு சிலர் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டவர்கள். பாதிக்கப்பட்டவர்களில் 95% க்கும் அதிகமானோர் பாதுகாப்பான பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் 40 குழந்தைகள் மற்றும் 79 பெரியவர்கள் இறந்தனர். மருத்துவமனையில் அல்லது சிகிச்சையின் போது அல்லது சிகிச்சைக்குப் பிறகு,” என்று RDHS புதன்கிழமை கூறியது,






# சிறப்பு முகாமிலிருந்து ஓர் திறந்த மடல்!

## – ரொபார்ட் பயஸ், சிறப்பு முகாம், கொட்டப்பட்டு, திருச்சி –

29.02.2024
உலகத் தமிழர்களுக்கு...



வணக்கம்.

நான் இராபர்ட் பயஸ் பேசுகிறேன். உங்களை உங் களோடு உங்களில் ஒருவனாக சுதந்திர மனிதனாக இல்லாமல் எங்களில் ஒருவரான சாந்தனை இழந்து இதோ இந்த கம்பிகளுக்கு பின்னால் இருந்து இப்படி உங்களை சந்திக்க நேர்ந்தது மிகுந்த வருத்தமளிக்கிறது. 32 வருட நீண்ட சிறைக் கொட்டடிக்கு பிறகு கடந்த 11-11-2022 அன்று உச்சநீதிமன்றம் விடுதலை செய்த ஆறுபேரில் நானும் ஒருவன். அந்த ஆறு பேரின் நான், ஜெயக்குமார், முரகன் மற்றும் சாந்தன் ஆகிய நால்வரையும் இலங்கைத் தமிழர் எனக் காரணம் கூறி இந்திய வெளியுறத்துறை நாட்டைவிட்டு வெளியே அனுப்பும் வரை சிறப்பு முகாமில் அடைத்து வைக்க உத்தரவிட்டது.

தொலைந்து போன வாழ்க்கையை எதிர்நோக்கி 32 வருட நீண்ட காத்திருப்பு முற்றுபெறும் தருவாயில் கூட விடுதலையை ருசிக்க முடியாமல், சிறிது நேரம் கூட விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் புழல் சிறையிலிருந்து நானும் ஜெயக் குமாரும் வேலூர் சிறையிலிருந்து சாந்தனும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமிற்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டோம். இதோ முடியப்போகுது 32 ஆண்டுக்கால சிறைக் காத்திருப்பு என்று எண்ணிய எங்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள் சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம், அன்று நடந் தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான் என்பதை எங் களுக்கு காலம் தான் விளக்கியது. இது சிறையல்ல சிறப்பு முகாம் தானே என்று எண்ணிய எங்களுக்கு இது சிறையல்ல சிறையை விட கொடுஞ்சிறை என்பதும் எங்களுக்கு போகப் போகத் தான் விளங்கியது.

நாட்டைவிட்டு அனுப்பும்வரை எங்களை சிறப்பு முகாமில் வைக்கிறோம் என்றவர்கள் இன்றைய தேதிவரை நாட்டை விட்டு அனுப்புவதற்கு எடுத்த முன்னெடுப்புகள் என்னவென்று கேட்டால் மிகப்பெரிய கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியும் தான் மிஞ்சும். "சிறப்பு முகாமா...? அது ஜெயில் மாதிரிலாம் இல்லைங்க சார். எல்லா வசதிகளும் செய்து கொடுப்போம்" என்று பேசி சமாளிக்கும் அரசும் நிர்வாகமும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2 உயிர்களை பலி வாங்கியிருக்கிறது. கடந்த ஜனவரி 28 ஆம் தேதி ஒரு வார காலமாக மருந்து மாத்திரை கிடைக்காமல் ஒருவர் இறந்து போனார். இப்பொழுது சாந்தன் கல்லீரல் முழுவதும் செயலிழந்து, எழுந்து நிற்கக் கூட முடியாமல் மிக மோசமடைந்து பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவம் ஏதம் பலனளிக்காத நிலையில் இறந்து போயிருக்கிறார். இந்த மரணத்திற்கு யார் பொறுப் பேற்பது...? யாரை நாங்கள் நொந்துக்கொள்வத...?

அனைத்து அடிப்படை உரிமைகளையும் மறுத்து, உடல்நலன் குன்றி 'விடுதலை ஆகிவிடுவோம். விடுதலை ஆகிவிடுவோம்.' என்று கனவு கண்டு விடுதலை ஆகிவிட்டோம் என்று பூரிப்பு கிடைத்த தருவாயில் மீண்டும் ஏமாற்றப்பட்டு சிறை மாற்றப்பட்டு இதனால் மனநலனும் பாதிக்கப்பட்டு இறந்து போன சாந் தனுக்கு சிறை வாழ்வு முடிந்தது. இன்னும் மீதம் மூன்று போர் இருக்கிறோம். நாங்கள் மீண்டும் காத்திருக்க தொடங்கு கிறோம் இந்த சிறப்பு முகாமில்.

சிறையில் கூட சிறை நிர்வாகத்திற்கு சிறை விதிகள் கையேடு இருக்கிறது. அதன்படி கைதிகளுக்கு இருக்கக்கூடிய மற்றும் இல்லாத உரிமைகள் கடமைகள் வரையறுக்கப்பட்டு இருக்கும். ஆனால் சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது, இங்கு எந்த சட்டத்திட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கிறதோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டத் திட்டங்களாகவும் ஆகின்றன. மருத்தவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச் சிறை என்று இவர்கள் முடிவெடுத்தால் தனிமைச் சிறை யாரும் மனு பார்க்கக்கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால் யாரும் மனுப்பார்க்க முடியாது. இப்படியான நிர்வாகம் தான் நாட்டைவிட்டு வெளியில் அனுப்புவதற்காக என்று காரணம் கூறி சிறப்பு முகாமில் அடைக்கப்படுபவர்கள் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படாமல் வருடக்கணக்கில் அப்படியே கிடப்பில் போடப்பட்டு இன்னொரு சிறைவாசத்தை அனுபவித்து வருகின்றனர். நாங்கள் சிறு சிறு அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அடிப்படை உரிமை களையும் கூட போராடி, உயிரைக் கொடுத்து பெறவேண்டிய சூழலே இருக்கிறது.

எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியான 32 வருடங்கள் ராஜீவ் காந்தி பெயரைச் சொல்லியே சிறையில் கடத்தப்பட்டது. இறுதியில் உச்சநீதிமன்றத்தின் விடுதலை ஆணைக்கு பின்னும் எங்களை எங்கள் குடும்பங்களோடு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி காலங்கடத்தி இறுதியில் சாந்தனை இழந்து நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மீதமுள்ள நாங்களும் எங்களுக்கான ஒவ்வொரு அடிப்படை உரிமையையும் பெறுவதற்கு இதுவரை எண்ணற்ற மனுக் களையும், வழக்குகளையும், உண்ணாநிலை போராட்டங் களையும் மேற்கொண்டே பெற்று வருகின்றோம். அதில் பெரும் பான்மையான வாக்குறுதிகள் காற்றிலே போகும். மீதி, கேட்கப் படாமலே மக்கிப் போகும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டு மானால், இந்த மாத தொடக்கத்தில் இலங்கை துணைத் தூதரகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நானும் முரக னும் உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்ட பொழுது ஒரு வாரத்தில் அழைத்துச் செல்கிறோம் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டு 20 நாட்களை கடந்தும் அது தொடர பாக ஏ்நத நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட் டிருக்கிறது. இவ்வாறில்லாமல் உரிய அரசுப் பொறிமுறைகள் அவர்கள் கடமையை முறையே செய்திருந்தால் இன்று சாந்தன் உயிருடன் அவருடைய தாயாருடனும் குடும்பத்தினருடனும் மகிழ்சியாக இன்னும் ஓரிரு வருடங்களாவது இருந்திருப்பார்.

33 வருடங்களாக தனது மகனை பிரிந்து கண்பார்வை குன்றி வயது முதிர்ச்சியடைந்து கடைசியாக ஒருமுறையாவது தனது மகனை பார்த்துவிட வேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத் தான் கொண் டுபோய் சேர்க்கப் போகிறோம். கடைசியாக தனது கையால் தன் மகனுக்கு ஒருபிடி உணவு கொடுக்க மாட்டோமா என்று ஏங்கிய அந்த தாய் அந்த மகனுக்கு கடைசியாகக் வாய்க்கரிசி கொடுக்கத்தான் வாய்க்கப்பட்டிருக்கிறார்... இதே இன்று தன் மகன் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்து காத்திருந்த அந்தத் தாயிடம் 'உன் மகன் வரவில்லை. அவனின் உயிரற்ற உடல்தான் வருகிறது' என்கிற செய்தியை அந்தத் தாயிடம் யாரால் சொல்லியிருக்க முடியும். அத்தகைய கல்நெஞ்சம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் வாழ்கிறார்களா என்ன...!? 22 வருடங்கள் கழித்து தன் மகனின் வருகைக்காக மகிழ்ச்சியாக காத்திருந்திருக்கும் அந்த வீட்டில் இந்த செய்தி ஏற்படுத்திய மயான அமைதியின் பேரிரைச்சலை தாங்கிக் கொள்ளும் கனத்த இதயம் கொண்ட மனிதர்களும் இவ்வுலகில் இருக்கிறார்களா என்ன?!

இதோ கடந்த மாதம் என்னுடன் நடந்து மருத்துவ பரிசோத னைக்கு வந்த சாந்தன் இன்று எங்களோடு இல்லை. ஒரு மாதத்தில், எங்களோடு உறவாடி, பேசி உலாவிய சாந்தன் இன்று உயிரோடு இல்லை.

மீதியிருக்கிற, ஜெயக்குமாரும் முருகனும் 33 வருடங்களாக தங்கள் குடும்பங்களை பிரிந்து வாடும் நிலையில் நானோ, மனைவி ஒரு நாட்டில். மகன் ஒரு நாட்டில். தாய், சகோதர சகோதரிகள் வேறு நாட்டில் என சிதறுண்டுக் சிதைந்துக் கிடக்கும் குடும்பத்தை ஒன்சேர்த்து ஒரு நாளேனும் வாழ்ந்து விட மாட்டோமா?! பச்சிளம் பாலகனாக பார்த்த எனது மகன் எவ்வளவு உயரம் இருப்பான்? அவன் என்னைவிட உயரமா? அல்ல உயரம் குறைவா? அவனுக்கு திருமணம் ஆகி எனக்கு பேரன் பிறந்திருக்கிறானாம்...! நான் எந்த வயதில் என் மகனை பிரிந்தேனோ அந்த வயதில் எனக்கு இப்பொழுது பேரன் இருக்கிறான். அவனதுப் பஞ்சு பாதங்களை அள்ளியெடுத்து ஒருமுறையேனும் என் முத்தங்களை காணிக்கையாக்கிவிட மாட்டேனா...?!

அன்பார்ந்த உலகத் தமிழ் சமூகமே இன்னும் நாங்கள் மூன்று பேர் மிச்சம் இருக்கிறோம். எங்கள் நிலைமை?

நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களை பிரிந்து துயரமும் எங்களை முழுமையான நோயாளிகளாக்கியுள்ளது. சாந்தனைப் போலல்லாமல் எங்களையாவது எங்கள் கடைசி காலத்தில் மிஞ்சியிருக்கிற கொஞ்ச காலம் எங்கள் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்து விட்டுப் போக இந்த அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா...?

எங்கள் குடும்பங்களை பிரிந்து வாழ்க்கையை இழந்து வாடும் இப்பெருந்துன்பங்கள் முடிவுக்கு வருமா...?

இப்படிக்கு கா.பா. பயஸ்

# கோர்ட்டுக்கு இழுக்கப்படும் கட்சி?

25.02.2024




2014ஆம் ஆண்டு மன்னாரில், முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சித் தலைவர்களின் சந்திப்பு அது. ஆயர் அப்பொழுது தமிழ் சிவில் சமூக அமையத்தின் நிறுவனர்களில் ஒருவராகவும் அதன் அழைப்பாளராகவும் இருந்தார். அச்சந்திப்பில் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பங்குபற்றினார்கள். சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்... “பிஷப் நீங்கள் சொல்லுறதச் சொல்லுங்கோ, ஆனால் கடைசியா முடிவெடுக்கிறது நாங்கள்தான்” என்று. அப்பொழுது அப்படிச் சொல்லக்கூடிய பலம் சம்பந்தருக்கு இருந்தது. ஆனால் அவர் எடுத்த முடிவுகளின் விளைவு என்ன? அப்படிச் சொன்ன சம்பந்தர் இப்பொழுது எங்கே நிற்கிறார்? அவருடைய முடிவுகளின் விளைவாக தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய மிகவும் வித்தியாசமான ஒரு கூட்டு உடைந்து போய்விட்டது. அதுமட்டுமல்ல அவருடைய சொந்த கட்சியே இப்பொழுது இரண்டாகி நீதிமன்றத்தில் நிற்கிறது. அது மட்டுமல்ல, அன்றைக்கு அப்படித் திமிராகச் சொன்ன சம்பந்தரை இன்றைக்கு அவருடைய சொந்த கட்சிக்காரர்களே மதியாத ஒரு நிலை. ஆம். “வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி. அவள் யாரையும் மன்னிப்பதில்லை”.

இப்பொழுது தமிழரசுக் கட்சி உடையக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகத் தெரிகின்றன. கடந்த வெள்ளிக்கு கிழமை கிளிநொச்சியில் நடந்த சந்திப்பின் பின் கட்சி நீதிமன்றதுக்குப் போக வேண்டிய வாய்ப்புக்கள் மேலும் அதிகரித்துள்ளனவா?

ஒரு குடும்பத்துக்குள் பிணக்கு வந்தால் அதை அக்குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் தீர்த்து வைப்பதுண்டு. அல்லது அந்தக் குடும்பத்தின் நலனில் அக்கறை கொண்ட வெளியாட்கள் அதைத் தீர்த்து வைப்பதுண்டு. அதுவும் முடியாது போனால், விவகாரம் பொலீஸ் நிலையத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ போகும். தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவற்றைப் பார்த்தால் அங்கே இரண்டு அணிகளுக்கும் இடையிலான மோதலைத் தீர்த்துவைக்க கட்சிக்குள் மூத்தவர்கள் யாரும் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் சம்பந்தர், மாவை, குலநாயகம், கனகசபாபதி, சிவஞானம்... போன்றவர்கள் ஏதோ ஒரு பக்கம் உலாஞ்சுவதாகத் தெரிகிறது. அதனால் அவர்கள் நடுநிலையாக நின்று விவகாரத்தைக் கையாள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது. சம்மந்தரும் மாவையும் கனகசபாபதியும் அதிகம் சிறீதரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். குலநாயகமும் சிவஞானமும் அதிகம் சுமந்திரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கட்சிக்குள் வெடித்திருக்கும் பிளவைத் தீர்த்து வைப்பதற்கு கட்சியின் மூத்தவர்களால் முடியவில்லை. அதன் விளைவாகத்தான் விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றது.



இப்பொழுதும் கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் முடிவெடுத்தால்,விவகாரத்தைச் சுமூகமாகத் தீர்க்க முடியும். ஆனால் அப்படிப்பட்ட மூப்போடும் முதிர்ச்சியோடும்பக்குவத்தோடும் மிடுக்கோடும் கட்சிக்குள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பில் நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராக சுமந்திரன் வழக்கு தொடுத்த அதே காலப்பகுதியில், திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு இணக்கமானவர்கள் என்று கருதப்படுகின்றவர்களால் இரண்டு வழக்குகள் கொடுக்கப்பட்டன. தென்னிலங்கையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தை சுமந்திரன் எதிர்க்கிறார். ஆனால் அவருடைய சொந்தக் கட்சியை உடைக்கும் வேலைகளை அவர் தன்னுடைய விசுவாசிகளுக்கு ஊடாகச் செய்கிறார் என்று அவருடைய எதிரணி அவரை குற்றம் சாட்டுகின்றது.

ஆனால் தான் அந்த வழக்குகளுடன் சம்பந்தப்படவில்லை என்று சுமந்திரன் மறுத்திருக்கிறார். எனினும்,அவர்தான் எல்லாவற்றின் பின்னணியிலும் நிற்கிறார் என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது. அவருடைய பெயர் மேலும் கெட்டுக்கொண்டே போகிறது.

பிரச்சனை ஒரு சட்ட விவகாரம் ஆக்கப்பட்டதும் சிறீதரன் தன்னுடைய முகநூலில் “தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்” என்று எழுதினார். அதன்பின் அவருக்குப் பதில் கூறுவது போல, சுமந்திரனுக்கு ஆதரவான வடமாராட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அதே வசனத்தை தனது முகநூலில் எழுதினார். இதில் யார் தர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? யார் அதர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? எது தர்மம்?

கட்சி பல ஆண்டுகளாக யாப்பை மீறி வழி நடத்தப்பட்டிருக்கிறது என்று சிவகரன் கூறுகிறார். அவர் தமிழரசு கட்சியின் இளைஞரணித் தலைவராக இருந்தவர். பின்னர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர். பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக சிவில் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர். கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகிய போது அவர் சுமந்திரனின் பக்கம் நிற்கிறார் என்ற குற்றச்சாட்டு எதிரணியால் முன்வைக்கப்படுகின்றது. கட்சியின் யாப்பு நடந்து முடிந்த தேர்தலில் மட்டும் மீறப்படவில்லை. தேர்தலுக்கு முன்னரே அது மீறப்பட்டுவிட்டது. அதற்குக் கட்சியின் முக்கியஸ்தர்களாகக் காணப்பட்ட எல்லாச் சட்டத்தரணிகளும் பொறுப்பு. சிவகரனின் வார்த்தைகளில் சொன்னால், கட்சிக்குள் “வழிப்போக்கர்கள்” தலையெடுத்ததே யாப்புக்கு முரணாகத்தான்.

சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் யாப்பானது தமக்கு நீதியைத் தரவில்லை என்று கூறிப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் உள்ள மூத்த பெரிய கட்சியானது தனது சொந்த யாப்பையே மீறிச் செலுத்தப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் சட்டத்தரணிகள் பலர் உண்டு. சட்டத்தரணிகளின் அரசியல் அல்லது அப்புக்காத்துக்களின் அரசியல் ஒரு மூத்த பெரிய கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

கட்சிக்குள்ளேயே விவகாரத்தைத் தீர்த்து வைக்க முடியவில்லை என்பது கட்சி தோற்றுப் போய்விட்டதைக் காட்டுகின்றது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் யாரும் அதைத் தீர்த்து வைக்கும் தகமையோடும் முதிர்ச்சியோடும் இல்லை என்பதையும் அது காட்டுகின்றது. கட்சிக்குள் மட்டுமல்ல கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்குப் பொதுவான யாரும் இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

முன்பு கட்சிகளுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முனைந்த சிவில் சமூகங்கள் இப்பொழுது கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் ஒரு விடயத்தில் தலையிடுவதாகத் தெரியவில்லை. வழமையாக கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபடும் சிவகரன் இப்பொழுது சுமந்திரனுக்குச் சார்பானவராகப் பார்க்கப்படுகிறார். ஆங்கிலம் பேசும் உலக சமூகத்துடன் அதிகம் இடையூடாடும் தமிழ் சிவில் சமூக அமையம்-இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்படும் அமைப்பு-அதுவும் தலையிடும் நிலமைகளைக் காணவில்லை. அந்த அமைப்பின் நிறுவுனர்களில் ஒருவரான குருபரன் தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு வழக்கில் தோன்றுகிறார். இவ்வாறு சிவில் சமூகங்கள் இரு தரப்பையும் ஒரு மேசைக்கு அழைத்துக் கொண்டுவரும் சக்தியற்றிருக்கும் ஒரு சூழலில், மதத் தலைவர்களும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பொதுவாக சிவில் சமூகங்கள் முன்கை எடுக்கும் போதுதான் மதத் தலைவர்களும் அவற்றோடு இணைந்து செயல்படுவதுண்டு. இம்முறை சிவில் சமூகங்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் விடயத்தில் சிவில் சமூகங்கள் தலையீடு செய்திருக்கின்றன. ஆனால் ஒரு கட்சிக்குள் பிணக்குகள் ஏற்படும்போது அதைத் தீர்ப்பதற்கு சிவில் சமூகங்கள் தலையிட்டது குறைவு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி உடைந்து வெளியே வந்த பொழுது, சில தனிநபர்கள்தான் தலையிட்டார்கள். எனினும் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள்ளும் உடைவு வந்திருக்கிறது. அதைத் தீர்ப்பதற்குச் சிவில் சமூகங்கள் தலையிடாத ஒரு நிலை காணப்படுகிறது.

அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மூத்த கட்சிகளில் ஒன்றாகவும் உள்ளவற்றில் பெரியதாகவும் காணப்படும் ஒரு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிணக்கைத் தீர்த்துவைக்க கட்சிக்குள் மூப்பாக உள்ளவர்களாலும் முடியவில்லை; கட்சிக்கு வெளியேயும் யாரும் இல்லையா? இது தமிழரசுக் கட்சியின் சீரழிவை மட்டும் காட்டவில்லை. தமிழ் அரசியலின் சீரழிவையும் காட்டுகின்றது. ஒரு பொதுவான, பலமான மக்கள் இயக்கம் ஒரு தேசிய இயக்கம் இல்லாத பாரதூரமான வெற்றிடத்தை அது காட்டுகின்றது.

அரங்கில் உள்ள புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், குடிமக்கள் சமூகங்கள், மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற யாருமே இந்த விடயத்தில் தலையிடாத ஒரு நிலை. பெரும்பாலானவர்கள் இது தங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு விடயம் என்று கருதிக்கொண்டு பார்வையாளர்களாகக் காணப்படுகிறார்கள். சிலர் அரசியற் கூர்ப்பின் வழியில்,சிதைய வேண்டியது சிதையட்டும் என்று கூறுகிறார்கள். இது தமிழ் மக்கள் ஓர் அரசியல் சமூகமாகப் பலமாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. இது தமிழரசுக் கட்சிக்கு வந்த சோதனை மட்டுமல்ல, தமிழ் அரசியல் சமூகம் முழுவதற்கும் வந்த ஒரு சோதனை.

அவ்வாறு கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கு நீதியான, மூப்பான ஆட்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. இந்த நிலை தொடருமாக இருந்தால், கட்சியின் எதிர்காலத்தை நீதிமன்றம்தான் தீர்மானிக்கும். நீதிமன்றத்தில் இப்பொழுது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளுக்கான தீர்ப்புக்களின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்படும்.

தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க் குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கு எதிராக நீதி கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும், உள்ளதில் பெரிய ஒரு கட்சி தனக்குள் நீதி கேட்டு நீதிமன்றத்தை நாடியிருக்கிறது. எந்த உள்நாட்டு நீதியை ஏற்றுக்கொள்ள மறுத்து பன்னாட்டு நீதியைக் கேட்கின்றதோ, அதே உள்நாட்டு நீதியின் முன் போய் நிற்கின்றது. இது, தமிழ் மக்கள் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருப்பதைத்தான் காட்டுகின்றதா? அல்லது அப்புக்காத்துமாரின் அரசியல் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தோற்கடித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றதா?

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★Carpet ★Flooring
★Hardware ★Kitchen Cabinets
★Painting ★Tiles ★ Stairs
★Moulding ★Window ★Garage Door
★Spotlight ★ Plumping ★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# ஆனைக்கோட்டை அகழ்வாய்வும்; கோவேத முத்திரையும்!

ஆனைக்கோட்டை என்பது இலங்கையின் வடமாகாணத்தின் ஒரு பகுதியாக உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலிகாமம் தென் மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஊராகும்.

நாவாந்துறைப் பகுதியைச் சீர்செய்வதற்காக கரையாம்பிட்டி மண்மேட்டை வெட்டியபோது இதில் காணப்பட்ட பண்பாட்டு எச்சங்களை 1980 களில் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் அகழ்வாராய்ச்சி இடம்பெற்றது. இங்கு இரண்டு சதுர மைல் பரப்பில் ஆறு குடியிருப்பு மையங்களும், இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களும் அடையாளம் காணப் பட்டுள்ளது.

இதன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா மேற்கொண்ட அகழ்வின் போது இரு இடங்களில் பெருங்கற்கால மக்களது ஈமச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விரு ஈமச்சின்ன மையங்களும் பத்து அடி, இடைவெளியில் நான்கு அடி உயரம் கொண்ட மண்மேட்டில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஈமச்சின்ன மையங்களில் 5 அடி உயரமுடைய இரு மனித எலும்புக்கூடுகள் கிழக்கு மேற்கு திசையை நோக்கிய வண்ணமாக அடக்கம் செய்யப்படிருந்தன. இதில் இரு கைகளும் கட்டப் பட்ட எலும்புக்கூட்டைச் சுற்றி வைக்கப்பட்ட மட்பாண்டங்களில் கறுப்பு சிவப்பு, தனிக் கறுப்பு சிவப்பு நிறக்கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில மட்பாண்டங்களில் சுறா மீன், மிருக எலும்புகள், நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. இப்பண்பாடு இங்கு இரும்பின் பயன்பாடு புழக்கத்தில் வந்ததனை உறுதிப்படுத்த இரும்புக்கருவிகளும், கழிவிரும்புகளும் கிடைத்துள்ளன.

சிற்பி , சங்கு சுறா மீன் எலும்புகள் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலை மரபுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதே சமயம் ஆனைக்கோட்டை மையம் கடலுடன் கொண்ட தொடர்பையும் காட்டுகின்றது . வடமாகாணத்தினைப் பொறுத்தவரை இங்கு கிடைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் இரண்டாவது ஆகும். முதலாவது, திருக்கேதீஸ்வரத்தில் மறைந்த திரு. சண்முகநாதன் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போதுகிடைத்தன.

ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டம், இலட்சுமி நாணயம், உரோம மட்பாண்டம் என்பவறை ஆதாரமாக கொண்டு இரு ஈமச்சின்னங்களும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால மக்களுக்குரியது என உறுதிப் படுத்தமுடிகின்றது.

எலும்புக்கூட்டின் தலை மாட்டின் அருகில் பெறப்பட்ட வெண்கல




முத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காலம் கி.மு 3 நூற்றாண்டு 1.7 , 1.5 சென்ரி மீற்றர் நீள அகலம்



உடையது. இதன் மேல் வரிசையில் 3 குறியீடுகளும் கீழ் வரிசையில் 3 பிராமி எழுத்துக்களும் உள்ளன. இது மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்டுகின்றது. இது எதானால் செய்யப்பட்டது என்பது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன. பேராசிரியர் கா. இந்திரபாலா இந்த முத்திரையானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டுரையில் கூறியிருந்தார்.

ஆனால், அவர் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. பொ.இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத்தினால் செய்யப்பட்டது என்றுள்ளார். ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி. பத்மநாதனும் (2006), அது உலோகத்தால் ஆனது என்றுள்ள போதும், அது எந்த உலோகத்தினால், அல்லது உலோகக் கலவையால் ஆனது என்பதைக் குறிப்பாகக் கூறவில்லை.

எப்படிப் பட்டதாயினும் க. இந்திரபாலா 2006ஆம் ஆண்டில் எழுதியிருந்த நூலில், அது மாவுக்கல்லால் (Soapstone) ஆனது என்றுள்ளார். இதனைப் பேராசிரியர், இம் முத்திரையில் கீழ் வரியில் அடங்கியுள்ள மூன்று எழுத்துக்களையும் இடப்பக்கத்தில் காணப்படும் எழுத்துக்கு மேலுள்ள புள்ளியையும் பிராமிப் பகுதியாகக் கொண்டுள்ளார்.

இதில் இடப்பக்கமிருந்து பார்க்கும் போது முதலாவது எழுத்து "கோ", இரண்டாவது எழுத்து "வே", மூன்றாவது எழுத்து "த". இது முத்திரையிடப் பயன்படுத்தும் அச்சு ஆதலால், இடப்படும் முத்திரையில் இடம் வலமாக மாறிவிடும். ஆதலால் எழுத்து வரிசை "கோ" "வே" "த" என்று அமையும். "த" வின் மேலுள்ள புள்ளியை அனுஸ்வரமாகக் (அனுஸ்வரம் என்றால் ஒரே சமயத்தில் வாயினாலும், மூக்கினாலும் உச்சரிக்கப்படும் எழுத்துக்களைக் குறிக்கும்) கொண்டால் இச் சொல்லை "கோவேந்த" அல்லது "கோவேதன்" என இருவிதமாக வாசிக்க முடியும் எனக் கூறுகிறார்.

இரண்டுமே திராவிடப் பெயராகவும், ஒரே பொருள் தருவனவாகவும் உள்ளன. "கோவேந்த" என்பதை "கோ" + "வேந்த" என இரண்டாகப் பிரிக்கலாம். இரண்டு பகுதிகளுமே தமிழிலும் வேறு சில திராவிட மொழிகளிலும் மன்னன், அரசன் என்னும் பொருள்படுவனவே. கோவேதன் என்று எடுத்துக்கொண்டாலும் கூட இது போலவே அமையும். மேல் வரிசையில் சூல வடிவக் குறியீடு அடுத்தடுத்து இருமுறை இடம்பெற்றுள்ளது.

அகழ்வாய்வில் பேராசிரியர் கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம், பொ.இரகுபதி





அடிப்படைவாதம் பேசினால் அதுவே உண்மை. வரலாற்றின் தவறாகும். ஆக எமக்கு இரும்பு நுட்பம் வேறொங்கோ இருந்தே கிடைத்திருக்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டில் வருகை பரிந்த பிரிட்டிஸ் பயணியான "றொபேட் நொக்ஸ்" தான் இத் தீவில் பாரம்பரிய இரும்பு உருக்கு உலைகளைக் கண்ட தாகவும் கூறி அதன் நுட்பத்தையும் வெளியிட்டிருக்கிறார். நவீனத்துவம் வரும்வரை இப்பாரம்பரிய உருக்குலைகள் இத் தீவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் தமிழர் தயாகத் திலும் மிகப்புராதனமான இரும்பு உருக்குலைகள் உள்ளன. என்பதனை வன்னி இரும்பு உருக்குலைகள் எடுத்துக் கூறுகின்றன.

- திி. தவபாலன் - எரிமலை மார்ச் 2006







**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**

**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used & new Walk in Cooler Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START
Save 80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

# அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு... மார்ச் 08

***தமிழீழப் பெண்களும் அனைத்துலகப் பெண்கள் நாளும்***







கடந்த 113 ஆண்டுகளாக:

மார்ச் 08 ஆம் நாள், உலகின் பெரும்பாலன நாடுகளில் பெண்கள் ஒருமைப்பாட்டு நாளாக, பெண்கள் எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

1911 ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 08ஆம் நாள் அனைத்துலக உழைக்கும் பெண்கள் நாளாக அறிவிக்கப்பட்டு, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் ஆண்களுக்கு நிகராக சம உரிமைகளைப் பெறும் போராட்டத்திற்கு, பெண்களை அணிதிரட்டும் ஒருமைப்பாட்டு நாளாக பெண் அமைப்புக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொடக்கத்தில் இந்த உயரிய நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்ட அனைத்துலகப் பெண்கள் நாள் நாளடைவில் பல நாடுகளில், பெண்களுக்காப் பெண்களால் நடத்தப்படும் விழாவாக மாறிவிட்டது. உழைக்கின்ற பெண்களன்றி, மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகள், அமைச்சர்களின் மனைவிமார் தலைமைதாங்கி நடத்தும் விழாவாகி விட்டது. ஆடம்பரமாக வாழும் பெண்கள் நடத்தும் விழாக்களில் உழைக்கும் பெண்களின் உணர்வுகளுக்கு இடமேது?

தமிழீழத்தில் அனைத்துலகப் பெண்கள் நாளைக் கொண்டாடுகின்ற நாம், அந்நாள் தொடங்கப்பட்டதினதும், நடத்தப்படுவதினதும், நிலைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். உலகத்திலுள்ள பெண்கள் எதிர் நோக்குகின்ற இன்னல்கள்



இடர்களைவிட தமிழீழம், இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள், சமூக - பொருளாதாரத் துறைகளில் பேரிடர்களை எதிர் கொண்டு வருகின்றனர். சீதன்க்கொடுமை, கைம்மை பேணல், மறுமணமறுப்பு, கல்வி உரிமை மறுப்பு போன்ற மேலதிக அழுத்தங்களால் அல்லலுறுகின்றனர்.

தமிழீழப் பெண்களைப் பொறுத்தவரை பெண்சிசுக் கொலைகள், சீதனக்கொலைகள், உடன் கட்டையேறுதல், சின்ன வயதுத் திருமணம் போன்ற இந்தியப் பெண்கள் எதிர் கொள்ளும் காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளை எதிர் கொள்ளாத போதிலும் சீதம், மறுமணமறுப்பு, மதக்கோட்பாடுகள், சடங்குள், பாலியல் வன்முறை போன்ற பெண்ணொடுக்கு முறைகளை எதிர்கொண்டு வருவதுடன், அரசியல் ரீதியில் தேசிய ஒடுக்கு முறைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

ஏனைய நாடுகளில் வாழ்க்கையை மேன்படுத்த போராட்டம் நடத்துகையில், எமது பெண்கள் வாழ்க்கை நடத்துவதற்கே போராட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏனைய நாடுகளில் பெண்கள் எதிர்கொண்டுவரும் ஒடுக்கு முறைகளுடன் சிங்கள் ஏகாதிபத்தியப் படைகள், தமிழீழப் பெண்கள் மீது நடத்தும் பாலியல் வன்முறைகள், அடக்கு முறைகள், அவற்றை மேற்கொள்ளும் சிங்களப்படைகளுக்குத் துணையாகச் செயற்படும் துரோகப்படைகளின் இழிசெயல்கள், சிங்கள அரசின் கடுமையான பொருண்மியத் தடையினால், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் உணவு, மருந்துவ வசதியின்மையினால் எதிர்நோக்கி வரும் அல்லல் போன்ற கொடுமைகளையும் எதிர்த்து போராட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

தேசிய ஒடுக்கு முறைகளை எதிர்த்து களத்தில் நிற்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து கொண்ட தமிழீழப் பெண்கள் பலர் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தில் தாம் பெறும் வெற்றிகளினூடே பெண்ணினத்துக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த உன்னத நிலையில் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதுவரை தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்து, தமிழ் நிலத்தை ஆக்கிரமித்து, ஏராளமான தமிழ் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வந்த சிங்களப் படைகளை, இன்று தமிழீழப் பெண்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலும், விடுதலைப் போராட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டதன் மூலம் நேரடியாகக் களத்தில் எதிர் கொண்டு தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஆயினும், பெரும்பாலான பெண்கள் பெண்ணொடுக்கு முறைகள் பற்றியோ, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகள் பற்றியோ, எதுவித எண்ணப்பாடுமற்றவர்களாகவே இருக்கின்றனர்.

சீதனச் சிக்கல், கல்வி, தொழில், பொருண்மியப் புறக்கணிப்பு என்பன பெண்கள் எதிர்நோக்குகின்ற ஒடுக்குமுறைகள் எமது சமுதாயத்தில் இன்னும் குறைந்தபாடில்லை.

கலை இலக்கியம் என்ற போர்வையில் இழிவுபடுத்தப்படுதல் ஒருபுறம்.

மதம், மரபு, சரித்திரம், சடங்கு என்ற பழமைவாதிகளால் ஒடுக்கப்படுதல் மறுபுறம்.

கோடரிக்காம்புகள் போன்ற பெண்களே பெண்விடுதலைக்கு, பெண்கள் நலன்களுக:கு எதிராகச் செயற்படும் கொடுமை இன்னொருபுறம். தமிழீழப் பெண்களை வாட்டுகின்ற ஒடுக்கு முறைகளாக இருக்கின்றன.

சாதியத்திற்குப் பலியாகின்றவர்களே சாதியத்தை மரபென மதித்து பேணும் அறியாமையாலெழுந்த அவல நிலைபோல,

இன விடுதலைக்கு எம்மினத்தவர்களே கருங்காலிகளாக இருந்து தடைக் கற்களாகச் செயற்படுவது போல,

பெண்விடுதலைக்கு எதிரிகளாகச் செயற்பட்டுவரும் பெண்களின் அறியாமையை போக்கும் முயற்சியில் ஈடுபடுவதுதான் பெண்ணொடுக்கு முறைக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய முதல் நடவடிக்கையாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிறப்புற முன்னெடுத்துச் செல்வதைப் போன்றே, பெண்ணொடுக்கு முறைக்கெதிராக பெண் விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்து வருகின்றது. படிக்காத நிலையிலும், படித்துவிட்டும், இதுவரை சமயலறையில் அகப்பையையும், உலக்கையையும் ஏந்திக் கொண்டிருந்த பெண்கள் இன்று ஆயுதமேந்தி களத்திலே நிற்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது. விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர், தலைவர் பிரபாகரன் அவர்களது சீரிய வழிகாட்டுதலினால் தேசிய விடுதலையுடன், பெண் விடுதலையும், சமகாலத்தில் மலரக் கூடிய வகையில் மேலைத்திட்டங்கள் அமைத்து செயற்பட்டு வருகின்றனர்.

தேசிய இன ஒடுக்குதலை மேற்கொள்ளும் இன எதிரிகளை களத்தில் நேரடியாகச் சந்தித்து வரும் பெண்கள் அணியினர், அது போலவே பெண்ணொடுக்கு முறையாளர்களையும் எதிர் கொண்டு, அவர்களைத் தட்டிக் கேட்கும் அளவிற்கு ஆற்றல் வாய்ந்த அமைப்பாக வளர்ந்திருக்கிறார்கள்.

"வீரம் ஆண்மையின் சின்னம், அச்சமும் அடக்கமும்தான் பெண்களுக்கு அணிகலன்" என்று கூறி பெண்களை இனி மேலும் ஏமாற்றி அடக்கி வைத்துவிட முடியாது. தமிழீழப் பெண்கள் விழிப்படைந்து விட்டார்கள். ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று நிலையை மாற்றி, பெண்களும் ஆண்களும் ஒத்த உரிமையுள்ள சமுதாயமாக எமது சமுதாயத்தை ஆக்குவதற்கான வேலைத்திட்டங்களை மகளிர் முன்னணி வகுத்து வருகிறது. வேலுநாச்சியார், குயிலி, ஜான்சிராணி, லட்சுமிபாயிலிருந்து சரோஜினி நாயுடு, வீர மங்கை கல்பனா எனப்பல ஆயிரக்கணக்கான பெண்களின் பங்களிப்பையும், ஈகங்களையும் விடுதலைப் போரின் போது விழுங்கிய பாரத நாடு போன்ற, விடுதலை பெற்றதின் பின்னர் அங்கு பெண்கள் ஒடுக்கப்பட்டு வருவது போன்ற நிலைமை தமிழீழத்தில் ஏற்பட முடியாது. தமிழீழ விடுதலையுடன் பெண்கள் விடுதலையும் கிடைக்கக் கூடிய வகையிலேயே செயற்பாடுகள் வகுக்கப்படுகின்றன. ஆண்களைவிட, மிகுதியான பெண்கள் இன்று விடுதலப் புலிகள் இயக்கத்தில் அணிதிரண்டு கொண்டு இருக்கின்றார்கள்.






உலக அரங்கில் தமது ஆற்றல்களையும், தியாகங்களையும் வெளிப்படுத்தி, ஆற்றல் மிக்க பெண்கள் படையாக மிளிர்ந்து வரும் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர், அனைத்துலகப் பெண்கள் நாளான மார்ச் 08 ஆம் நாளை மகளிர் எழுச்சி நாளாக அறிவித்துள்ளார்கள்.

தற்போது பெரும்பாலன நாடுகளில், மேல்நாட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களாலும், பெண்களை அடக்கி ஒடுக்கும் சர்வாதிகார அரசியல்வாதிகளின் மனைவியராலும் சடங்குள் போன்று நடத்தப்பட்டு வரும் அனைத்துலகப் பெண்கள் நாள் போலன்றி, விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் அந் நாளை எழுச்சி நாளாக அறிவித்து கொண்டாடுவது சாலப் பொருத்தமானதாகவும், பொருளுள்ளதாகவும் அமைகிறது.

அனைத்துலகப் பெண்கள் நாளை நாம் பெண்ணொடுக்கு முறை வடிவங்களையும், அவற்றிலிருந்து மீளவதற்கான வழிவகைகளையும் தமிழீழப் பெண்களுக்கு எடுத்து விளக்கி, அவர்களையும் தேசிய, மற்றும் பெண்ணுரிமைப் போராட்டங்களில் அணிதிரட்டுவதற்கான பொதுக் கூட்டங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் நடத்துகின்ற வகையில் கெண்டாட வேண்டும்.

அடக்கப்பட்ட பெண்களாக இருந்து, விடுதலைப் புலிகளின் அமைப்பில் இணைந்து, புரட்சிகர சக்தியாக மாறி, இன்று களத்தில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வரும் விடுதலைப் புலிகள் மகளிர் அணியில் தமிழீழப் பெண்கள் அனைவரும் ஒன்று திரண்டு உழைப்பதன் மூலமே தமிழீழ விடுதலைக்கு வழி அமைப்பதுடன், பெண்களுக்கெதிரான அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிய முடியும்.

## ஆழமாகப் புரிந்து கொள்வோம்

1911 ஆம் ஆண்டிலிருந்து உலகிலே பெண்களுக்கென ஒரு நாள் பிரகடனப்படுத்தப்பட்டு, கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடக்கத்தில் ஊதியம், ஓய்வு வேண்டும் என்று ஒரு சில கோரிக்கைகளுடன் கைக் கொள்ளப்பட்டுவந்த அனைத்துலகப் பெண்கள் நாள், இன்று காலமாற்றத்திற்கு ஏற்ப பெண்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணுமுகமான பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு கைக்கொள்ளப் படுகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் பலருக்கு அனைத்துலகப் பெண்கள் நாள் பற்றியும், பெண் விடுதலை பற்றியும், காலத்திற்குக் காலம் பெண்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் பற்றியும் பல ஐயங்கள் ஏற்படுவதுண்டு.




*உலக மகள் தொகையில் அரைப்பங்கினருக்கு மேலாகவுள்ள பெண்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்கு முறைகளை எதிர்த்து, பெண்களின் சமூக, பொருண்மிய, அரசியல் சமத்துவத்திற்காகப் போராட மேலைத்தேய நாடுகளில் பல பெண்கள் அமைப்புக்கள் தோன்றின. அவ்வமைப்புக்கள் ஆண்டுதோறும் மாநாடுகளை நடாத்தி, பெண்னொடுக்குமுறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, வீறுடன் போராடிவந்துள்ளன. 1910 இல் டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்கேகனில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில், கிளாரா செட்சின் அம்மையார் வெளியிப்டுத்திய கருத்துக்கமைய, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் எட்டாம் நாளை, அனைத்துலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடுவததென்று முடிவு எடுக்கப்பட்டது. அம்முடிவிற்கேற்பவே 1911 ஆம் ஆண்டிலிருந்து அடக்குமுறைக்கெதிராகப் போராட, பெண்களை அணிதிரட்டும் எழுச்சிநாளாக அனைத்துலகப் பெண்கள் நாள் கொண்டாடப்பட்டுவருகின்றது. எமது தேசிய விடுதலைப் போராட்டம், விடுதலைப் புலிகளின் தலைமையின் முனைப்புப்பெறத் தொடங்கிய காலத்திலிருந்து தமிழீழத்திலும், தமிழீழப் பெண்களுக்கெதிரான அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராக இதேநாளில் குரலெழுப்பப்படுகின்றது. மார்ச் எட்டாம் நாள் அன்றும் அனைத்துலகப் பெண்கள் நாள் தமிழீழத்தில் மிகவும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*





"உங்கள் இன்னும் என்ன வேண்டும் என்று பெண்விடுதலை பற்றி பேசுகிறீர்கள், எழுதுகிறீர்கள்" "நாங்கள் செய்கின்ற எல்லாவற்றையும் நீங்கள் செய்கின்றீர்கள் தானே? பின்னரும் பெண் விடுதலை என்று என்ன செய்ய விரும்புகிறீர்கள்? ஆண்களை அடிமைப்படுத்தப் போகின்றீர்களா?" "பெண்கள்தானே பெண்களை ஒடுக்கிறார்கள். பின்னர் ஏன் ஆண்களைக் குற்றம் சாட்டுகின்றீர்கள்?" என்றெல்லாம் பல கேள்விக் கணைகள் பெண்களை நோக்கி அடிக்கடி செலுத்தப்படுவதுண்டு.

இப்படியான அர்த்தமற்ற பல ஐயங்கள் பலரிடமும் இருப்பதால் தான் நாங்கள் எந்நேரமும் பெண்விடுதலை பற்றியும், பெண்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் அடிக்கடி பேசவேண்டியிருக்கின்றது, எழுத வேண்டியிருக்கின்றது.

பெண்விடுதலை என்ற கோட்பாட்டை எல்லோரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது முதலில் அவசியமாகிறது. பெண் விடுதலை பற்றிய கருத்துக்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பது உண்மையே. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் பெண் விடுதலைபற்றி ஒரு தெளிவான வரையறையை வைத்துள்ளோம். "ஆண்கள் செய்கின்ற எல்லாவற்றையும் பெண்கள் செய்வதுதான் பெண்விடுதலை என்றோ, அல்லது ஆண்களைப் பெண்கள் அடிமைப்படுத்துவதுதான் பெண் விடுதலை என்றோ நாம் எக்காலத்திலும் கருதவில்லை" பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான உறவில் ஏற்படும் ஆழமான புரிந்துணர்வுதான் பெண்விடுதலைக்கு வழிகோலும் என்பதே எமது கொள்கை.

பெண்களின்றி ஆண்கள் தனித்தோ, ஆண்களின்றிப் பெண்கள் தனித்தே வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஏற்படும் புனிதமான உறவில் தான் வாழ்வு இயக்கமே தங்கியிருக்கின்றது. அப்படியிருக்கும்போது "ஆண்களை அடிமைப்படுத்தவேண்டும் என்ற நோக்கிலோ பெண் விடுதலை பற்றிப் பேசுகிறீர்கள்? என்பது எத்துணை அர்த்தமற்ற கேள்வி. ஒரு இனம் தன் உரிமைகள் கிடைக்கும்வரை போராடியே தீரும் என்பது உலக நடைமுறை. பெண்ணினமும் அப்படித்தான் போராடுகிறார்கள். தம்மீது திணிக்கப்பட்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார, ஆணாதிக்க அழுத்தங்களிலிருந்து தன்னை முழுமையாக விடுவிக்கும் வரை பெண்ணினம் போராடியே தீரும். ஈழப் பெண்கள் இந்த உரிமைப் போராட்டத்தை எமது இயக்கம் அங்கீகரிக்கின்றது. பெண்களுக்காக எமது இயக்கம் குரல் கொடுக்கின்றது. பெண் விடுதலையை தனது கொள்கைகளுள் ஒன்றாக எமது இயக்கம் வரித்துள்ளது. இந்த மண்ணிலே எதிரிகளால் இழைக்கப் படுகின்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பெண்களுக்கு உள்ள உரிமையை மதித்து, அவர்களைத்தனது படையணிகளுள் ஒன்றாக இணைத்துள்ளது. பெண்களின் சொத்துரிமையைப் பேணக்கூடிய வகையில், அதே நேரம் சீதன வழக்கை இல்லாதொழிக்கும் நோக்கில் புதிய சட்டங்களும் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை யாவும் பெண்களின் உரிமைகளை உயர்நிலையில் பேணுவதற்காக எமது இயக்கத்தால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளே ஆகம்.



இந்நேரம் "பெண்களைப் பெண்கள்தானே ஒடுக்குகின்றார்கள். பின் எதற்காக ஆணாதிக்கம் என்கிறீர்கள்?" என்று கேட்பவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றோம்.

"பெண்களைவிட ஆண்கள் உயர்ந்தவர்கள் என்பது ஆணாதிக்க் கருத்து ஆகும். இக்கருத்தை உடையவர்கள் பெண்களாயிருந்தாலென்ன, ஆண்களாயிருந்தாலென்ன அவர்கள் ஆணாதிக்க வாதிகள்தான். ஆணாதிக்கக் கருத்துக்கள் ஆண்களிடம் மட்டுமல்ல பெண்களிடமும் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் நாம் ஆணாதிக்கக் கருத்துலகத்திற்கு எதிராக போராடுகின்றோமே தவிர, ஆண்களுக்கு எதிராக அல்ல. ஆணாதிக்கக் கருத்துலக மாயைக்குள் சிக்கியிருக்கும் பெண்களையும் ஆண்களையும் அதிலிருந்து விடுவிக்க விரும்புகின்றோம்.



பெண்களும் ஆண்களும் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து வாழ்வதுதான் பெண்ணின விடிவுக்க வழிகோலும் எனபதையே நாம் அழுத்திக் கூறவிரும்புகின்றோம்.

- விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு - 10.03.1995

# ஒரு பல்கலைக்கழகமும் ஒரு இசை நிகழ்ச்சியும்!

17.02.2024



பாடசாலைகளை, பல்கலைக்கழகங்களைக் கட்டுவது உன்னதமானது. புலம்பெயர்ந்துபோன எல்லாத் தமிழர்களும் தாயகத்துக்கு திரும்பி வருவதில்லை. தாயகத்துக்கு திரும்பிவரும் எல்லாருமே தாயகத்தில் முதலீடு செய்வதில்லை. தாயகத்தில் முதலீடு செய்பவர்களிலும் மிகச்சிலர்தான் கல்வித்துறையில் முதலீடு செய்கிறார்கள். ஆளில்லா ஊரில் ஆலயங்களைக் கட்டுவதை விடவும் கல்விச்சாலைகளை கட்டுவது மகத்தானது. அப்படி ஒரு முதலீடுதான் கந்தர்மடம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நோர்தேன் யுனி என்று அழைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகம்.

போட்டிக் கல்வி வியாபாரமாக மாறிய ஒரு கல்விச்சூழலில், ஒரு முதலாளி கல்வியில் முதலீட்டைச் செய்யும்பொழுது அங்கேயும் வியாபார இலக்குகள் இருக்கும். ஆனால் தனது முதலீட்டை விளம்பரப்படுத்துவதற்காக சினிமாத் துறைப் பிரபல்யங்களை கொண்டு வரும்போதுதான் சர்ச்சை எழுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ மிஷனரிகளும் இந்து மத மறுமலர்ச்சியாளர்களும் போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு பிரதேசம்தான் யாழ்ப்பாணம். நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது அவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு போக்கின் தேறிய விளைவு.



அமெரிக்காவில் தமது சுகபோகங்களைத் துறந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து பள்ளிக்கூடங்களைக் கட்டிய மிஷன் தொண் டர்கள் ஊரூராக பிடியரிசி சேர்த்து இந்துக் கல்லூரிகளைக் கட்டிய இந்து மறுமலர்ச்சியாளர்கள் என்ற மகத்தான முன்னுதாரணங்கள் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

இம்மாதம் ஆறாந் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில், அக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடக்கின.

சரியாக 200 ஆண்டுகளுக்கு முன் திருமதி.ஹரியற் வின்சிலோ என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண், தனது 28ஆவது வயதில் உடுவில் மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். தென்னாசியாவில் விடுதி வசதியோடு கூடிய முதலாவது பெண்கள் பள்ளி அது. யாழ்ப்பாணத்தில் ஹரியற் அம்மையார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய ஐந்து பிள்ளைகள் தொற்று நோய்க்கு இரையானார்கள். அமெரிக்காவுக்கு படிப்புக்காக அனுப்பப்பட்ட அவருடைய ஆண்பிள்ளை கடல் பயணத்தில் இறந்து போனார். தொடர்ச்சியான தனிப்பட்ட இழப்புகளால் நொறுங்கிப்போன போன ஹரியற் தன்னுடைய 37ஆவது வயதில், இளவயதில் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய வந்த அவருடைய இரண்டு சகோதரிகள் அவருக்குப் பின் இறந்து போனார்கள். தன் மூன்று சகோதரிகளோடு சேர்ந்து பணிபுரிவதற்கென்று அமெரிக்காவிலிருந்து வந்த மற்றொரு சகோதரி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கிய பின்னர் தான் தன்னுடைய ஏனைய மூன்று சகோதரிகளும் உயிரோடு இல்லை என்பதை அறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் கல்வியை கட்டியெழுப்புவதற்காக எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்து சந்நியாசிகள்போல வாழ்ந்து, தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மதம் மாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களுடைய செயற்பாடுகளுக்கு எதிராக இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் பள்ளிக்கூடங்களைக் கட்டியெழுப்பினார்கள்.

மிஷன் பள்ளிக்கூடங்களை எதிர்கொண்டு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சுதேசிகளின் பள்ளிக்கூடங்களைக் கட்டினார். அவ்வாறு பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு அவர் பிடியரிசித் திட்டம் என்ற ஒரு சமூகப் பங்களிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமங்கள் தோறும் பிடியரசி சேகரிக்கப்பட்டு, அந்த நிதியில் யாழ்.இந்துக் கல்லூரியும் உட்பட பல்வேறு சுதேச பள்ளிக்கூடங்களை இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் கட்டினர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் மருதனார் மடத்தில் இராமநாதனின் கல்லூரி கட்டப்பட்டது. அப்பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திருமதி லீலா ராமநாதன் ஒரு ஒஸ்ரேலியப் பெண். அவருடைய சேவையை வியந்து போற்றுபவர்கள் அவருடைய வெண்ணிறப் பாதங்களில் அந்த ஊரின் செம்பாட்டுச் சாயம் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள்.



உடுவில் மகளிர் கல்லூரியின் முதலாவது பட்டதாரி

இவ்வாறு எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரப் பெண்களும் ஆண்களும், உள்ளூரில் சைவசமய மறுமலர்ச்சியாளர்களும் கல்விச்சாலைகளைக் கட்டியெழுப்பிய போது அவர்கள் அதை அதிகபட்சம் தொண்டாகவே செய்தார்கள். கல்விப் பணி என்பது உன்னதமான ஒரு தொண்டாகக் கருதப்பட்டு, போற்றப்பட்ட காலகட்டம் அது.

இப்படிப்பட்ட கல்விச்சாலைகளைக் கட்டும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்து நோர்தென் யுனியையைப் பார்க்க வேண்டும். அந்த பல்கலைக்கழகம் கட்டப்பட்டிருக்கும் கந்தர் மடம் சந்தியில் இருந்து அரசடிச் சந்தியை நோக்கி வரும் கந்தர் மடம் வீதியில், முன்பு ஒரு சைவப் பிரகாசா வித்தியாசாலை இருந்தது. அங்கே மாணவர்களின் வரவு குறைந்தபடியால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டுபின்னர் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்பொழுது ஏதோ ஒரு அரச கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அச்சிறிய பள்ளிக்கூடத்துக்கு ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் உண்டு. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தல் நடந்த பொழுது சைவப்பிரகாச வித்தியாசாலை ஒரு வாக்களிப்புச் சாவடியாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொள்ளாத விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த சாவடியில் காவலுக்கு நின்ற போலீசாரின் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.இப்பொழுது மாணவர்கள் இல்லை என்பதால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது.அது அமைந்திருக்கும் வீதி பலாலி வீதியில் வந்து ஏறும் சந்தியில் நோர்தேன் யுனி கட்டப்பட்டிருக்கிறது.

கனடாவில் வசிக்கும் தமிழ் முதலீட்டாளர் அதைக் கட்டியிருக்கிறார். தனது தாயகத்தில் அவர் முதலீடு செய்ய விரும்புகிறார். குறிப்பாக அதனைக் கல்வித் துறையில் முதலீடு செய்ய விரும்புகிறார். தமிழ் மக்களுக்கு தனியார் பல்கலைக் கழகங்கள் வேண்டும். தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய துறைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தில் தங்கியிராத அதுபோன்ற பல்கலைக்கழகங்கள் வேண்டும். அந்த அடிப்படையில் அந்த முதலீட்டை வரவேற்க வேண்டும்.



அந்த முதலீட்டாளரின் மனைவி இந்தியாவின் சினிமாப் பிரபல்யங்களில் ஒருவரான ரம்பா. அதனால் அப்பல்கலைக் கழகத்தை விளம்பரப்படுத்த முயன்ற முதலீட்டாளர் தன்னுடைய மனைவியின் துறைசார்ந்து சிந்தித்து விட்டார். தன் மனைவியின் துறை சார்ந்த பிரபல்யங்களை கொண்டு வந்து பெருமெடுப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்துவதன்மூலம் தனது பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான விளம்பரம் கிடைக்கும் என்று அவர் கருதியிருக்கலாம்.

தமிழ் வெகுசனைப் பண்பாட்டில் சினிமாவின் தாக்கம் வலியது. பெருந்தமிழ் பரப்பில், குறிப்பாக தமிழகத்தில்,அரசியல் எனப்படுவது ஏதோ ஒரு விகிதமளவுக்கு சினிமாவின் நீட்சியும் அகட்சியும்தான். ஊடகமாகட்டும் பொழுதுபோக்கு ஆகட்டும், எல்லாவற்றிலும் சினிமாவின் தாக்கம் உண்டு. கேபிள் தொலைக்காட்சி எனப்படுவது சுந்தர இராமசாமி கூறுவதுபோல வீட்டுக்கு வந்த திரைப்படம்தான். அது வீட்டில் வரவேற்பறையில் எப்பொழுதும் இருப்பது. எனவே தமிழ்ப் பொது உளவியலின் மீது



இராமநாதன் இணையர்

தமிழ்ச் சினிமாவின் செல்வாக்குப் பெரியது.

தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது; தமிழ்ப் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பது; பெண்ணுடலைப் போகப்பொருளாகப் பார்ப்பது. தமிழில் ஜனரஞ்சகமானவற்றுள் பெரும்பாலானவை மேலோட்டமானவை; ஆழமற்றவை; அறிவுக்கு விரோதமானவை. இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பர உத்தி ஒன்றைத் தெரிந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார்.

நிகழ்வில் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர் மேடையில் பேசுகிறார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் புலம்பெயர்ந்து போன நாட்டில் இருந்து வந்திருப்பதாக கூறுகிறார். ஆனால் கூட்டம் அவருக்கு அடங்கவில்லை. அவருடைய மனைவி ரம்பா பேசுகிறார். கூட்டம் அடங்கவில்லை. போலீஸ் அதிகாரி பேசுகிறார் கூட்டம் அடங்கவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததன் விளைவு அது. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி அதிகாரத்துக்குள்ள வரையறைகளை உணர்த்திய ஒரு நிகழ்வும் அது.

ஆனால் அந்தக் குழப்பம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளுக்கு விரோதமானது அல்ல. முதலீட்டை விளம்பரப்படுத்த எடுத்துக்கொண்ட வியாபார உத்தியின் விளைவு அது. மேலும், ஹரிஹரனின் இசையை பார்வையாளர்கள் அவமதித்ததாகவும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தமிழ் முதலீட்டாளர் தமிழ் பொதுப்புத்தியை கையாள்வதில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டு என்பதனை உணர்த்திய ஒரு குழப்பம் அது. தாயகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் தொடர்பாக முதலீட்டாளர்களும் தாயகத்தில் உள்ள அரசியல் சமூகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு வேலைத் திட்டத்துக்குப் போகவேண்டியிருப்பதை உணர்த்திய ஒரு நிகழ்வு அது.

தாயகத்துக்கு முதலீடுகள் அவசியம். தாயகத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை அல்லது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை இல்லை அல்லது முன்னேறுவது கடினம் என்று கருதும் ஒரு தொகுதி மக்கள் தாயகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. “இந்த மண் எங்களின் சொந்த மண்”என்று பாடிய ஒரு மக்கள் கூட்டம்,அந்த மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது.எனவே தாயகத்தைத் தொழிற் கவர்ச்சி மிக்கதாக மாற்ற வேண்டும்.அதற்கு முதலீடுகள் அவசியம். ஆனால் அந்த முதலீடுகளை எந்த நோக்கு நிலையில் இருந்து முன்னெடுப்பது என்பதுதான் இங்குள்ள சவால்.



“நாங்கள் தானம் செய்கின்றோம் அல்லது தொண்டு செய்கிறோம்” என்ற நிதி அதிகார மனோநிலையில் இருந்து அல்ல, மாறாக, தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது; அதற்கு வேண்டிய துறைசார் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வேண்டும். அதாவது தேச நிர்மானத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில்



முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எப்படி தேச நிர்மானத்தின் பங்காளிகளாக மாற்றுவது என்று தாயகத்தில் உள்ள அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

முதலாளிகள்,அவர்கள் தமிழர்களோ, சிங்களவர்களோ, வெள்ளைக்காரர்களோ யாராக இருந்தாலும், முதலாளிகள் தான். அவர்களிடம் இலாப நோக்கம் இருக்கும். முதலாளிகள் அப்படித்தான் சிந்திப்பார்கள்.ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளை கொழும்புமைய நோக்கு நிலையில் இருந்துதான் அணுகுவார்.அவர் அப்படித்தான் சிந்திப்பார். ஆனால், முதலீடுகளை தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகத் திட்டமிட வேண்டியது தாயகத்தில் உள்ள அரசியல் சமூகத்தின் பொறுப்பு, கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தல்ல; அல்லது தனிய இலாப நோக்கு நிலையில் இருந்தல்ல; தேசத்தைக் கடியெப்புவது என்ற நோக்கு நிலையிலிருந்து முதலீடு செய்யுமாறு,தமிழ் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவேண்டும். அவர்களைத் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக்க வேண்டும். பாரதி பாடியது போல “ஆலைகள் செய்வோம் கல்விச் சாலைகள் செய்வோம்”

நன்றி: நிலாந்தன்

# வெளிவந்துவிட்டது

உலக வணிகம்
ULAGA VANIKAM

2024




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

437-345-4203




மதியம் தொடங்கி கொட்டோ கொட்டென்று கொட்டிக்கொண டிருந்த மழை, வெறி அடங்கி ஓய்ந்திருந்தது. கிளிநொச்சி ஆமி விட்டுவிட்டுச் செல் அடித்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு செல்லும் இரைந்தபடி வந்து பெரும் சத்தத்தோடு வெடிக்கையில் நெஞ்சம் பதறிற்று.

"இந்த மழையுக்கை கூட ஈன இரக்கமில்லாமல் செல்லடிக் கிறியே பாவி..." சிங்கள ஆமியைச் சபித்தபடியே மறுக்கம் புரண்டு படுத்தாள் கமலம்.

தலைக்குள் நரம்புகள் எல்லாம் சுண்டி இழுத்தன. தொண்டைக் குள் அரித்தது. "கோதாரி பிடிச்ச இந்த மலேரியாதான் என்னைக் கொல்லப்போகுதுபோல" சொல்லிக்கொண்டு மூத்தவன் சேகரைத் தொட்டுப்பார்த்தான். பாயை விட்டுவிலகி முகக்குப்புற நித்திரையாகிக் கிடந்தான் அவன்.

"என்ர குஞ்சு பிறக்கேக்க எவ்வளவு கனவு கண்டன்... படிப்பிக்க வேணும்... உத்தியோகமாக்க வேணும்... என்னை ஒதுக்கி வைச்சவைக்கு முன்னால் என்ர பிள்ளையை தலை நிமிரத்தி நடக்க வைக்கவேணுமெண்டு..." இருகைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு கமலம் அழுதாள். அழுவதற்கு இருள் வசதியாக இருந்தது.

"கமலம் அழாதை. நானிருக்கிறன்... ஏனிப்ப அழுகிறாய்?" முகத்தைப் பொத்திய அவள் கைகளைப் பிடித்து கந்தசாமி இழுப்பது போலிருந்தது.

"அ... அ... என்ன... இ... இருக்கிறியளோ? - விருட்டென்று எழுந்து அரிக்கன் லாம்பைத் தூண்டிவிட்டுப் பார்த்தாள்.

பிள்ளைகள் சேகரும், கவிதாவும்தான் அருகருகே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

காணாமற் போய்விட்ட கணவன் கந்தசாமியின் நினைப்பு அவளை அழுத்தி வருத்தியது.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் பாட சாலைக்கு அருகே உறவினர் வீட்டில் காலத்தை நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

உறவினர்களின் சீறல் சினப்புகள் ஒருபுறம்... இராணுவத்தின் கொடூரங்கள் மறுபுறம் என்று வாழ்வின் மீதான பிடிப்பு வற்றிக் கொண்டிருந்தது.

திடீரென்று இராணுவம், "சத்ஜெய"வை ஆரம்பித்தது.

அகோரச் செல்லடி, விமானங்களின் மூர்க்கம் கொண்ட குண்டு வீச்சு, கையில் அகப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களோடு மீண்டும் இடம் பெயர்ந்தார்கள்.

விட்டுவிட்டு ஓடிவந்த பொருட்களில் கந்தசாமியின் சயிக்கிளும் ஒன்று. சயிக்கிளை விட்டு வந்ததில் கந்தசாமி உடைந்து போனான். பதினாறு வருசமாய் அவன் பிள்ளைபோல் பாது காத்த சயிக்கிள் அது.

"இனி எந்த உறவினர்களோடோ அல்லது நண்பர்களோடோ சேர்ந்து இருப்பதில்லை" என்று கமலம் தான் அடம் பிடித்தாள். அனுபவங்களை கமலத்தை இப்படி ஆக்கி விட்டிருந்தன.

தெருவோரமாக - காட்டுச் செடிகளைக் குடைந்து தற்காலிகமாக ஓர் இருப்பிடம் அமைத்திருந்தார்கள்.

வந்த நாள் முதல் மரத்தடியில் வானத்தை வெறித்தபடியே நாட் களை உருட்டிக் கொண்டிருந்த கந்தசாமி, ஒருநாள் குலத்தைச் சந்திக்கவென்று போய்வந்தான்.

"இஞ்ச கமலம்... மெல்லமெல்லப் போய்... சயிக்கிள ஒருக்கால் பாத்து வரட்டே..."

"எங்கபோய்...?"

"அங்க... நாங்கள் இருந்த வீட்டதான்..."

"ஏன் அவங்கட கையாலை சூடு வாங்கிச் சாகவோ?..."

கந்தசாமி சிரித்தான். பிறகு சொன்னான்:

"அவனவன் போய்... தேங்காய், மாங்காய் எண்டு பிடுங்கி வந்து விக்கிறான் நீ, சயிக்கிள் எடுத்துவர விடுறாயில்லை..."

"சயிக்கிள் எடுக்கவெண்டுபோய்... உங்களுக்கொண்டு நடந் தால்... நானும் பிள்ளையளும் என்ன செய்யிறது?"

கமலம் விம்மலோடு கேட்டாள்.

"விசரி உனக்கு நெடுகப் பயம்தான்... குலம், ஞானம், குமார் எல் லாரும் சாமான் எடுக்கப் போறாங்கள்... அவங்களோடதான் போறன்... தனியவே போகப் போறன்?"

"போற அண்டே வருவியளோ?"

"உடனை வருவம்... போறது... சயிக்கிள் எடுக்கிறது... திரும்பி வாறது... அவ்வளவுதான்..."

சரி நெஞ்சுமுட்டின நேர்த்திக்கடன்களோடு கடன்களோடு கந்த சாமிக்கு விடை கொடுத்தாள்.

அன்று போனவன் போனவன்தான். குலம், ஞானம், குமார் எல்லோரும் வந்துவிட்டார்கள். கந்தசாமி மட்டும்...?

அவனைத்தேட எடுத்த முயற்சிகள் எல்லாமே தோல்வி கண்டன.

கமலம் மெல்ல, மெல்ல இறுகிப்போனாள்.

முருகன் கோவில் மணி குளிரைக் கிழித்துச் செவிகளை அதிர்வித்தது.

"அம்மா..."

"ம்..."

"கச்சான் வறுக்கவேணுமல்லே... எழும்புங்கோவன்...? சேகரின் குரல் நெஞ்சைத் துளைத்து வலித்தது.

"படிக்கிற வயதில... என்ரபிள்ளை...?" கண்களின் ஓரம் நீர் துளிர்த்தது. எவ்வளவுதான் ஆழ்ந்த நித்திரை என்றாலும் கோவில் மணிச் சத்தத்துக்கு சேகர் எழுந்து விடுவான்.

"சேகர்..."

"என்னம்மா?..."

"எனக்கு ஏலாமக்கிடக்கு... மருந்தெடுக்கப் போகவேணும்... இண்டைக்கு வீட்டில நில்... கச்சான் விக்கப் போக வேண்டாம்..."

பள்ளிக்குடம் விட்டு வரேக்கை சின்னப்பெடியள் எல்லாம் கச சான் வாங்கிற ஆசையில வருவாங்கள்... பாவமம்மா..."

கமலம் மெல்லக் கையூன்றி எழுந்தாள். கள்ளென்று கன்னங்கள் வலித்தன.

ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவில் நீண்டு வளைந்து வரிசையில் கமலம் நின்றுகொண்டிருந்தாள்.

இரண்டு தடவைகள் வாந்தி எடுத்து விட்டதால் களைப்பாக இருந்தது. நண்பகல் ஆகிவிட்டிருந்தது.

நகர்ந்து... நகர்ந்து... மருத்துவரை அண்மித்தபோது அவ ளுக்கு அச்சரியமாக இருந்தது. "அம்மா இருங்கோ"

எதிர்பாரத்திருக்காத இங்கிதமான குரல் இன்றும் அதிசய மூட்டியது.

"என்ன செய்யுது... சொல்லுங்கோ..."

"கை கால் உளைவ... குளிர்நடுக்கம்... வாந்தி காய்ச்சல்" என்று சொன்னாள்.




இரத்தம் சோதிக்கப்பட்ட துண்டை மருத்துவர் பார்த்தார். தலையை ஆட்டிவிட்டு இன்னொரு துண்டில் எழுதினார். கம லம் அந்த மருத்துவரைப் பார்த்தாள். அதிக உயரமில்லாத மெல் லிய உருவம். இருபத்தைந்துக்கும் முப்பதுக்கும் இடையிலான வயது இருக்கும். கனிவான பேச்சு. கருணையுள்ள பார்வை.

"பெயரென்னம்மா?..."

"சு. கமலாம்பிகை..."



“வயது?...”

“முப்பத்தெட்டு...”

அந்த மருத்துவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். பிறகு எழுதினார்.

“ஆரோடை வந்தனீங்களம்மா?...

“தனிய...”

“ம் அப்படியெண்டா குளிசைகளை எடுத்துக்கொண்டு போய் வீட்டில போடுங்கோ... முழுதும் போடவேணும்... காய்ச்சல் விட்டுட்டுது எண்டு மிச்சக்குளிசைகளை பாவிக்காம விட்டா - திருப்பியும் காய்ச்சல் வரும்... சரியோ...?”

எழுதிய சிட்டையை கமலத்திடம் நீட்டினார் மருத்துவர். இரண்டு கைகளாலும் கமலம் அத்துண்டைப் பெற்றுக்கொண்டு, மருந்து வாங்கும் இடத்துக்கு வந்தாள்.

“மருந்துகளைக் கொடுத்தார்கள்.”

வெளியே வந்தாள்.

அந்த மருத்துவரின் தோற்றம், வயது, கனிவு, கருணை எல்லாமே நினைவில நெருடிக்கொண்டிருந்தன.

“என்ர பிள்ள சேகரும் படிச்சா, இப்பிடி ஒரு மருத்துவராய் வந்து, சனங்களுக்கு உதவி செய்யமாட்டானா?...”

மனதுக்குள் ஆயிரமாய் கேள்விகள்...

“இண்டைக்கு என்ர கஷ்டத்தை தீர்க்கிறதுக்காக பிள்ளையின்ர படிப்பை நிறுத்திட்டன். நாளைக்கு அவனின்ர எதிர்காலம்...?”

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது நடையின் வேகத்தைக் கூட்டினாள்.

கையிலிரந்த சில்லறைகளை எண்ணிப் பாரத்தாள். இருபத்து மூன்று ரூபா ஐம்பது சதமிருந்தது.

சந்திக்கடையில் இரண்டு கொப்பிகளும் ஒரு பேனையும் வாங்கிக்கொண்டு நடந்தாள்.

தூரத்தில் வரும்பொழுதே சேகரும் கவிதாவும் வீதியைப் பார்த்தபடி வாசலில் குந்தியிருப்பது தெரிந்தது. அவர்களைக் கண்டதும் அடிவயிற்றில் இருந்து பாசம் சுரந்தது.

“அம்மா...” என்று ஓடிவந்து கட்டிப்பிடித்த சேகரையும் கவிதாவையும் பிடித்து - அவர்கள் கையில் கொப்பிகளையும் பேனையையும் கொடுத்தாள்.

ஆச்சரியத்தோடு தன்னை அண்ணாந்து பார்த்தவர்களை அள்ளி அணைத்தாள்.

“குஞ்சுகள்... நாளைக்கு ரண்டுபேரும் பள்ளிக்குடத்துக்குப் போங்கோ.

அம்மா இந்தக் கையும் காலும் இருக்கிறவரை உங்களைப் படிப்பிக்கிறதுக்கு உழைப்பாள்...”

என்றபடி உள்ளே போனாள். கையில் மருத்துவர் தந்த மருந்துச்சரை பவுத்திரமாகக் கிடந்தது.

- நன்றி: ஆதிலட்சுமி சிவகுமார்

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**“அம்மா...”**
**“ம்...”**
**“கச்சான் வறுக்கவேணுமல்லே... எழும்புங்கோவன்...?**
**சேகரின் குரல் நெஞ்சைத் துளைத்து வலித்தது.**
**“படிக்கிற வயதில... என்ரபிள்ளை...?”**
**கண்களின் ஓரம் நீர் துளிர்த்தது.**

# காலம் அரித்திடாது எம் இணைப்பை!




1987 ஆம் ஆண்டு சிறீலங்கா - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட வேளையில் சில ஈழப்போராளிகள் உட்பட பலரிடமும் அரசியல் தீர்வு பற்றிய ஒரு மயக்கநிலை தோற்றம் பெற்றிருந்தது. ஈழப் போராட்டத்தின் பின்தளமாக இருந்த தமிழ்நாட்டை விட்டு பணியகங்களையும் மூடிவிட்டு ஈழப்போராளிகள் தாயகத்திற்குத் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டனர். அப்போது நான் ஈழ நண்பர் கழகத்தின் வெளியீடாக வந்துகொண்டிருந்த 'நட்புறவுப்பாலம்' இதழில் 'விடைபெறும் நேரம்...' என ஒரு கடிதம் எழுதினேன்.

அக்கடிதத்தின் இறுதி வரிகளாக 'நண்பர்களே இது விடைபெறும் நேரம்தானா என்பது தீர்மானமாகவில்லை. ஆனாலும் எங்கள் நினைவுகள் உங்களின் அன்பு நட்பு தோழமை இவற்றையே தாங்கியுள்ளன. உங்களிடமும் இவற்றையே கையளித்துள்ளோம்.' என எழுதி ஒக். 87 என கையெழுத்திட்டிருந்தேன்.

காலம் இருபது ஆண்டுகளைத் தின்று முடித்துவிட்டது. துன்பியல் நிகழ்வுகள் பலவற்றுக்கு நாம் சாட்சியமாகியும் விட்டோம். இப்போதெல்லாம் அன்றைய நாட்களைப்போல் ஊடும்பாவுமாக நாம் வாழ்வதற்கு இந்திய நாட்டின் சட்டங்கள் இடம்கொடுக்குமா எனத் தெரியவில்லை. தற்போது உங்களிடம் இருந்து பல்லாயிரம் மைல் தொலைவில் அலைந்து உழன்று கொண்டிருக்கிறேன்.

புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் நானும் ஒரு தலையாக இணைந்துவிட்டேன். ஆனால் என்னுள்ளான நெருப்பை என்றும் நான் அணைய விட்டதுமில்லை, எனக்கான தேசியப் பணிகளைக் கைவிட்டதுமில்லை. அப்பணியாக இக்கட்டுரையையும் எழுதுகின்றேன்.

**நண்பர்களே,**

எத்தனையோ துயர துன்பியல் நிகழ்வுகளையும் தாண்டி ஈழப் போராட்டம் விரிவுபெற்று சில எல்லைகளைத் தொட்டு நிற்கின்றது. அதேபோல் மரணத்துள்ளான வாழ்வும் மாற்றமின்றித் தொடர்கின்றது. இனப்படுகொலை முன்னெப்போதையும் விட சிறீலங்கா அரசால் சர்வதேச அங்கீகாரத்துடன் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. இதற்கு காந்தியை மகாத்மாவாகக் கொண்டாடும் உங்கள் தேசமும் உடந்தையாக இருக்கின்றது என்பதற்கு வவுனியா படைத்தளம் சாட்சியமாகி உள்ளது.

பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற முடிவிலேயே இந்திய தேசம் ஈழத்தமிழர்கள் மீதான தனது நகர்வுகளை மேற்கொள்கின்றது. இந்திய தேசம் அரசியல் இராஜதந்திரத்துடன் நடக்கின்றதா அல்லது வர்ணாச்சிரம தர்மத்தை முன்னிறுத்துகின்றதா என்பதே இன்றைய கேள்வி. இந்தச் சூழலே நாம் விடைபெற முடியாதவர்கள், இன்னும் நெருக்கமாக இணைந்திருந்து பணியாற்ற வேண்டியவர்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

முன்னெப்போதையும் விட அயல் தேசமான இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தார் தமது கண் காதுகளைச் சின்னஞ்சிறிய இலங்கைத்தீவின் சந்து பொந்துகளில் எல்லாம் விதைத்து வைத்திருக்கின்றனர்.

சர்வதேசம் துயருறும் மக்களுக்காகப் போராடும், சமூகத்திற்கு நியாயம் வழங்கும் என்றுதானே நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால் நான் உங்களுடன் தமிழ்நாட்டில் 1978 முதல் 1988 வரை இருந்த காலத்தில் சர்வதேசத்தைப் புரிந்துகொண்டதை விடவும் புலம்பெயர்ந்த வாழ்வியலின் பின்னணியில் மிகத் துல்லியமாக அதனைப் புரிந்துகொள்ள முடிந்துள்ளது.

'எல்லாமும் திருப்பபட்டாயிற்று
வட அத்திலாந்திக் கரைகளுக்கு
கரை தொட்ட தேசங்களுக்கு.
வந்து வந்து சேர்கின்றன பார்
அறுத்தெடுத்த ஈரல் குலைகள்
துடிதுடிக்கும் இதயங்கள்
உருவி எடுக்கப்பட்ட நாடி நரம்புகள்
பதனமான முகங்கள்
கனிமச் சத்தும்
எண்ணெய்க் கொழுப்பும்
ஊறின தேறல்
ருசி என்ற ருசி...'

இதுதான் சர்வதேசம். புலம்பெயர்ந்ததனால்தான் இப்படிப் புரிந்து என்னால் கவிதை எழுத முடிந்தது.

சர்வதேசம் விடுதலை அவாவும் சமூகங்களுக்கு தன் நலன்களுக்கு அப்பால் எங்கும் ஒத்தாசை புரிந்ததோ அமைதியை ஏற்படுத்தியதோ தீர்வை வழங்கியதோ கிடையாது. அது கிழக்குத் தீமோராக இருக்கலாம் கொசொவோவாக இருக்கலாம் எல்லா இடத்திலும் தன் நலன்களையே இந்தச் சர்வதேசத்தார் முன்னிறுத்தி உள்ளனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கனிமச் சத்தும் எண்ணெய்க் கொழுப்பும் ஊறின தேறலுக்காகவே அவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சின்னஞ்சிறு தீவில் சர்வதேசத்திற்கு என்ன நலன்கள் இருக்க முடியுமென நீங்கள் சிந்திப்பது நியாயமானதொன்றே. அதுவும் துணைக்கண்டமான இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்பும், பெருமளவான மூலவளமும் இல்லாத இலங்கைத் தீவிற்கு சர்வதேசம் ஏன் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பது பலருக்கும் புரியக்கூடியதொன்றல்ல.

இந்தியாவின் எல்லைகளைத் தொட்டு நிற்கும் இந்துமாக் கடலிடையேயான இலங்கைத்தீவின் அமைவிடமே அதன் பலமும் பலவீனமுமாகும். அவ்வமைவிடம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக புவிசார் அரசியலில் சர்வதேச நலன்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதே அதன் பலவீனம். அதனாலேயே ஈழப் போராட்டம் நீண்டு செல்ல வேண்டியதாக உள்ளது.

'இந்து சமுத்திர நாடுகளின் நிலை, இவ்வல்லரசுகளின் போட்டிக்குள் ஏதோ ஒரு வகையில் சிக்குண்டு, தமது சுயாதிபத்தியத்தை இழந்து, அமைதியை இழந்து வாழவேண்டிய துர்ப்பாக்கியம் உள்ளதாய் இருக்கின்றது.' என 70 ஆம் ஆண்டில் முகிழ்ந்த இளந்தலைமுறையைச் சேர்ந்த இரு அரசியல் அறிஞர்கள் 1987 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட ஆய்வு நூலான 'இந்து சமூத்திரமும் இலங்கை இனப்பிரச்சினையும்' எனும் நூலில் தெரிவித்திருக்கின்றனர்.

அதாவது, ஈழத்தமிழரை அழிக்கும் சிறீலங்கா அரசிற்கு அமெரிக்காவும் ஆதரவு அதேவேளையில் அமெரிக்காவை கிலிகொள்ள வைத்திருக்கும் எதிரியான சீனாவும் ஆதரவு. தமிழ்மொழி பேசும் மக்களை ஒரு மாநிலமாக கொண்டிருக்கும் இந்தியாவும் ஆதரவு. நாள்தோறும் இந்தியா மீது யுத்தப் பிரகடனம் செய்து கொண்டிருக்கும் பாகிஸ்தானும் ஆதரவு. என்ன வேடிக்கை பாருங்கள். இதில் ஈழப்போராட்டம் எவர் நலனையும் சாந்திருக்காததே சட்டாம்பிள்ளையான சர்வதேசத்திற்கான சிக்கலாகும்.

உலகின் பல்வேறு தேசிய இனச் சிக்கல்களில் சர்வதேசம் புகுந்து விளையாடி அவ்வினங்களின் விடுதலை அவாவை கருவறுத்ததை வெற்றியாகக் கொண்டாடி வருகின்றது. அவர்கள் கருவறுத்ததின் சாட்சியமாக நாம் பாலஸ்தீனத்தைக் கொள்ளலாம். அதன் சோகக்கதையை நான் விரிவாகக் கூற வேண்டியதில்லை. ஈழப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இன்று என்ன நிலையில் உள்ளது பாலஸ்தீனம்?

அதேபோல் ஈழப்போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதும் அதன் வீரியத்தை மங்கச் செய்து முழங்காலில் இருக்க வைப்பதுமே இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தின் முயற்சியாகும். சர்வதேசம் வழங்கும் ஆதரவும் துணிச்சலும்தான் சிறீலங்கா அரசு ஈழத்தமிழர்களை அழிக்கும் இனச்சுத்திகரிப்பிற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. இன்றைய ஈழப்போராட்டமானது சிறீலங்காவிற்கு எதிராக மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் எதிர்முகம் கொடுக்க வேண்டி உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். இந்நிலையில்தான் உங்கள் அன்பும் நட்பும் தோளணைவும் எமக்குத் தேவையாக இருக்கின்றது.

1983 ஆம் ஆண்டு யூலைப் படுகொலை நிகழ்வுகள் யாராலும் மறக்கக் கூடியதொன்றல்ல. நீங்களும் மறந்திருக்க மாட்டீர்கள். இந்த ஆண்டு அதன் 25 ஆம் நினைவாண்டு. 1983 ஆம் ஆண்டு இந்நிகழ்வின் போது நான் உங்களுடன் இருந்தேன். அந்த நிகழ்வு தமிழ்நாட்டில் ஏற்படுத்திய எதிர்வினைகள் இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் பணியகமான பாலன் இல்லம் வந்ததும் அங்கு கட்சியின் பொறுப்பாளர்களான தோழர்கள் பலரைச் சந்தித்து நிலமையை விளக்கியதும் நன்கு நினைவில் இருக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகளின் மாணவர் அமைப்பினர் (ASFI - SFI) அன்று பலம் பொருந்தியவர்களாக செயல் வேகம் கொண்டவர்களாக இருந்தனர். அவ்வேளையில் சென்னை சட்டக்கல்லூரி, மாநிலக் கல்லூரி, பச்சையப்பாக் கல்லூரி, அரசினர் கலைக் கல்லூரி, தாம்பரம் கிறிஸ்தவக் கல்லுரி ஆகியவற்றின் விடுதிகளில் கூட்டங்கள் நடாத்தியதும், அக்கல்லூரிகளின் மாணவப் பிரதிநிதிகளைச் சந்தித்ததும் பின்னர் அவர்கள் எல்லோரும் தெருக்களில் இறங்கி ஊர்வலம் போனதும் ஒரு மக்கள் எழுச்சியாக மாறியதும் அரிய தருணங்கள் அவை.

அக்காலகட்டம் மீள உருவாகின்றதோ என்பதைத்தான் உங்கள் நடவடிக்கைகள் எமக்கு உணர்த்துகின்றன. கட்சிகளுக்கு வெளியேயான தமிழ்ப் படைப்பாளிகள் முன்னணியும், திருச்சி சட்டக்கல்லூரி மாணவர்களும் எமக்காகக் களமிறங்கி குரல் கொடுத்ததைப் பார்த்தபோது 1983 அரிய தருணங்கள்தான் நினைவில் எழுந்தன.

இன்று கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நீங்களும் ஏறத்தாழ அனைத்துக் கட்சியினரையும் இணைத்து நடத்தும் இந்த உண்ணாவிரதமும் அதற்குச் சான்றாக அமைகின்றது. அதுவும் காந்தியைக் குறியீடாக்கி அவரது பிறந்த நாளில் போராட்டத்தை நடாத்துகிறீர்கள். ஈழப்போராட்டமும் காந்திய சிந்தனையிலேயே வளர்ந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

02.

இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் 1930 ஆம் ஆண்டினை மையமிட்ட காலகட்டம் கவனத்தில் கொள்ளவேண்டியது ஒன்றாகும். 1948 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கிய சோல்பரி அரசியல் யாப்புக்கு முன்னரான டொனமூர் சீர்திருத்தம் அக்காலகட்டத்தில்தான் நடைமுறைக்கு வந்திருந்தது.

**இன்றைக்கு ஈழப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக உள்ளதற் கும், அதன் விடுதலை அவாவாக தமிழீழம் தனியரசாக வேண்டுமென் பதற்கும் 1983 ஆம் ஆண்டுதான் காரணம் என் பதல்ல. ஈழத்தமிழர் களுக்கான தாயகக் கோட்பாடு 1920களில் இருந்தே முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. 1977ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் வாக்களித் ததன் மூலம் தமிழர்க்கான தாயக விடுதலைக் கோட்பாடு மக்கள் ஆணை பெற்ற அரசியல் கோரிக்கையாக மாற்றப்பட்டது.**

டொனமூர் சீர்திருத்தத்தின்படி இனவாரி பிரதிநித்துவம் கை விடப்பட்டு பிரதேசவாரி பிரதிநித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் கல்வி கற்ற உயர்மட்ட மக்களுக்கு மட்டும் வழங் கப்பட்டிருந்த வாக்குரிமையை மாற்றி 21 வயதிற்கு மேற்றபட்ட ஆண் - பெண் இருபாலாருக்குமான சர்வசன வாக்குரிமை அறி முகமானது. டொனமூரின் இந்தச் சீர்திருத்தம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக பிரதேசவாரி பிரதிநித் துவம். இதனை எதிர்ப்பதில் யாழ்ப்பாண இளைஞர் பேரவை (Jaffna Youth Congress) முக்கிய பங்காற்றியது.

இந்த யாழ்ப்பாண இளைஞர் பேரவைத் தலைவர்களாக அறியப்பட்ட ஒறேற்றர் சுப்பிரமணியம், ஹண்டி பேரின்ப நாயகம், கு.நேசையா போன்றவர்கள் காந்திய சிந்தனையின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தனர். தங்கள் வாழ்வியலில், செயல்பாடுகளில் காந்திய வழிமுறையையே கடைப்பிடித்தனர். அத்தலைவர்கள் தங்கள் காந்தியப் பற்றை வெளிப்படுத்தும் வகையில் மகாத்மா காந்தியை இலங்கைக்கு - குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சிறப்பித்தனர்.

1970களில் நான் இளைஞனாக அரசியலில் ஈடுபடத் தொடங் கிய காலத்தில் திரு.கு.நேசையா அவர்களை பொது நிகழ் வுகளில் பல தடவைகளில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது. அவ்வேளைகளில் எல்லாம் அவரை நான் வெள்ளைக் கதராடையுடனேயே பார்த்திருக்கிறேன். அவரது ஆடை அவரை ஒரு காந்தியவாதியாகவே எங்களுக்கு அறிமுகப்படுத் தியிருந்தது. அவரது பேச்சுகளிலும் காந்தியமே மிகுந்திருந்தது.

1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான சா.ஜே.வே.செல்வநாயகம் ஈழத்துக் காந்தியென்ற அடைமொழியுடன் ஊடகங்களாலும் மக்களாலும் புகழப்பட்டார். சாத்வீக வழியிலான போராட்டத்தையே அவர் அரசியல் வாழ்வில் முன்மொழிந்தார். அதன் வழியையே கடைப்பிடித்தார். தனது தலைமையில் தனிச்சிங்களச் சட்டத் திற்கு எதிராக 1956 ஆம் ஆண்டில் நடாத்திய போராட்டத் தையும், 1961 ஆம் ஆண்டில் நடாத்திய சத்தியாகிரகப் போராட் டத்தையும், சாத்வீகப் போராட்டம் என்ற காந்திய வழிப்போராட் டம் என்றே அறிவித்தார்.

அதில் அவரும் அவரது சகாக்களும் வன்முறையாளர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர் இறக்கும் வரையில் தனது கொள்கை வழிப்போராட்டத்தை அவர் கைவிடவே இல்லை. ஆனால் அவர் இறப்பதற்கு முன்னால் தனது சாத்வீக நடவடிக் கைகள் எதும் வெற்றியளிக்காத நிலையில் 'கடவுள்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்' எனக் கூறிச்சென்றார்.

1972ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக தமிழர்களின் கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கிய திரு.ச.ஞானமூர்த்தி அவர்கள் காந்திய நெறிமுறையிலேயே வாழ்ந்து பணியாற் றினார். ஏறத்தாழ 1930களில் செயல்பட்ட தலைவர்களில் இருந்து ஈழத்துக் காந்தியெனப் புகழப்பட்ட சா.ஜே.வே. செல்வ நாயகம் அவர்கள் காலமான 1977 வரையில் இலங்கைத் தீவின் அரசியலரங்கில் செயற்பட்ட தமிழர் தலைவர்கள் அனைவரும் காந்திய நடைமுறைகளையே கடைப்பிடித்தனர்.

இன்னும் சிறப்பாக கூறுவதானால் 1987 ஆம் ஆண்டில் சிறீலங்கா - இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் நுழையும் வரையில் காந்தியும் காந்திய சிந்தனையும் செல்வாக்கும் நம்பிக்கையும் மிக்கதாகவே இலங்கைத் தமிழர்களிடம் காணப் பட்டது. ஈகைச்சுடர் திலீபன் அந்த நம்பிக்கையிலேயே உண்ணா நோன்பை முன்னெடுத்தான். ஆனால் அவன் இறக்க நேரிட்டது காந்தியின் பிம்பத்தை காந்திய நம்பிக்கையை இலங்கைத் தமிழ் மக்களின் நினைவுகளில் இருந்து உடைத் தெறிய வழிவகுத்து விட்டது என்பதே உண்மையாகும்.

'அபயக்கரம் கேட்டோர் மேலே
அகண்ட காலால் மிதிக்கலாச்சா
பஞ்சசீலமும் மறந்து போச்சா
காந்தி கைத்தடி துவக்குமாச்சா...'

என ஈழத்துக் கவிஞர்கள் தங்கள் ஏமாற்றத்தைப் பதிவு செய் தனர்.

1970களில் முகிழ்ந்த புதிய தலைமுறையினரே காந்திய வழி யின் போதாமையைக் கவனத்தில் கொண்டு மாற்றுவழி களைக் கண்டடைந்தனர். அம்மாற்று வழியும் பட்டறிவும்கூட வெளியில் இருந்து யாரும் கற்பித்தவை அல்ல. 1965களின் பின்னால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுச்சி பெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டங்களிலும் அதன் பட்டறிவிலும் இருந்தே மாற்றுவழி உருவாக்கம் பெற்றது.

1974 ஆம் ஆண்டில் களப்பலியான பொ.சிவகுமாரன் அம் மாற்று வழியின் முதல் பயணியாவான். மாற்று வழி கண்ட றியப்பட்டபோதும் காந்தியம் என்னும் அமைப்பும், அறவழிப் போராட்டக் குழுவும் காந்தியச் சிந்தனையில் செயற்பட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

03.

1983 ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலைதான் ஈழப் போராட்டத்தின் தொடக்கம் என்னும் கருத்து இன்றும் உங் களில் சிலருக்கு இருக்கின்றதோ என்று ஐயுறுகின்றேன். அண் மையில் இளம் படைப்பாளி சோமீதரனின் இயக்கத்தில் வெளி வந்த எரியும் நினைவுகள் என்னும் ஆவணப்படம் 1981 ஆம் ஆண்டு நிகழ்வுகள் பற்றிப் பேசுகின்றது. அதனை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்றே நம்புகின்றேன். யாழ்பாண நூலகம் எரிக்கப்பட்ட கதையை பேசும் அந்த ஆவணப்படம் அந்த ஆண்டைச் சுற்றியதான வேறு விடயங்களையும் பேசுகின்றது.

1983 ஆம் ஆண்டுக்கு நிகரான வன்கொடுமை இரண்டாண்டுகளுக்கு முன்னர் 1981 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது பற்றி காட்சி விபரணத்துடன் பேசுகின்றது. கட்டாயம் பாருங்கள். அதற்கும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்கொடுமை பற்றி நீங்கள் அறியாதிருக்கக்கூடும். தமிழ்நாட்டில் எங்களால் வெளியிடப்பட்ட 'லங்காராணி' நாவல் அந்தக் காலகட்டப் பின்னணியில் விரிகின்றது.

தற்போது அது மூன்றாவது பதிப்பாகத் தமிழ்நாட்டில் வெளியிடப் பட்டுள்ளது. இப்படியே பின்னுக்குப் பின்னுக்குச் செல்லச்செல்ல இந்த ஈழப்பிரச்சனையின் வேர்களை நீங்கள் நன்கு அறிய முடியும். அப்போதுதான் உங்களால் இவை வெறும் அதிகாரப் பரவலாக்கல் பிரச்சனை அல்லவென உணரமுடியும். ஆதலால் பின்நோக்கிய சில வரலாற்று விடயங்களை உங்கள் கவனத் திற்குக் கொண்டு வருகின்றேன்.

வெள்ளையரின் ஆட்சிக்காலத்தில் காலத்திற்குக் காலம் இங்கி லாந்திலிருந்து அனுப்பப்பட்ட அறிஞர்களைக் கொண்ட குழுக்கள் இலங்கைக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங் களைப் பரிந்துரை செய்தன. இதன்படி 1927 ஆம் ஆண்டில் 'டொனமூர்' என்பவரால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தத் தின்படி, பிரதேசவாரி பிரதிநித்துவம் ஒழிக்கப்பட்டு இனவாரி பிரதிநித் துவம் அறிமுகமானது. அதன்பயனாக 1936 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மந்திரி சபை 'தனிச் சிங்கள மந்திரிசபையாக' பரண் ஜெயதிலகாவால் அமைக்கப்பட்டது.

அப்போது பரண் ஜெயதிலகா கூறிய கூற்று, கடந்த நூற் றாண்டில் தமிழர்களுக்கெதிராக வெளியிடப்பட்ட இனவெறிக் கருத்துக்களில் மிகவும் மோசமானதும் முதன்மையானது மாகும். அவர் 'இவ்வமைச்சரவை ஏன் அமைக்கப் படுகிறதென் றால் சிறுபான்மையினராகிய உங்களின் (தமிழர்களின்) தயவின்றி எங்களால் (சிங்களவர்களால்) ஆட்சியமைக்க முடியும் எங்களுக்கும் திறமையுண்டு உங்களுக்கு உரிமை வேண்டுமானால் எங்களைக் கேட்டுத்தான் பெறவேண்டும் எனக் காட்டுவதற்குத்தான' எனும் கருத்துப்படக் கூறியுள்ளார்.

பின்னாட்களில் சிறீலங்காவின் பல தலைவர்களும் இத்தொனியில் கருத்துரைத்துள்ளனர். அண்மையில் காலமான சிறீலங்காவின் அதிபராக இருந்த டி.பி.விஜய துங்கா, சந்திரிகா குமார துங்கா போன்றவர்கள் இக்கருத் துக்களை மறுவுருவாக்கம் செய்துள்ளனர். கடந்த வாரத்தில் சிறீலங்காவின் இராணுவத் தளபதியும் அவற்றைப் பின்பற்றி திருவாய் மலர்ந்தருளி உள்ளார்.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற பத்து மாதத்திற்குள் 19.11. 1948 ஆம் ஆண்டில் பெரும்பான்மை அரசால் (சிறீலங்கா) கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் மூலம் தமிழருள் ஒரு பகுதியினரின் குடியுரிமை மறுக்கப்பட்டது. இதன் மூலம் அவர்கள் நாடற்றவர்களானார்கள். 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் 8 உறுப்பினரைப் பாராளுமன்றத்திற்கனுப்பிய மக்கள் இச்சட்டம் கொண்டு வந்ததின்பின் எந்த ஒரு உறுப் பினரையும் அனுப்ப இயலாத நிலை ஏற்பட்டது.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 'நாங்கள் வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாக்குவோம்' என அறிவித்தனர். அறிவித்ததின் மூலம் S.W.R.D பண்டாரநாயக்கா தலைமையிலான 'சிறீ லங்கா சுதந்திரக் கட்சி' க்கு சிங்களப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்ததின் மூலம் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். 1956 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்தவர்கள் சூன் மாதம் தாங்கள் அறிவித்தபடி 'சிங்களம் மட்டும்' எனும் சட்டத்தைக் கொண்டு வந்தனர்.

1958 ஆம் ஆண்டு சனவரியில் இன்னொரு சட்டம் இதே ஆட் சியினரால் கொண்டு வரப்பட்டது. அச்சட்டத்தின்படி வண் டிகளில் பொறிக்கப்படும் எண்ணின் முதலெழுத்து 'ஸ்ரீ' எனச் சிங்களத்தில் குறிப்பிடப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் ஈழ நிலப்பகுதியான கிழக்குப்பகுதியில் 'கல்லோயா அபிவிருத்தித் திட்டம்' எனும் பெயரில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதன் மூலம் தமிழரின் நிலப்பகுதியைப் பறிக்கும் படுபாதகமான திட்டம் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஈழப்பகுதிகளில் அரசு உதவியுடன் சிங்களவர் குடியேற்றப்பட்டனர்.

மேற்படி நடவடிக்கைகள் காரணமாகத் தமிழருக்கும் சிங்கள வருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு 1958 ஆம் ஆண்டில் மிகப்பெரும் கலவரமாக உருவானது. பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்களின் மார்புகளில், தொடைகளில் சிங்கள 'சிறீ' (ஸ்ரீ) குத்தப்பட்டது. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. சிறீலங் காவிலிருந்து தமிழர்கள் ஈழத்தை நோக்கி ஓடி வந்தார்கள். சிறீலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து தமிழர்கள் கப்பலில் அனுப்பப்பட்டனர்.

நீங்கள் அறிந்திருக்கும் 1983 ஆம் ஆண்டில் மட்டுமல்ல 1977 இல், 1958 இல் எல்லாம் தமிழர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப் பாணம் திருக்கோணமலை ஆகிய நகரங்களுக்கு அனுப்பப் பட்டனர். அப்போது ஈழத்தமிழர்களின் தாயகம் எதுவாக இருக்க முடியும். இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தானே.

இன்றைக்கு ஈழப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக உள்ளதற் கும், அதன் விடுதலை அவாவாக தமிழீழம் தனியரசாக வேண்டுமென்பதற்கும் 1983 ஆம் ஆண்டுதான் காரணம் என் பதல்ல. ஈழத்தமிழர்களுக்கான தாயகக் கோட்பாடு 1920களில் இருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 1977ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் வாக்களித்ததன் மூலம் தமிழர்க்கான தாயக விடுதலைக் கோட்பாடு மக்கள் ஆணை பெற்ற அரசியல் கோரிக்கையாக மாற்றப்பட்டது.

அதுவே இன்றைய தலைமுறையினரிடம் அது கைமாற்றப் பட்டிருக்கின்றது என்பதே உண்மையாகும். அதனையே 1984 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது போராளிகளும் மிதவாத தலைவர்களும் இணைந்து நான்கு அம்சம் கொண்ட கோரிக்கையாக முன்வைத்தனர். 1970 களின் பின்னால் முகிழ்ந்த இப்போராளித் தலைமுறை காந் தியத்தில் நம்பிக்கை இழந்து ஆயுத வழிப் போராட்டத்தில் தங்கள் முன்னோரின் கோரிக்கைக்காக போராடி வருகின் றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அப்போராட்டத்திற்கு தலைமை அளித்து போராட்டத்தை நெறிப்படுத்தி வருகிறார்கள். ஈழப் போரட்டத்தின் வெற்றியிலேயே உலகத் தமிழினத்தின் வாழ்



வும் வரலாறும் தங்கியுள்ளது. ஏனெனில் வரலாறு என்பதே வெற்றி பெற்றவர்களுக்குத்தான்.

## நண்பர்களே,

ஈழப்போராட்டத்திற்கு முன்னுதாரங்கள் எதுவுமில்லை. உல கின் எந்த வல்லாண்மையாளரின் நலன்களுக்காகவும் இப் போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை. எங்கள் கால்களில் எங்கள் பலத்திலேயே நாங்கள் தங்கி இருக்கிறோம். நாங்கள் விடுதலை அவாவும், மனித நேயத்தை முன்னிறுத்தும், மற்ற வர்கள் உரிமையை மதிக்கும், நட்பை தோழமையையே தேடு கின்றோம். உங்களிடமும் அதனையே எதிர்பார்க்கிறோம். உங்களின் தோளணைவு வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

நட்புடனும் தோழமையுடனும்
கி.பி.அரவிந்தன்.

(நன்றி: தமிழ்நாதம் - 2008)

# தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது அதற்கெதிராக நாம் குரல்கொடுக்க வேண்டும்!

**அமெரிக்க பொது உறவுகளுக்கான துணை இராஜாங்க செயலாளர் எலிசபெத் எம். அலன்**

19.02.2024

இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப் படுத்தும்போது, அதற்கெதிராக நாம் குரல்கொடுக்க வேண் டுமென பொது உறவுகளுக்கான துணை இராஜாங்க செயலாளர் எலிசபெத் அலன் தெரவித்தார்.

இலங்கையின் பாராளுமன்றம் ஜனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது என்றும் குறிப்பிட்டார்.

"உலகளாவிய ஊடக பரப்பும் ஜனநாயகத்தின் மீதான அதன் தாக்கமும்"என்ற தொனிப்பொருளில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் ஏற்பாட்டில் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.






இங்கு மேலும் உரையாற்றிய அமெரிக்க பொது இராஜதந் திரத்திற்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் ,

இன்று எல்லோருடனும் இங்கு இருப்பது அருமையாக இருக கிறது. மேலும் தூதுவர் சங் அவர்களே, இலங்கையில் அமெரிக்க மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்களது தலை மைத்துவத்திற்கு நன்றி.




இலங்கை பத்திரிகை நிறுவனத்திற்கு நன்றி, நான் இன்று இங்கு இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊடகவியலின் கைவினைப் பணியில் நீங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பானது மிகவும் ஊக்கமளிக்கிறது.

இதை அறிந்து கொள்ளுங்கள்: நீங்கள் மேற்கொள்ளும் அபார மான பணியை அமெரிக்கத் தூதரகம் முழுமையாக ஆதரிக் கிறது. நிச்சயமாக, ஒரு செய்தி தொடர்பாக அவ்வப்போது நாங்கள் முட்டிக் கொண்டாலும், அவையனைத்தையும் தாண்டி, நாங்கள் உங்களது மிகப்பெரிய ரசிகர்கள்.

சுதந்திரமாகவும் அச்சமின்றியும் ஊடகவியலைத் தொடர் வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு என நாங்கள் நம்புவதால், உங்களது திறமைகளை கூர்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட டங்களில் நாங்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

ஊடகவியலாளர்கள் நிரம்பிய ஒரு அறையில் நான் நிற்கையில், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர் களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாத்ததற் காகவும், அனைத்து குடிமக்களும் தங்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் வெளிப்படுத்தும் உரிமையை அனுபவிப்பதை உறுதிசெய் ததற்காகவும் நான் உங்களுக்கு நன்றிகூற விரும்புகிறேன்.

கடினமான நேரங்களிலும், தொடர்ந்து முன்னோக்கிச் செல் வதை நீங்கள் தொடர்வதுடன் கடினமான கேள்விகளையும் கேட்கிறீர்கள். உண்மையைத் தேடுவதற்கும், உயரமான முகடுகளிலிருந்து அதை உரத்துக் கூறுவதற்குமான உங்களது அர்ப்பணிப்பானது ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. உங்களது பணியினை நான் உண்மை யிலேயே பாராட்டுகிறேன்.

ஒரு ஜனநாயகத்தில் ஊடகங்களின் பங்கு பற்றிய இன்றைய தலைப்புடன் தொடர்புடையதென நான் கருதும் ஒரு கதை யினைக்கூறி எனது உரையினைத் தொடங்குவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

ஒரு நூற்றாண்டிற்கு முன்பு, ஊழலை அம்பலப்படுத்தும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்த பத்திரிகையாளர்களைக் குறிப் பிடுவதற்கு "மக்ரேக்கர்" என்ற சொற்பதத்தினை அமெரிக்க ஊடகங்கள் உருவாக்கின.

இந்தச் சொற்பதம், இந்த ஊடகவியலாளர்களை வெறும் "வதந்தி பரப்புபவர்கள்" என்று முத்திரை குத்தி சற்றே எதிர் மறையான பொருளை வெளிப்படுத்தினாலும், இன்று அவர் களை புலனாய்வு ஊடகவியலின் முன்னோடிகள் என நாம் கௌரவிக்கின்றோம்.

அமெரிக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் அரசியல் சீர்திருத்த காலமான முற்போக்கு சகாப்தத்தை உருவாக் குவதில் இந்த மக்ரேக்கர்கள் ஒரு முக்கிய பங்கினை வகித் தனர்.

ஊழலை வெளிச்சம் போட்டுக் காட்டி பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தத்திற்கான நாடு தழுவிய ஒரு கோரிக்கையினைத் தூண்டிய பணியினை மேற்கொண்ட லிங்கன் ஸ்டெஃபென்ஸ் போன்ற நபர்களைக் குறிப்பிட்டு சமூகத்தின் குறைபாடுகளில் அவர்கள் கவனம் செலுத்துவதை விமர்சித்து ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் கூட அவர்களை "மக்ரேக்கர்கள்" என்று குறிப்பிட்டார்.

1904 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்டெஃபென்ஸின் புத்தக மான 'த ஷேம் ஒஃப் த சிட்டீஸ்', அரசியல் தலைவர்கள், வணி கங்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு இடையி லான மோசமான தொடர்புகளை எடுத்துக்காட்டி அமெரிக்க நகரங்களில் நிலவிய ஊழலை வெளிக்கொணர்ந்ததற்காக அவரைப் புகழ் பெறச்செய்தது.

அரசு மற்றும் பெருநிறுவனங்கள் என்பன பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதன் அவசரத் தேவை குறித்து விமர் சன ரீதியான விழிப்புணர்வை அவரது அச்சமற்ற ஊடகவியல் ஏற்படுத்தியது.

அரசாங்கத்தின் ஒரு மக்கள் தொடர்பு அதிகாரியாக ஸ்டெஃ பென்ஸ் செயற்படவில்லை; எவ்வளவு விரும்பத்தகாததாக இருந்தபோதும் உண்மையை வெளிக்கொணர்வதே அவரது பங்காக அமைந்தது.

ஸ்டெஃபென்ஸ் முன்வைத்த அப்பட்டமான உண்மைகளுக்கு முகங்கொடுத்த அமெரிக்க அதிகாரிகளும் பொதுமக்களும் ஒரு முக்கிய கேள்வியை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்:

'இதுபோன்ற நாடாகவா நாங்கள் இருக்க விரும்புகிறோம்?' என்ற அந்தக் கேள்விக்கு இல்லை என்ற பதில் ஒருமித்த பேரொலியாக வெளிப்பட்டது.

ஸ்டெஃபென்ஸின் பணியானது தவறுகளை மட்டும் அம்பலப் படுத்தவில்லை; அது சீர்திருத்தத்திற்கான நாடு தழுவிய ஒரு கோரிக்கையினைத் தூண்டியதுடன் அதிகாரமானது பொறுப்புக் கூறலுக்குட்பட்டிருப்பதை உறுதி செய்வதில் புலனாய்வு ஊடக வியல் வகிக்கும் முக்கிய பங்கு தொடர்பான ஒரு உரை யாடலைப் பேணிவளர்ப்பதிலும் ஒரு இன்றியமையாத பங் கினை அது வகித்தது.

பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன



அடிப்படை மனித உரிமைகள் மட்டுமன்றி, ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் அவை முக்கிய பங்காற்றுகின்றன என்பதையும் இந்தக் கதை எடுத்துக்காட்டுகிறது.

உலகளாவிய ஊடக வெளியானது எவ்வாறு ஜனநாயகத்தை ஆதரித்து அமைதியான, நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை வளர்க்கிறது என்பது பற்றி நான் கூற விரும்பும் முக்கிய கருத்திற்கு இது என்னை இட்டுச் செல்கிறது.

எனது மனதில், அந்தத்தொடர்பு தெளிவாக உள்ளது: ஒரு அரசாங்கம் தனது குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை கட்டுப்படுத்தும் போது, அந்நாட்டின் எதிர்காலமும் அபிவிருத்தியும் இயல்பாகவே பாதிக்கப்படும்.

உலகளாவிய ரீதியில், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான தீவிரமான மற்றும் அதிகரித்து வரும் சவால்களை நாம் காண்கிறோம். நிகழ்நிலையிலும் அகல்நிலையிலும் பத்திரிகை சுதந்திரத்திற்காக வாதிட்டு, உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

துரதிஷ்டவசமாக, இந்த அத்தியாவசிய சுதந்திரங்கள் உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இலங்கையில் எழுப்பப்பட்ட கரிசனைகளும் இதிலடங்கும்.

இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது, அதற்கெதிராக நாம் பேச வேண்டும்.

இலங்கையின் பாராளுமன்றம் ஜனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான வாதங்கள் முன்வைக்கப்படுவது ஒரு பொதுவான விடயமாகும். அரசாங்கங்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதையும் பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ள ஊடகங்கள் பக்கச்சார்பானவை என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கட்டுப்பாடுகளற்ற நிலையில் கருத்துச் சுதந்திரமானது தவறான தகவல்கள் பரவுவதை ஊக்குவிக்கலாமென ஏனையவர்கள் கவலைப்படுகிறார்கள். கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைகள் பதற்றத்தைத் தூண்டி பாதுகாப்பு நிலைமைகளை பாதிப்பிற்குட்படுத்தலாமென வேறு சிலர் வாதிடுகின்றனர்.

ஊழல், வன்முறை மற்றும் அரசியல் முரண்பாடுகள் தொடர்பான தொடர்ச்சியான அறிக்கைகள் ஒரு நாட்டின் நற்பெயரைக் கெடுத்து, முதலீட்டு முயற்சிகளை பின்னடைவிற்குட்படுத்தி நாட்டின் அபிவிருத்தியைத் தடைசெய்யலாமென்ற கரிசனைகளும் காணப்படுகின்றன.

இருப்பினும் ஊடகங்களின் பக்கச்சார்பானது, தலைவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் பாதுகாவலர்களாக செயற்பட்டு, பொதுமக்களின் நலன்களை நோக்கி சாய்தல் வேண்டும். இலங்கைக்கும், அமெரிக்காவிற்கும், முழு உலகிற்கும் இக்கொள்கை பொருத்தமானதாகும்.

பெரும்பாலும் "போலிச் செய்திகள்" அல்லது "பக்கச்சார்பான ஊடகவியல்" என முத்திரை குத்தப்படும் எதிர்மறையான பத்திரிகைகளால் ஏற்படும் சவாலானது ஒரு புதிய விடயமல்ல.

பலதலைமுறைகளாக, அரசாங்கங்களும் ஊடகங்களும் ஒரு சிக்கலான, சில சமயங்களில் விரோதமான உறவுகளினூடே பயணித்துள்ளன.

இந்த இயக்கவியலானது எந்தவொரு நாட்டிற்கும் தனித்துவமான ஒரு விடயமல்ல உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில், இரு பிரதான அரசியல் கட்சிகளையும் சேர்ந்த ஜனாதிபதிகள் பத்திரிகையாளர்களுடன் முரண்படுவதில் தங்கள் பங்கை அனுபவித்திருக்கிறார்கள். ஜனநாயக சமூகங்களின் ஒரு தனிச் சிறப்பான இப்பதற்றமானது வெளிப்படைத்தன்மையை பேணி வளர்ப்பதிலும் செயல்விளைவுள்ள நிர்வாகத்தை ஊக்குவிப்பதிலும் ஒரு இன்றியமையாத பங்கினை வகிக்கிறது.

விசேடமாக தலைவர்கள் அவர்களது நடவடிக்கைகள் தவறாக சித்தரிக்கப்படுவதாக உணரும்போது, தவறான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்து அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் சூடான கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதானது ஒரு வழக்கமான காட்சியாகும்.

அரசாங்கத்தின் சாதனைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், கொள்கைகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதும், உண்மைகளை உள்ளபடியே மக்களுக்கு வழங்குவதும் பத்திரிகைகளின் கடமையாகும்.

பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது மட்டுமன்றி இந்த வெளிப்படைத்தன்மையானது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பதால் தேசத்தையும் பலப்படுத்துகிறது.

அத்துடன் குரல்களை அடக்குவதானது விடயங்களை மேலும் சிக்கலாக்குகிறது. சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை மறைக்க முயற்சிப்பது உடைந்த ஒரு கருவியை சரி செய்வதற்குப் பதிலாக அதை மறைப்பதற்குச் சமமாகும். உண்மையான முன்னேற்றம் என்பது ஒன்றிணைந்த உரையாடல்களிலிருந்து வருகிறது, அது பொது உரையாடலின் குழப்பத்தைத் தழுவுவதாக இருந்தபோதும் கூட. "நல்ல யோசனைகள் இறப்பதற்காகச் செல்லுமிடம்" என அழைக்கப்படும்

படைப்புச் சிந்தனையாளர்களுக்கான ஒரு மையமான கொழும்பில் உள்ள Idea Hell இற்கு நான் மேற்கொண்ட சமீபத்திய விஜயத்தின் போது இவ்விடயம் தெளிவாகத் தெரிந்தது.

படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் அச்சமின்றி புதிய விடயங்களை முயன்று பார்ப்பதற்கும் புத்தாக்கங்களை உருவாக்குவதற்குமான சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தீவிரமான தேவையினை அங்கிருந்த இளம், புத்தாக்கசிந்தனையுடையவர்களுடனான எனது தொடர்பாடல் அடிக்கோடிட்டுக் காட்டியது. ஆம், சில நல்ல சிந்தனைகள் இறப்பதுண்டு, எனினும் படைப்பாளிகள் சிந்திப்பதற்கும் முயற்சி செய்வதற்கும் மற்றும் தோல்வியடைவதற்கும் கூட அவர்களுக்குத் தேவையான சுதந்திரம் காணப்படுதல் அவசியமாகும். அவ்வாறுதான் நாம் முன்னேற்றமடைகிறோம்.

கருத்துச்சுதந்திரத்தின் மீதான மிகவும் பரந்த மற்றும் தெளிவற்ற கட்டுப்பாடுகள் படைப்பாற்றலை மூச்சுத்திணறலுக்குட்படுத்தி, புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைத் தூண்டக்கூடிய சாத்தியமான முன்னேற்றங்களை சமுதாயத்திடமிருந்து பறித்துவிடும்.

தணிக்கை செய்யப்படும் ஒரு நிலையானது புத்தாக்கத்தினைத் தடுப்பது மட்டுமன்றி, கடுமையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நவீன தீர்வுகளைக் கையாளும் சமூகத்தின் உற்சாகத்தினையும் அது தளர்வடையச் செய்கிறது.

ஊடகவியலை நோக்கி உங்களை ஈர்த்த அந்த ஆரம்ப தீப்பொறியைப் பற்றி சிந்திக்குமாறு நான் உங்களிடம் கேட்கிறேன். அது செல்வச் செழிப்பு அல்லது புகழின் கவர்ச்சியாக இருந்திருக்கும் என்பது சந்தேகமே அது அனேகமாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்வதற்குமான ஒரு உத்வேகமாகவே அமைந்திருக்கும். இவை உங்களை இயக்கும் சக்திகளாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், விடாமுயற்சியுடன் செயற்படுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களது அர்ப்பணிப்பு, உங்களது உரிமைகள் மற்றும் உங்களது சுதந்திரம் என்பன இத்தேசத்தின் தற்போதைய வளர்ச்சி மற்றும் செழிப்பிற்கு மிகவும் முக்கியமானதாகும்.

இதைக் கருத்திற்கொள்ளுங்கள்: உங்களில், நவீனகால லிங்கன் ஸ்டெஃபென்ஸாக உருவெடுக்கப்போவது யார்? இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் கதைகளை எழுதப்போவது யார்? அந்த நபர் இன்று இப்போது எம்மிடையே இருக்கலாம்.

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் மற்றும் கட்டுப்படுத்தப்படாத கருத்துப் பரிமாற்றம் ஆகிய விடயங்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு அவர் தயாராக இருக்கலாம். சுதந்திரமான பத்திரிகை என்பது இலங்கையின் ஒரு எதிரி அல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். ஒரு மீண்டெழும் தன்மையுள்ள மற்றும் செழிப்பான சமுதாயத்திற்கு வழி வகுக்கும் அது இலங்கையின் மிகப்பெரிய நண்பர்களுள் ஒன்றாகும் என்று மேலும் தெரிவித்தார்.




அமெரிக்கத் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை நேரத்துக்காக போராடி வெற்றி பெற்ற நாளை நினைவு கூரவே மே நாள் அறிமுகமானது. அது அன்று உலகத்தின ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் ஒன்றாகியுள்ளது. அதேபோலவே, அதே அமெரிக்கப் பெண் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலைகேட்டும், ஆண்களுக்கு சமமான ஊதியத்தைக் கேட்டும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள் ஆர்ப்பாட்ட அணி வகுப்புகளையும் நடத்தினார்கள். அமெரிக்கப் புடவை ஆலைப்பெண் தொழிலாளர்களே இதில் முன்னணி வகுத்தார்கள். இது நடந்து 1857 ம் ஆண்டு மார்ச் 08ம் திகதியிலாகும்.

அமெரிக்காவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களின் போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களது போராட்ட வரலாறுகளும் மறைக்கப்பட்டன.

ஆனால் வரலாற்றின் உண்மைத் தோற்றத்தை யாராலும் மறைக்க முடியாது உலக சமதர்ம அனைத்துலக பெண் கள் அமைப்பு என்றோர் பெண் விடுதலை அமைப்பு 1907ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இது இன்று சமதர்ம அனைத்துலக அமைப்பின் (Socialist International) சகோ தரத்துவ அமைப்பாக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்ற பெயரில் இன்றும் இயங்கிவருகின்றது.

இவ்வமைப்பின் 2வது மகாநாடு 1910ம் ஆண்டு டென்மார்க்கில் கோபன் ஹேகன் நகரில் கூடியது. முதலாளித்துவவாதிகளால் மறைக்கப்பட்ட வரலாற்றை இவர்கள் வெளிக்கொணர்ந்தார்கள். அமெரிக்க பெண் தொழிலாளர்களின் போராட்ட எழுச்சி நாளான மார்ச் 08ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக பிரகடனம் செய்தார்கள். ஜேர்மனிய பொதுவுடமைக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கினே இத் தீர்மானத்தை முன்வைத்தவராகும்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**